# இறை வழிபாட்டு நூல்

# BOOK OF WORSHIP

இலங்கை மெதடிஸ்த திருஅவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வழிபாட்டு நூல்

# BOOK OF WORSHIP

இலங்கை மெதடிஸ்த திருஅவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபதிப்பு
1997

© உவெஸ்லி அச்சகம்

சகல உரிமைகளும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

"அருணா பதிப்பகம்"
மொறட்டுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவனிப்புக்குரியவை

1. அவையினர் வழிபாட்டுக்கு வரும்போது தங்கள் திருமறை, பாட்டுப் புத்தகம், இறை வழிபாட்டு நூல் முதலியவற்றைக் கொண்டு வருவது அவசியம்.

2. வழிபாடு தொடங்கு முன்னரே, ஆலயத்திற்குள் வந்து விடுவது நன்று. வழிபாடு தொடங்கும் வரை, திருமறை வாசிப்பில் அல்லது தனி மன்றாட்டில் நேரத்தைக் கழிப்பது நலம்.

3. திருமறை வருகிறவர்கள் மன்றாட்டில் இருக்கும் ஒருவருக்கு, இன்னுமொருவர் தடையாக இருத்தல் ஆகாது.

4. பிந்தி வருகிறவர்கள் மன்றாட்டு நேரத்தைத் தவிர்த்து, பாட்டுப்பாடப்படும் பொழுது உட்பிரவேசிப்பதே தகுதி.

5. ஒவ்வொரு மன்றாட்டு முடிவிலும் " ஆமென்" என அவையினர் சொல்ல வேண்டியது அவசியம்.

6. ஆலயத்திற்குள் இருக்கும் வேளை, கால்மேல் கால் போட்டு இருத்தலை தவிர்க்க வேண்டும்.

7. காணிக்கை நேரத்தில் எழுந்து நின்று அவற்றைப் படைத்தலே நன்று.

8. வழிபாடு முடிந்தபின், ஒவ்வொருவரும் தனி விண்ணப்பம் செய்து செல்லவேண்டும். வழிபாட்டை நடத்து பவர்கள் வெளியேறிய பின்பே, அவையினர் ஆலயத்தைவிட்டு வெளியேறுவது முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. ஞாயிறு வழிபாடு கர்த்தருடைய திருவிருந்து 1
2. திருக்கட்டளைகள் 20
3. திருவிருந்து ஞாயிறு வழிபாடு ஒரு மாற்று ஒழுங்கு 23
4. இரண்டாவது ஞாயிறு வழிபாடு 39
5. மூன்றாவது ஞாயிறு வழிபாடு 48
6. நான்காவது ஞாயிறு வழிபாடு 59
7. ஐந்தாவது ஞாயிறு வழிபாடு 72
8. திருமண வழிபாடு 82
9. ஏற்கெனவே திருமணம் செய்தவர்களுக்கான ஆசீர்வாத வழிபாடு 96
10. குழந்தை திருமுழுக்கு வழிபாடு 107
11. வளர்ந்தோர் திருமுழுக்கு வழிபாடு 120
12. திடப்படுத்தல் வழிபாடு 133
13. திடப்படுத்தல் வழிபாடு ஒரு மாற்று ஒழுங்கு 144
14. உடன்படிக்கை வழிபாடு 153
15. இறந்த உடல் அடக்கம் அல்லது எரித்தல் வழிபாடு 167
16. உள்ஞர் அருளுரையாளர்களை ஏற்றுக்கொள்ளும் வழிபாடு 180
17. ஓய்வுநாட்பாடசாலை ஆசிரியர் அர்ப்பண வழிபாடு 189
18. சங்கீதங்கள் - மாறி மாறி வாசிப்பதற்கு 198
19. நிச்சயதார்த்த மோதிரம் மாற்றும் ஆராதனை 223



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு வழிபாட்டு ஒழுங்கு
# கர்த்தருடைய திருவிருந்து

## ஆயத்தம்

1.பாட்டு(அல்லது தேவாரம்/கூட்டுப்பிரார்த்தனை)

2.திரு: எல்லாம் வல்ல கடவுளே, நீர் எங்கள் இதயங்களையும்அவற்றின் சிந்தனை களையும் அறிந்திருக்கிறீர். உமக்கு மறைகொருளாய் இருப்பது ஒன்றுமே யில்லை. உமது தூய ஆவியானவராலே எங்கள் இருதங்களைச் சுத்திகரியும். நாங்கள் உம்மைப் பரிபூரணமாய் நேசிக்கவும், உமது திருநாமத்திற்குக் கனமும் மகிமையும் உண்டாகும்படி நடக்கவும், தூய ஆவியானவராலே அருள்புரிய வேண்டுமென்று, ஆண்டவராகி கொள்ளுகிறோம்.

ஆமென்.

3. திருக்கட்டளைகள் (வாசிக்கப்பட வேண்டுமேயாகில் 20-22ஆம் பார்க்கவும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.திரு: நமது பாவங்களை அறிக்கை செய்வோமாக (எல்லோரும் சேர்ந்து சொல்லுதல்)

எல்லாம் வல்ல கடவுளே, பரம பிதாவே, நாங்கள் உமக்கு விரோதமாகவும், எங்கள் சிந்தை, சொல், செயல், மூலம் பாவம் செய்தோம்.

அறிவீனம், பெலவீனம் மூலமாக மட்டு மல்ல,வேண்டுமென்றும் நன்மை யானதைச் செய்யாமல்,

தீமையானவற்றைச் செய்தோம். நாங்கள் செய்த பாவங்களை உணர்ந்து, அவற்றிற்காக உண்மையாகவே வருந்துகிறோம். எங்களுக்காக மரித்த உமது குமாரன் இயேசுகிறிஸ்துவின் மூலம், கடந்துபோன யாவற்றையும் மன்னித்தருளும். புதிய வாழ்வில் நாங்கள் உமக்குப் பணி புரியவும், உமது நாம மகிமை விளங்கும்படி செய்யவும், உமது அருள்தாரும். ஆமென்.

திரு : பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு இவ்வுலகிற்கு வந்தார்.

கிருபையின் வாக்கைக் கேளுங்கள் : உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

அவை : ஆமென். கடவுளுக்கே துதி உண்டாவதாக.

6. அந்நாளுக்குரிய சுருக்க ஜெபம் அல்லது வேறு ஜெபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாட்டுஅல்லது பின்வரும்உன்னதப் பாட்டு (எல்லாரும் சேர்ந்துசொல்லு வோமாக)

உன்னதத்திலே கடவுளுக்கு
மகிமை,பூமியில்அவர் மக்கள் மேல்
சமாதானம். ஆண்டவராகிய கடவுளே,
வானத்தின் அரசே, சருவ
வல்லமையுள்ள கடவுளும்
பிதாவுமானவரே,
நாங்கள் உம்மையே வணங்கின்றோம்,
உம்மையே துதிக்கின்றோம்,
உமது மகிமையை நினைவு கூர்ந்து
உம்மையே புகழுகின்றோம்.
ஆண்டராகிய இயேசு கிறிஸ்துவே
பிதாவின் ஒரேபேறான மைந்தரே,
ஆண்டவராகிய கடவுளே,
கடவுளின் ஆட்டுக்குட்டியே,
உலகத்தின் பாவங்களை நிவாரணம்
பண்ணுகின்றவரே:
எங்களுக்கு இரங்கும்;
பிதாவின் வலது பக்கத்தில்
வீற்றிருக்கின்றவரே:
எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.
நீர் ஒருவரே பரிசுத்தர்,
நீர் ஒருவரே ஆண்டவர்,
நீர் ஒருவரே உன்னதமானவர்,
இயேசு கிறிஸ்துவே, தூய
ஆவியானவருடன், பிதாவாகிய கடவுளின்
மகிமையானவர்.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவசனப் பணி

8. வேத வாசிப்பு - பழைய ஏற்பாடு
அல்லது நிருபம் அல்லது இரண்டும்.

9. பாட்டு

10. வேத வாசிப்பு - நற்செய்தி
(வாசிப்பு அறிவிக்கப்பட்டவுடன்
அவையினர் சொல்ல வேண்டியது)
நமது இரட்சகராகிய கிறிஸ்துவுக்கே
மகிமை.

11. அருளுரை

12. மன்றாட்டு ஜெபம (பின்வரும் ஜெபம்
அல்லது வேறு ஜெபம்)
திரு : ஜெபம் செய்வோமாக.
பிதாவாகிய கடவுளே, மனுமக்களின் மீட்பிற்காக எங்கள் விண்ணப்பங்களை ஏறெடுக்க உமது ஆவியின் பெலனைத் தாரும்.
உலகெங்கிலுமுள்ள திருஅவைக்காக .... எங்கள் திரு அவைக்காக, இதன் அங்கத்தவர்களுக்கா ..... உம்மிடம் வருகிறோம். உமது ஊழியத்திற்கும், திருப்பணிக்கும்; உமது தூய ஆவியானவராலே நாங்கள் விசுவாசத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையிலும் புதுப்பிக்கப்பட அநுக்கிரகித்தருளும்.

ஆண்டவரே, உமது கருணையில்.

அவை : எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

திரு : உலக மக்களுக்காகவும், அவர்களை வழி நடத்துவர்களுக்காவும் ... உம்மிடம் வருகிறோம்; நீதி, விடுதலை, சமாதானம் ஆகியவற்றிற்காக உலகத் தலைவர்கள் உழைக்கவேண்டுமென ஜெபிக்கிறோம்.

அவை : எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

திரு : எங்கள் நாட்டிற்காக உம்மிடம் வருகிறோம். எங்கள் நாட்டில் ஆட்சியும், அதிகாரமும், செல்வாக்கும் செலுத்தும் அனைவரும் ....; ஞானம், உண்மை, இரக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் சேவை செய்வதற்கு வழி நடத்தப்பட வேண்டுமென ஜெபிக்கிறோம். ஆண்டவரே உமது கருணையில்.

அவை : எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

திரு : நாங்கள் தற்போது வசிக்கும், தொழில் புரியும் சூழலிலுள்ள சகலருக்காகவும் உம்மிடம் வருகிறோம். நீர் எமக்களித்துள்ள எல்லா வரங்களையும்; நாங்கள் பிறர் வாழ்வில் மகிழ்ச்சி, பயன், திருப்தி உண்டாக்குவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகப்படுத்தச்செய்தருளும். நாங்கள் ஒருமனப்பட்டவர்களாய் உமது படைப்பின் அழகில் களிகூர அநுக்கிரகித்தருளும்.
ஆண்டவரே உமது கருணையில்.

அவை : எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

திரு : துயர், குறை, நோய், மனக்கலக்கம் ஆகியவற்றால் அல்லறபடும் ஒவ்வொருவரையும் உமது சமூகத்தில் நினைவு கூருகின்றோம்.
தனிமையில் தவிப்போர் ......., கொடுமையில் வாடுவோர் ..., அநீதியில் அவதியுறுவோர் ..., கவனிப்பாரற்ற நிலையிலுள்ளோர் ..., இன-மத-மொழி-பொருளாதார அடிப்படையில் துன்புறுத்தப்படுவோர் ..., அனைவரையும் உமது சமுகத்தில் நினைவு கூருகின்றோம்.
தங்கள் பெலவீனத்தில் உமது பெலனையும் நம்பிக்கையின்மையில் உமது நம்பிக்கையையும், அநுபவித்து அறிந்து கொள்ள அருள் செய்தாருளும்.
ஆண்டவரே உமது கருணையில்.

அவை : எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

திரு : பிதாவே, பூலோகத்திலும் பரலோகத்திலும் உம்மோடு இணைந்தவர்களாய், நாம் ஒரே குடும்பமாய் இருக்கின்றோம். உமக்குள் மரித்துப்போன யாவரையும் ..., விசேஷமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் மூலம் கிறிஸ்துவின் கிருபையையெமக்கு எடுத்துக்காட்டியவர்களையும், உமது முன்னிலையில் நினைவு கூர்ந்து உம்மைத் துதிக்கின்றோம். உமது பரிசுத்தவான்களின் முன்மாதிரியைப் பின்பற்றி நாங்கள் நடக்கவும், அவர்களுடன் சேர்ந்து நித்திய களிப்பின் பூரணத்துவத்தை நாங்களும் அடையவும், உதவியருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்ளுகின்றோம். ஆமென்.

13. கர்த்தருடைய ஜெபம் - எல்லாரும்.

அ) விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் பிதாவே
உமது திருப்பெயர் தூயதெனப்
போற்றப்படுவதாக;
உமது திருவுளம் விண்ணுலகில்
நிறைவேறுவது போல, மண்ணுலகிலும்
நிறைவேறுவதாக.
அன்றன்று எங்களுக்குத் தந்தருளும்.
இன்று எங்களுக்கத் தந்தருளும்.
எங்களுக்குத் தீமை செய்தவர்களை
நாங்கள் மன்னிக்கிறது போல
நாங்கள் செய்த தீமைகளை
எங்களுக்கு மன்னித்தருளும்
எங்களை சோதனைக்கு
உட்படுத்தாதேயும்;தீமையினின்று
எங்களை விடுவித்தருளும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியும், வல்லமையும் மாட்சிமையும்
என்றென்றும் உம்முடையவையே.

ஆமென

(அல்லது)

ஆ) பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே
உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக.
உம்முடைய ராஜ்யம் வருவதாக,
உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே
செய்யப்படுகிறது போலப்
பூமியிலேயும் செய்யாப்படுவதாக.
எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை
இன்று எங்களுக்குத் தாரும்.
எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள்
மன்னிக்கிறது போல
எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,
தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்
ராஜ்யமும், வல்லமையும், மகிமையும்,
என்றென்றைக்கும் உம்முடையவைகளே.

ஆமென

14. பின்வரும் ஆசீர்வாதத்திற்குப்பின் வெளியேற விரும்புபவர்கள் வெளியேறலாம்.

திரு : ஆண்டவராகிய இயேசுவின் கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக. ஆமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தருடைய திருவிருந்து

15. சமாதானம் :

திரு : ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு எப்பொழுதும் இருப்பதாக.

அவை : அது உம்மோடும் இருப்பதாக.

16. அவையினர் பின்வரும் வார்த்தைகளை சொல்லி, ஒருவருக்கொருவர் சமாதானம் வழங்கலாம்.

'ஆண்டவரின் சமாதானம்'.

17. அ) நைசியா விசுவாச அறிக்கை (எல்லோரும்)

வானத்தையும், பூமியையும்; காணப்படுகிறதும், காணப்படாததுமான, எல்லாவற்றையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே கடவுளை விசுவாசிக்கின்றேன்.

ஒரே கர்த்தருமாய், கடவுளுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கனிறேன். அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே, தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்; பிதாவோடே ஒரே தன்மையுடையவர்; சகலத்தையும் உண்டாக்கியவர். மனிதராகிய நமக்காகவும், நமக்கு இரட்சிப்பு உண்டாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமண்டலத்திலிருந்து இறங்கிப் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் அவதரித்து மனிதனானார்.
நமக்காகப் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு,பாடுபட்டு,அடக்கம் பண்ணப்பட்டார்.வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறிப் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார். அவருடைய இராச்சியம முடிவுற்றது.

கர்த்தருமாய், ஜீவனைக் கொடுத்திருக் கிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத் தெதாழுது தோத்திரிக்கப் படுகிறவருமாய் தீர்க்தரிசிகள் மூலமாக உரைத்த வருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப்போஸ் தலத்திருஅவை உண்டென்று விசுவாசிக்கிறேன் பாவ மன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட, ஒரே ஞானஸ்நானத்தையும் அறிக்கையிடுகின்றேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகுமென்று காத்திருக்கிறேன்.

(அல்லது) ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) அப்போஸ்தலர்விசுவாச அறிக்கை (எல்லாரும்)

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய கடவுளை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்.அவர் பரிசுத்தஆவியனாலே கன்னிமரியாளிடத்தில்உற்பவித்துப் பிறந்தார்.பொந்தியு பிலாத்துவின்காலத்தில் பாடுபாட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு,மரித்தோர் ஸ்தானத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்தெழுந் தார்.பரதேலாகத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய கடவுளுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும்விசுவாசிக் கிறேன். பொதுவானபரிசுத்த சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்தியஜீவனும் உண்டென்றும் விசுவாசிக்கிறேன். ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமேசைஒழுங்கு படுத்தப்படல்

18. பாட்டு

19. அப்பமும்,திராட்சைரசமும் கொண்டு வரப்படல் அல்லது ஏற்கனவே ஆயத்தமாய் வைக்கப்பட்டிருந்தால் திறக்கப்படல்.

20. திருப்பணியாளர் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் பரிமாறுவதற்கு ஆயத்தம் செய்தல்.

துதி(எல்லோரும் எழுந்து நிற்க)

21.திரு:உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்

அவை:அப்படியே எங்கள் இருதயத்தை ஆண்டவரிடத்தில் உயர்த்துகின்றோம்.

திரு: நம்முடையஆண்டவராகிய கடவுளுக்கு நாம்ஸ்தோத்திரங்கள் செலுத்தக் கடவோம்.

அவை:அப்படியே புகழும் துதியும் கூறுவது தகுதியாயிருக்கிறது.

திரு: பிதாவே, சருவ வல்லமையுள்ள நித்திய கடவுளே,நாங்கள் உமது குமாரன் இயேசுகிறிஸ்து மூலமாய் எவ்விடங்களிலும் உமக்குத் துதிகளைத் செலுத்துவதே மிகவும் தகுதியானதும், எங்கள் மகிழ்ச்சியும் இரட்சிப் புமானது மாய் இருக்கிறது. நீரே சகலத்தையும் படைத்து, எம்மை உமது சாயலில் உருவாக்கியவர். நாங்கள் பாவத்தில் விழுந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரே எங்களை மீட்கும் பொருட்டு உமது ஒரே பேறான குமாரனைத் தந்தருளினீர். அவர் எங்கள் மனித தன்மையை அனுபவித்தறிந்து,சிலுவையில் மரித்தார். நீர் அவரை மரித்தோரிடத்திலிருந்து எழுப்பி, உமது வலது பாரிசத்தில் மகிமையைப் பிரகடனப்படுத்தவும், உமது அற்புத செயல்களைக் கொண்டாடவும், நீர் அவர் மூலம் உமது தூய வாழ்வளிக்கும் ஆவியானவரைத் தந்தருளி; எங்களை உமது ஜனமாகவும் அரச ஆசாரியத் திருக்கூட்டமாகவும் ஆக்கினீர். ஆகவே,வானத்திலுள்ள சங்கத்தார்அனைவரோடும் சேர்நது நாங்கள் உமக்கு முடிவில்லாத் துதிகளை ஏறெடுக்கின்றோம்.

அவை: பரிசுத்த, பரிசுத்தரான ஆண்டவரே:சகல பலமும் ,கனமும் பொருந்திய கடவுளே; வானமும் பூமியும் உமது மகத்துவத்தால் நிறைந்திருக்கின்றன.;
உன்னதத்திலே ஓசன்னா
ஆண்டவருடைய நாமத்தில் வருகிறவர் ஆசீர் வதிக்கப்பட்டவர்.
உன்னதத்திலே ஓசன்னா

திரு: ஆண்டவராகிய கடவுளே,விண்ணுக்கும் மண்ணுக்கும் இராசாவே,எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலம் நாங்கள் உம்மைத் துதிக்கின்றோம். அவர் தாம் காட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, அப்பத்தை எடுத்து துதி செலுத்தி, அதைப்பிட்டுத் தம்முடைய சீடருக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இருக்கிறது.என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போசனம் பண்ணின பின்பு அந்தப்படியே அவர் பாத்திரத்தையும் எடுத்து, துத செலுத்தி, அதை அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி உங்களுக்காகவும் அநேகருக்காகவும் ஊற்றப்படுகின்ற புதிய உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதைப்பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி சொல்லுங்கள் என்றார்.

அவை: கிறிஸ்து மரித்தார்.
கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்
கிறிஸ்து திரும்பவும் வருவார்.

திரு: ஆகவே பிதாவே அவருடைய கட்டளையின் படியே, அவரை நினைவுகூரும்படி இதைச் செய்கின்றோம். எங்கள் பலியான துதியையும் , நன்றியையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம். உமது கொடைகளாகிய அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் பெற்றுக் கொள்ளும் நாங்கள், கிறிஸ்துவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கு கொள்ளும்படி உமது தூயஆவியான வரின் வல்லமையினால் அருள் செய்யும் எங்களைக் கிறிஸ்துவோடு ஒரே சரீரமாக்கியருளும் எங்களை உயிருள்ள பலியாக உமக்கு அர்ப்பணிக்கிறோம். ஏற்றுக் கொண்டருளும். உமது சகல சிருஸ்டிப்பு களோடும் எங்களை வானுலக இராச்சியத் திற்குள் கூட்டிச் சேர்த்தருளும். எங்கள் ஆண்ட வரும், உமது குமாரனுமாகிய இயேசுகிறிஸ் துவின் மூலம் இவ் வேண்டுதல்களை உம்மிடம் ஏறெடுக்கின்றோம.

ஆமென

அவை: அவருக்கூடாகவும், அவருடனேயும், அவரிலும் தூய ஆவியானவரின் ஐக்கியத்தில் மண்ணுலகிலும், விண்ணுலகிலும்,நேற்றும் -இன்றும்- என்றுமாக எல்லாக் காலங்களிலும் வாழும்சகல ஆத்துமாக்களி லிருந்தும்; சருவவல்லமையுள்ள பிதாவே,உமக்குக் கனமும்,மகிமையும் உரித்தாகுவதாக. ஆமென்.

அப்பம் பிட்குதல்

22. திருப்பணியாளர் அமைதியாக அப்பம் பிட்குதல் அல்லது சொல்ல வேண்டியது:

திரு: பிட்கப்படும் அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் பங்கு கொள்ளும்படி செய்கின்றது.

அவை: நாம் பலராயிருந்தாலும்,ஒரேஅப்பத்தில் பங்கு கொள்வதால்,நாம்ஒரே சரீரமாயிருக் கின்றோம. (அல்லது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு வழிபாட்டு ஒழுங்கு

திரு: கடவுளுடைய பரிசுத்த
ஜனத்திற்கான, கடவுளுடைய ஈவுகள்.
அவை: பிதாவாகிய கடவுளுக்கு மகிமையுண்டாகும்படி, இயேசுக்கிறிஸ்து பரிசுத்தராகவும், இயேசுக்கிறிஸ்து ஆண்டவராகவும் இருக்கிறார்.
(அல்லது -உயிர்த்தெழுந்த திருநாள் முதல் பெந்தேக்கோஸ்தே நாள்வரை)
திரு: கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்ட பாஸ்காவாய் இருக்கிறார், அல்லேலுயா,
அவை: ஆகவே பண்டிகையைக் கொண்டாடுவோம், அல்லேலூயா,

23. அமைதி - ஜெப நிலையில்

## அப்பமும் திராட்சைரசமும் பரிமாறப்படல்

24. எல்லாரும்: இரக்கமுள்ள ஆண்டவரே, உமது எண்ணிறைந்த மகா இரக்கங்களை நம்பி உமது மேசையண்டை வரத் துணிகிறோமேயல்லாமல், நாங்கள் சுயமாய் நீதிமான்கள் என்று நம்பிவரவில்லை. நாங்கள் உமது மேசையின் கீழ் விழும் சிறு துண்டுகளை பொறுக்கிக் கொள்ளுவதற்குத் தகுதியுடயவர்களல்ல. ஆகிலும் நீர் எப்பொழுதும் அருள் பாராட்டும் இயல்புடைய வராயிருக்கிறீர். அதில் மாத்திரமே நாங்கள் சார்ந்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எங்களிலும், நாங்கள் அவரிலும் என்றென்றுமாய் வாசமாயிருக்கும் பொருட்டு, உமது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் நீர் எங்களைப் போஷித்தருளும்.

ஆமென்.

25. திருப்பணியாளரும் அவருடைய உதவியாளர்களும் அப்பத்திலும் திராட்சைரசத்திலும் பங்கு கொண்டபின், அவையினருக்கு பகிர்ந்தளிப்பார். அப்பொழுது திருப்பணியாளர் பின் வரும் வார்த்தைகளை அல்லது வேறு பொருத்தமான வார்த்தைகளைக் கூறி அவையினரை அழைப்பார்.

திரு: விசுவாசத்துடனே சமீபித்து வாருங்கள். உங்களுக்காகக் கொடுக்கப்பட்ட ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் சரீரத்தையும், உங்களுக்காகச் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தையும் பெற்றுக்கொண்டு, நன்றியறிதலுடனும் விசுவாசத்துடனும் அவரை உங்கள் இருதயத்தில் ஆகாரமாக்கிக் கொள்ளுங்கள்.

26. அப்பமும், திராட்சைரசமும் பரிமாறப்படும் போது சொல்லக்கூடிய வார்த்தைகள்.

திரு: உனக்காகக் தெகாடுக்கப்பட்ட
கிறிஸ்துவின் சரீரம்
உனக்காகச் சிந்தப்பட்ட கிறஸ்துவின் இரத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அல்லது)

திரு: உனக்காகக் கொடுக்கப்பட்ட நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் சரீரம்,உன்னை நித்திய வாழ்வில் நிலைத்திருக்கச் செய்யும். கிறிஸ்து உனக்காகவே மரித்தார் என்பதை நினைவு கூரும் பொருட்டு, இதை வாங்கிப் புசித்து, நன்றியறிதலுடனே விசுவாசத்தினால் உன் இதயத்தில் அவரை ஆகாரமாக்கிக்கொள்

உனக்காகச் சிந்தப்பட்ட நமது ஆண்டவராகிய இதயேசுகிறிஸ்துவின் இரத்தம், உன்னை நித்திய வாழ்வில்நிலைத்திருக்கச் செய்யும். கிறிஸ்துவின் இரத்தம் உனக்காகவே சிந்தப்பட்டது.என்பதை நினைவு கூரும் பொருட்டு இதை வாங்கிக் குடித்து நன்றியுள்ளவனாயிரு.

(திருவிருந்தில் பங்குபெறுபவர் ஒவ்வொரு தடவையும் ஆமென் என்று கூறலாம்.)

27. மீதமான திருவிருந்துப் பதார்த்தங்களை திருப்பணியாளர் மூடிவைப்பார்.

## இறுதி ஜெபங்கள்

28. அமைதி

29. திரு:ஜெபம் செய்வோமாக (எல்லோரும்) இந்தப் பரிசுத்த நற்கருணை மூலம் எங்களைப் போசித்தருளிய ஆண்டவரே,நீர் எங்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவுடன் ஒன்றினைத்து மனுக்குலத்திற்காக நீர் விண்ணுலகில் ஒழுங்கு செய்து வைத்திருக்கும் வான்விருந்தின் முன் அனுபவத்தை எங்களுக்குத் தந்தருளுவீர். உமக்கே நன்றி உரித்தாகுக. ஆமென்.

30. பாட்டு

31. திரு. பிதா, குமாரன், தூய ஆவியான கடவுளுடைய ஆசீர்வாதம் உங்களோடு என்றென்றுமாய் இருப்பதாக ஆமென்.

32. திரு. கடவுளுடைய நாமத்திற்குத் துதியும், மகிமையும் உண்டாகும்படி வாழ்ந்து பணி செய்ய, தூய ஆவியானவரின் வல்லமையில் சமாதாத்தோடே செல்லுங்கள். ஆமென்.

அவை: கடவுளுக்கே நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கட்டளைகள்

(அ) நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்னதாவது
இஸ்ரவேலே கேள்: நம்முடைய கடவுளாகிய ஆண்டவர் தாம் ஆண்டவர், உன் கடவுளாகிய ஆண்டவரிடம் உன் முழுஉள்ளத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு மனத்தோடும,உன் முழு ஆற்றலோடும் அன்பு கொள்வாயாக. இதுவே முதன்மையான திருக்கட்டளை.
இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் திருக்கட்டளை என்னவென்றால்;நீ உன்னிடம் அன்பு கொள்வது போல அடுத்தவனிடமும் அன்பு கொள்வாயாக என்பதே.
இவ்விரு திருக்கட்டளைகளிலும் நீதிச்சட்டம் முழுமையும், இறைவாக்குரைப்போரின் போதனையும் அடங்கியிருக்கின்றன.

(ஆ) பத்துத் திருக்கட்டளைகள்

கடவுள் திருவுளம்பற்றிச் சொல்லிய வாக்குகளாவன;
உன் கடவுளாகிய கர்த்தர்நானே, என்னையன்றி உனக்கு வேறு கடவுள் உண்டாயிருக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தாவே எங்களுக்கிரங்கி,இந்தத் திருக்கட்ட ளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

மேலே விண்ணுலகிலும்,கீழே மண்ணுலகிலும் மண்ணுலகின் கீழ்த் தண்ணீரிலும், உண்டாயிருக் கிறவைகளுக்கு ஒப்பான ஒரு உருவத்தையாவது, ,யாதொரு விக்கிரகத்தையாவது நீ உனக்கு உண்டாக்கவும் நீ அவைகளை வணங்கவும், அவைகளுக்குப் பணி செய்யவும் வேண்டாம்.

கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக கட்டளையைக் கைக்கொள்ள எங்கள இருதயத்தை ஏவியருளும்.

உன் கடவுளாகிய கர்த்தரின் திருப்பெயரை வீணிலே வழங்காதிருப்பாயாக.

கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக கட்டளையைக் கைக்தெகாள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

ஓய்வுநாளைத் தூயதெனக் கடைப்பிடிக்க நினைப்பாயாக;ஆறு நாட்களும் நீ வேலை செய்து, உன்செயல்களையெல்லாம் நடப்ப ிப்பாயாக: ஏழாம் நாளோ உன் கடவுளா கிய கர்த்தருடைய ஓய்வு நாள்.

கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக்கட்டளையை கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தந்தையையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.
கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

கொலை செய்யாதிருப்பாயாக.
கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

கற்புநெறி தவறாதிருப்பாயாக.
கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ளஎங்கள் இருதயத்தை ஏவியருளும்.

களவு செய்யாதிருப்பாயாக.
கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
கர்த்தாவே எங்களுக்கிரங்கி, இந்தத் திருக்கட்டளையைக் கைகொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

பிறனுக்குரியவைகளை இச்சியாதிருப்பாயாக.
கர்த்தாவே எங்களுக்கிரங்கி,இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தைஏவியருளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிருந்து ஞாயிறு வழிபாடு
# மாற்று ஒழுங்கு

1. வணக்க அழைப்பு அல்லது கூட்டுப் பிராத்தனை அல்லத தேவாரம்.

2. எல்லாரும் (விண்ணப்பநிலையில்)
எல்லா இருதயங்களையும் கண்டு அவ்வற்றின் விருப்பங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிற எல்லா வல்லதையுமுள்ள தந்தையே, உமக்கு மறைவாய் இருப்பது ஒன்றுமேயில்லை நாங்கள் உம்மழடத்தில் முழுமையாய் அன்பு கூரவும், உமது திருப்பெயரையே என்றென்றும் புகழவும் தக்கதாக நீர்தாமே எங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்தியருள் வேண்டு மென்று, எங்கள் காத்தராகிய இயேசுக் கிறிஸ்துவினிமித்தம் உம்மை தாழிமையாய் வேண்டுகிறோம்.

3. பாட்டு

4. எல்லாரும் எழுந்து நிற்க.

திருப்பணியாளர்: அப்பானவர்தளே நாம் நமது விண்ணகத் தந்தையாகிய கடவுளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பாகக் கூடிவந்திருக்கிறறோம். அவர் முன்னிலையில் நமது பாவங்களையும் தீமைகளையும் மறைத்துவைக்க முடியாது என்பதையுணர் வோமாக. அவற்றை உணர்ந்து அறிக்கை செய்யும் பொழுது, நமக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கும் என்பதை திருமறைவாக்குகளும் உணர்த்துகின்றன.

எனவே, நாம் எக்காலத்திலும் கடவுளுக்கு முன்பாக நமது பாவங்களை உணர்ந்து சொல்லுவதே தகுதியாகும். நாம் கடவுளுடைய கையினின்று பெறுகின்ற நன்மைகளுக்காகத் துதி செலுத்தவும், அவருடைய புகழ்ச்சியை வெளிப்படுத்தவும், அவருடைய புனித வாக்குகளைக் கேட்கவும் நமது தேவைகளை வேண்டிக் கொள்ளவும் கூடிவந்திருக்கும் இவ்வழி பாட்டு நேரத்தில்; நமது பாவங்களை மெய்யுணர்வோடும், ஆராய்வோடும் மனம் விட்டுச் சொல்லி, அவர் வாக்குப்பண்ணிய மன்னிப்பை எதிர்நோக்கி, மனத்தாழ்மையோடே நமது பாவங்களை அறிக்கை செய்வோமாக.

5. பாவ அறிக்கை (விண்ணப்ப நிலையில்)

எல்லா வல்லமையுமுள்ள கடவுளே, எங்கள் தகப்பனே, எல்லாவற்றையும் உருவாக்கியவரே, எல்லா மனிதருக்கும் நீதிபதியாய் இருப்பவரே; நாங்கள் உமக்கு விரோதமாக எங்கள் சிந்தை, பேச்சு, செயல்களினால் அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிதாகயச் செய்த எங்கள் பாவங்களையும் தீமைகளையும் உணர்ந்து; அவற்றிற்காகப் புலம்பித் துக்கப்படுகிறோம். எங்கள் தவறு தகவல்களை நினைத்துக் கவலைப்பட்டு வருந்துகிறோம். நாங்கள் முழு மனதுடன் உமது மன்னிப்பை நாடி நிற்கின்றோம். எங்கள் மேல் இரங்கியருளும, இரக்கமுள்ள தகப்பனே.

எங்கள் தந்தையே, நீர் எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் உமது புதல்வரும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு மன்னித்தருளும். நாங்கள் இனிமேல், உமது திருப்பெயரின் மகிமை விளங்கும்படி புதுவாழ்வு வாழவும், உமக்குப் பணிபுரியவும், உமக்கு வருப்பமுள்ளவர்களாய் இருக்கவும் தக்கதாக, எங்கள் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் நிமித்தும் நற்பேறு ஈந்தருளும். ஆமென்

6. மன்னிப்பின் நற்செய்தி

உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் அவை உறைந்த மழையைப்போல் வெண்மையாகிவிடும்; அவை இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் பசேல் போரலாகிவிடும்.

(ஏசாயா 1:18)

சுமைசுமந்து சோர்ந்திருப்பவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத் 11:28)
கடவுள் தம்முடைய ஒரே பேறான மைந்தரிடம் நம்பிக்கை கொள்ளும் எவனும் கெட்டழிந்து போகாதிருந்து என்றுமுள்ள மெய் வாழ்வைப் பெறும்படி, அவரைத் தந்தருளினார். இந்த அளவுக்கு அவர் உலகத்தின் மீது அன்பு கூர்ந்தார். (யோவான் 3 : 16)
பாவிகளை மீட்டுக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்பது, நம்பத்தக்கதும் மனதார ஒப்புக்கொள்ளக் கூடியதுமான வாக்கியமாகும். (1 தீமோ 1:15)
நம்முள் ஒருவன் பாவம் செய்வானானால், நமக்காக நம் தந்தையாரிடம் பரிந்து பேசுகிறவர் ஒருவர் இருக்கிறார். அவர் நீதியுள்ளவராகிய இயேசுக்கிறிஸ்துவே அவரே நம்முடைய பாவங்களைப் போக்கும் பரிகாரப்பலி.

(1 யோவான் 2:1-2)

அவை :நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொருக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

(ஏசாயா 53:5)

எல்லாரும்:விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது திருப்பெயர் தூயதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படுவதாக. உமது அருளாட்சி வருவதாாக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுவதாக. அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தந்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னித்திருக்கின்றது போல நாங்கள் செய்த தீமைகள் எங்களுக்கு மன்னித்தருளும். எங்களை சோதனைக்கு உற்படுத்தாதேயும், தீமையினின்று எங்களை விடுவித்தருளும். ஆட்சியும் வல்லமையும், மாட்சிமையும் என்றென்றைக்கும் உம்முடையவையே. ஆமென.

(அல்லது)

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரம பிதாவே என்னாளும்
பரிசுத்தப் படுக உம் நாமம்
பரிவுடனு வருக உம் ராச்யம்

பரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்யப் படுவதுபோல்
தரணியிலுமது சித்தமுமே
தவறாது செய்யப்படுக சதா

அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக் கீந்தருளும்
நன்றாயலார் கடன் யாம் மன்னிக்கும்
நன்நயம் போலெம் பிழை மன்னியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவே சோதனைக் கெமை விலக்கி
தீமையினின் றெமை இரட்சியுமே
மேவும் ராச்யம் வல்லமை மகிமை
மிகவும் உம தென்றுமே ஆமென்.

7. பாட்டு

8. தூய வாழ்வின் அவசியம்
(எல்லாரும் எழுந்து நிற்க)

திரு : நீங்கள் உங்கள் முழுவதுமாகக் கடவுளுக்கு உரியதும், உகந்ததும், உயிருள்ளதுமான பலியாக ஒப்புக் கொடுங்கள்; இதுவே நீங்கள் செய்யவேண்டிய உள்ளார்ந்த மெய்வழிபாடு.

அவை : மனிதர் மொழிகளிலும், தூதர் மொழிகளிலும் பேசும் ஆற்றலை நான் பெற்றிருந்தாலும் அன்பு என்னுள் இல்லையென்றால், நான்வெற்றெலி செய்யும் வெண்கலமாவேன், கலகலவென்று ஒலிதருகின்ற தாளமுமாவேன்.

வறியவருக்கு உணவளிக்க எனக்குள்ள தெல்லாம் நான் அள்ளி வழங்கினாலும், எரிப்பதற்கென என்னுடலை ஈந்து விட்டாலும், அன்பு என்னுள் இல்லையென்றால் சிறப்பு எதுவும் எனக்கில்லை.

திரு : ஆண்டவரின் சாட்சிகளாய் விளங்கின இத்தனைபேரும், திரண்டுவரும் மேகம் போல நம்மைச் சூழ்ந்திருப்பதால், நாம் பளுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் பொருள்கள் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, இயேசுவையே நோக்கிய வண்ணம் நமக்குக் குறிப்பிட்டுள்ள ஒட்டப்பந்தயத்தில், எந்த இடர் வந்தாலும் பொறுமையோடு ஓடுவோமாக.

அவை : இவற்றை அடைந்துவிட்டேன் என்றோ முற்றிலும் தேறினவனாகிவிட்டேன் என்றோ நான் எண்ணவில்லை. கிறிஸ்து இயேசு என்னைத் தமக்குச் சொந்தமாக்கியருக்கிறார். எவற்றிற்காக நான் பிடிபட்டேனோ, அவற்றை எனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள நான் தொடர்ந்து ஓடுகிறேன்.

திரு: நம்முள் செயலாற்றும் தமது வல்லமையால், நாம் வேண்டிக் கொள்வதற்கும் நினைப்பதற்கும் மிக மேலாகச் செய்ய வல்லவருக்கே, திருஅவையின் மூலமும் கிறிஸ்து இயேசுவின் மூலமும் தலைமுறை தலைமுறையாக என்றென்றைக்கும் மாட்சிமை உண்டாவதாக ஆமென்.

9. திருமறை வாசிப்பு

10. திருத்தூதுவர் பற்றுறுதி அறிக்கை அல்லது நைசியா பற்றுறுதி அறிக்கை - பக்கம் 9-11 பார்க்கவும்.

11. பரிந்து மன்றாடல் - பக்கம் 4-7 பார்க்கவும்
(அல்லது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணியாளர் தமது சொந்த விண்ணப்பம் செய்யலாம்.

12. அவை விளம்பரங்கள்

13. பாட்டு
(கடவுள் பணிக்கென்று காணிக்கை)

14. காணிக்கை விண்ணப்பம்

15. அருளுரை

16. பாட்டு
(பாட்டின் கடைசிச் சரணம் பாடப்படும் பொழுது, திருப்பணியாளர் திருமேசை யண்டை வந்து, திருவிருந்துப் பொருட்களை மூடியிருக்கும் போர்வையை அகற்றுவார்)

## திருவிருந்து

17. அழைப்பு

திரு : கர்த்தருக்குள் அன்பானவர்களே, இந்த அப்பத்தை உண்ணவும், இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணவும் வருகிற யாவரும், தங்களை நன்றாய் சோதித்து அறிந்து வரவேண்டுமென்று, புனித பவுல் கூறியதை, நம் முடைய மீட்பராகிய கிறிஸ்துவின் உடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தமுமாகிய திருவிருந்துப் பந்தியில் பங்கு கொள்ள மனதாயிருக்கிற நாம் நினைத்துக் கொள்ள வேண்டும்.

அன்பானவர்களே, ஆண்டவருடைய ஆக்கினைத் தீர்ப்பு நம்மேல் வந்திறங்காதபடிக்கு, நாம் நம்மை ஆராய்ந்து, நமது பாவங்களுக்காக உண்மையாய் மனதுருகி, மீட்பராகிய கிறிஸ்துவை உயிரும் உறுதியுமுள்ள விசுவாசத்தோடு பற்றிக் கொள்வோமாக. நமது நடத்தையைச் சீர்திருத்தி, எல்லா மனிதரிடத்திலும் அன்பாய் வாழ்வோமாக. இப்படிச் செய்தால் இந்தப் புனித திருவிருந்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தகுதியுடையவர்களாவோம்.

ஆகையால் உண்மையோடும், பயபக்தியோடும் நமது பாவங்களுக்காகமனம் துக்கப்பட்டவா களாய், பிறரோடே அன்பும் தயவம் உள்ளவாகளாகி, ஆண்டவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவர் விதித்த நன்னெறிகளில் இனி நடந்து, புதுவழி வாழ்வு வாழ விரும்புகிற நாம், மனத்தாழ்மையுடன் நம் சிந்தையையும் இதயங்களையும் ஆயத்தப்படுத்துவோமாக. பின்பு நமக்கு ஆறுதல் ஏற்படும்பொருட்டு, இந்தப் புனித திருவிருந்தைப் பெறுவதற்காக விசுவாசத்தோடு சமீபித்து வருவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.புகழ் (எல்லோரும் எழுந்து நிற்க)

திரு: உங்கள் இதங்கள் உயர்த்துங்கள்.

அவை: அப்படியேஎங்கள் இதயங்களைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

திரு: நம்முடைய கர்த்தராகிய கடவுளுக்கு நாம் நன்றி செலுத்தக் கடவோம்.

அவை:அப்படிச் செய்வதே தகுதியானதும், நீதியானதுமாய் இருக்கிறது.

திரு: ஆண்டவரே, தூய தந்தையே எல்லா வல்லமையும் உள்ள நிலையான கடவுளே; நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் உமக்குப் புகழ் செலுத்துவதேதகுதியானதும், நீதியானதும்,நாங்கள செய்யவேண்டிய முதற்கடமையுமாயிருக்கிறது.

எல்லோரும் : எனவே, தெய்வ தூதரோடும், தலைமைத்தெய்வ தூதரோடும், விண்கூட்டத்தார் அனைவரோடும் நாங்கள் சேர்ந்து, எப்பொழுதும் உம்மைப்போற்றி, “சேனைகளின் அதிபதியும் கடவுளுமாகிய ஆண்டவரே, நீரே புனிதர், புனிதர்; விண்ணகமும் மண்ணகமும் உமது மாட்சிமையால் நிறைந்திருக்கின்றன” என்று சொல்லிச்சொல்லி, மேன்மைபொருந்திய உமது திருப்பெயரைப் போற்றி வணங்குகிறோம். எல்லாவற்றுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான ஆண்டவரே,உமக்கே மாட்சிமை உண்டாவதாக . ஆமென்.

திரு: விண்ணப்பம் செய்வோமாக. எல்லோரும் விண்ணப்ப நிலையில் சொல்ல வேண்டியது;
இரக்கமுள்ள ஆண்டவரே, உமது அளவிடமுடியாப் பெரும் இரக்கங்களை நம்பியே உமது திருமேசையண்டை வருவதற்குத் துணிவடைகின்றோமே அல்லாமல், நாங்கள் எங்களை எவ்விதத்திலும் நீதிமான்களென்று எண்ணி வரவில்லை. நாங்கள் உமது திருமேசையிலிருந்து கீழே விழும் சிறு துணிக்கைகளைக்கூடப் பொறுக்கி எடுப்பதற்குத் தகுதியுடையவர்கள் அல்ல. ஆனால்,தெய்வமே, நீர் எப்பொழுதும் அருள் பாராட்டும் இயல்புடைய ஆண்டவராய் இருக்கிறீர். ஆகையால், கனிவுடைய கர்த்தாவே, எங்கள் பாவ உடல்கள் உமக்கு அருமையான புதல்வன் இயேசுக் கிறிஸ்துவின் உடலினால் தூய்மைப் படவும்; எங்கள் ஆத்துமா அவருடைய திரு இரத்தத்தினால் கழுவப்படவும்; அவரிடத்தில் நாங்களும், எங்களிடத்தில் அவரும், எப்பொழுதும் தங்கியிருப்ப தற்கும் ஏற்றவிதமாய், நாங்கள் இப்புனித திருவிருந்தில் பங்குகொள்ளுவதற்கு நீர் கிருபை செய்தருளும். ஆமென்.
(எல்லாரும் விண்ணப்ப நிலையில் தொடர்ந்திருக்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. நியமம்

திரு: எங்கள் தந்தையாகிய கடவுளே, எங்களை மீட்டெடுக்கும் பொருட்டே நீர் உமது புதல்வராகிய இயேசுக் கிறிஸ்துவை , உமது கனிவுள்ள இரக்கத்தினால் அவர் சிலுவையின் மரணத்தை அனுபவிக்கும்படிக்கு அவரை எங்களுக்காகத் தந்தருளினீர். அவர் தாம் திரும்பவும் வரும் காலம் வரை, தம்முடைய விலை மதிப்பற்ற அருமையான மரணத்தை நாங்கள் என்றென்றும் நினைவில் வைத்திருக் கத்தக்கதாக ஒரு நியமத்தை ஏற்படுத்தி, அதை நாங்கள் ஓயாமல் கைக்கொள்ள வேண்டுமென்றும் எங்களைப் பணித்திருக்கிறார்.

நமது ஆண்டவராகிய இயேசு, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில், தம் சீடரோடு பந்தியில் இருக்கையில்; அப்பத்தை எடுத்துக்கடவுளுக்குத் துதி செலுத்திய பின், அப்பத்தைப் பிட்டு, சீடருக்குக் கொடுத்து, "நீங்கள் இதைப் பெற்று உண்ணுங்கள்,இது உங்களுக் காகவே பிட்கபபடுகிற என் உடலாயிரு க்கிறது, என்னை நினைவு கூரும்படி இதைச்செய்யுங்கள்" என்றார் உணவு உண்ட பின் அவர் அவ்வாறே பாத்திரத்தையும் எடுத்து, கடவுளுக்குத் துதிசெலுத்தியபின், அவர்களுக்குக் கொடுத்து, "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்பு உண்டாகும்படி உங்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புதிய உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாய் இருக்கிறது. நீங்கள் இதைப் பருகும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இவ்வாறு செய்து வாருங்கள்" என்றார்.

இரக்கமுள்ள தந்தையே, நாங்கள் மிகவும் தாழ்மையோடு உம்மிடம் வேண்டிக்கொள்ளுகிறபடி எங்கள் விண்ணப்பத்தைக்கேட்டு, உமது மைந்தரும் எங்கள் மீட்பருமாகிய இயேசுக் கிறிஸ்து ஏற்படுத்திய நியமப்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைத்துக்கொள்ள.இந்த அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் பெற்று அவருடைய புனித உடலில் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நீர் எங்களுக்குத் தயவு செய்தருளும்

ஆமென்.

20. திருவிருந்து பங்குபெறல்:
திருப்பணியாளரும் அவருடைய உதவியாளர்களும் முதலில் பங்கு பற்றிய பின், அவையினர் பங்கு பெறுவர். பங்கிட்டுக் கொடுக்கப்படும் பொழுது சொல்லப்பட வேண்டியவை:

"உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் உடல், உனது உடலையும் ஆத்துமாவையும் நித்திய வாழ்வுக் கென்று அது தற்காத்துக் கொள்ளும் கிறிஸ்து உனக்காகவே மரித்தார் என்பதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூறும் பொருட்டு,இதை வாங்கி உண்டு,உனது உள்ளத்தில் விசுவாசத்தினால் அவரை உணவாக்கிக்கொள்".
"உனக்காகவே உற்றப்பட்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம், உனது உடலையும் ஆத்துமாவையும் நித்திய வாழ்வுக்கென்று அது தற்காத்துக் கொள்ளும். கிறிஸ்துவின் இரத்தம் உனக்காகவே உற்றப்பட்டது. என்பதை நினைவு கூறும் பொருட்டு, இதை வாங்கி க்குடித்து, உன் இருதயத்தில் நன்றியுள்ளவனாய் இரு." (யாவரும் திருவிருந்தில் பங்குபற்றியபின், திருப்பணியாளர் திருமேசையை போர்வையால் மூடி வைப்பார்)

21. அர்ப்பணம்

(அ) என்னை ஜீவ பலியாய் ஒப்புவித்தேன் ஏற்றுக்கொள்ளும் இயேசுவே அன்னை தந்தையுந்தன் சன்நிதி முன்னின்று சொன்ன வாக்குத் தத்தம் அல்லாது இப்பொழுது. ஆத்ம சரீரமதையுமக்கு ஆதீன மாக்கி வைத்தேன்
பாத்திரமாய் அதைப் பாவித்துக்கொள்ள காத்திருக்கிறேன் கருணை செய் தேவா.

(அல்லது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) உன்னதத்திலிருக்கிற கடவுளுக்கு மாட்சிமையும்,புவிதனில் அமைதியும், மனிதர் மேல் நல்லுறவும் உண்டாவதாக. ஆண்டவராகிய கடவுளே, விண்ணக அரசே, எல்லா வல்லமையுமுள்ள தந்தையே; நாங்கள் உம்மைத் துதிக் கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உமது அளவிலா மகத்துவத்தை நினைந்து உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஆண்டவரே, ஒரேபேறான புதல்வனாகிய இயேசுக்கிறிஸ்துவே, உலகத்தின் பாவங்களைப் போக்குகின்ற தந்தையின் மகனாகிய தெய்வ ஆட்டுக்குட்டியே, எங்கள் மேல் கனிவாய் இரும். உலகத்தின் பாவங்களை சுமக்கின் றவரே, எங்கள் விண்ணப்பத்தை ஏற்றருளும். தந்தையாகிய கடவுளின் வலது பக்கத்தில் வீற்றிருக்கின்றவரே, எங்களுக்கு இரங்கும். நீரே ஆண்டவர், நீரே தூயவர்; கிறிஸ்துவே நீர் ஒருவரே தூய ஆவியானவருடன் தந்தையாகிய கடவுளின் மாட்சிமையில் மிகவும் உயர்ந்தவராய் இருக்கிறீர்.

ஆமென்.

22. திருவருள் அறிவிப்பு

அனைத்து அறிவிற்கும் எட்டாத தெய்வ அமைதி,கடவுளினதும் இயேசுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவினதும் அன்பும் அறிவும்
உங்கள் உள்ளத்திலும் உணர்விலும்
நிலைத்திருப்பதற்கு வழி செய்வதாக.
தந்தை, தனையன், தூய ஆவியாகிய
எல்லாவல்லமையுமுள்ள கடவுளின்
நற்பேறு உங்களுக்குள்ளே இருந்து,
உங்களோடு எப்போதும்
நிலைத்திருக்கக் கடவது. ஆமென்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவின் கிருபையும், தந்தையாகிய
கடவுளின் அன்பும்,தூய ஆவியானவரின்
ஐக்கியமும் வழி நடத்தலும்
உங்களோடு என்றுமாய் இருப்பதாக.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது ஞாயிறு வழிபாடு

1. வணக்க அழைப்பு அல்லது தேவாரம்/கூட்டுப்பிரார்த்தனை

2. எல்லாரும் எழுந்து நிற்க

நடத்துபவர்: கர்த்தர் உயிர்த்தெழுந்தார்.
அவையினர்: உண்மையாகவே கர்த்தர் உயிர்த்தெழுந்தார்.

நட: இன்றைய தினம் ஆண்டவர் நமக்குத் தந்தநாள்.

அவை: ஆகவே இன்று நாம் களிகூர்ந்து மகிழக்கடவோம்.

நட: கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்மைக் காப்பாற்றும் கடவுளை ஆர்ப்பரித்துப் பாட வாருங்கள்.

அவை: புகழுடனே அவர்முன்வந்து, ஆர்ப்பரிப்புடன்அவரைப்புகழ்ந்து பாடக்கடவோம்.

நட: ஆண்டவரே எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.
அவை: அப்பொழுது எங்களுடைய வாய் உமது புகழை வெளிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாரும் :** எல்லா இருதயங்களையும் கண்டு அவற்றின் விருப்பங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிற, எல்லா வல்லமையுமுள்ள தந்தையே; உமக்கு மறைவாய் இருப்பது ஒன்றுமேயில்லை. நாங்கள் உம்மிடம் முற்று முழுதாய் அன்புசெலுத்தவும், உமது திருப்பெயரையே என்றென்றும் புகழ்ந்து போற்றவும் தக்கதாக நீர்தாமே எங்கள் இருதயங்களை தூய்மைப்படுத்தி அருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டிக்கொள்கின்றோம்.

ஆமென்.

3. பாட்டு

4. வழிபாட்டு விளக்கம்-எல்லோரும் எழுந்து நிற்க.

அன்பானவர்களே நாம் நமது விண்ணகத்தந்தையாகிய கடவுளுக்கு முன்பாகக் கூடிவந்திருக்கிறோம். அவர் முன்னிலையில் நமது பாவங்களையும் தீமைகளையும் மறைத்து வைக்க முடியாது; அவற்றை உணர்ந்து அறிக்கை செய்யும்பொழுது, நமக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கும் என்பதை திருமறைவாக்குகளும் எடுத்துணர்த்துகின்றன.

எனவே, நாம் எக்காலத்திலும் கடவுளுக்கு முன்பாக நமது பாவங்களை உணர்வுடனும், பணிவுடனும், தாழ்மையுடனும், துக்கத்துடனும் ஆராய்வுடனும் மனம் விட்டுச் சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேடமாக, நாம் கடவுளுடைய கையினின்று பெறுகின்ற நன்மைகளுக்காகத் துதி செலுத்தவும், அவருடைய புனித வாக்குகளைக் கேட்கவும், நமது தேவைகளை வேண்டிக்கொள்ளவும் கூடிவந்திருக்கும் இவ்வழிபாட்டு நேரத்தில், மனத்தாழ்மையோடே நமது பாவங்களை அறிக்கை செய்து, அவர் வாக்குப் பண்ணிய மன்னிப்பை எதிர்நோக்கிக் காத்திருப்போமாக.

5. பாவ அறிக்கை-விண்ணப்ப நிலையில்

எல்லா வல்லமையுமுள்ள கடவுளே, எங்கள் தந்தையே, எல்லாவற்றையும் படைத்தவரே, எல்லா மனிதருக்கும் நீதிபதியாய் இருப்பவரே, நாங்கள் உமக்கு விரோதமாக எங்கள் சிந்தை, பேச்சு,செயல்களினால் அடிக்கடி கொடிதாய்ச் செய்த எங்கள் பாவங் களையும் தீமைகளையும் உணர்ந்து; அவற்றிற்காகப் புலம்பித் துக்கப்ப டுகிறோம். நாங்கள் முழுமனதுடன் உமது மன்னிப்பை நாடி நிற்கிறோம் எங்கள் மேல் இரங்கியருளும் இரக்கமுள்ள தந்தையே .

எங்கள் தந்தையே, நீர் எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் உமது புதல்வரும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசுக்கிறிஸ்து நிமித்தம் எங்களுக்கு மன்னித்தருளும். நாங்க்ள் இனிமேல் உமது திருப் பெயரின் மாட்சிமை விளங்கும் படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது வாழ்வு வாழவும் உமக்குப் பணிபுரியவும், உமக்குவிருப்ப முள்ளவர்களாக இருக்கவும் தக்கதாக எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ் துவின் மூலம் நற்பேறு ஈந்தருளும் **ஆமென்.**

6. **மன்னிப்பின் நற்செய்தி**

உண்மையாய் மனம் திரும்புகிற வர்களுக்கு ஆண்டவர் இயேசு அளிக்கும் ஆறுதல் வார்த்தைகளைக் கேளுங்கள்:

அழுத்தும் சுமை சுமந்து சோர்வுற்றிருப்பவர்களே,நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்.

(மத்தேயு 11:28)

கடவுள் தம்முடைய ஒரேபேறான மைந்தரிடம் நம்பிக்கை கொள்ளும் எவனும் கெட்டழிந்து போகாதிருந்து என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெறும்படி, அவரைத்தந்தருளினார்;இந்த அளவுக்கு அவர் உலகத்தின் மீது அன்பு கூர்ந்தார்.

(யோவான் 3:16)

பாவிகளை மீட்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்பது நம்பத்தக்கதும் மனமார ஒப்புக்கொள்ளக் கூடியதுமான மா வாக்கியமாகும்.

(1 தீமோ 1:15)

நம்முள் ஒருவன் பாவம் செய்வானானால், நமக்காக நம்தந்தையாரிடம் பரிந்து பேசுகிறவர் ஒருவர் இருக்கிறார், அவர் நீதியுள்ளவராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுக்கிறிஸ்துவே; நம்முடைய பாவங்களைப் போக்கும் பரிகார பலி அவரே. (1யோவான் 2:1-2)

அவை: நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொருக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஆமென் (ஏசாயா 53:5)

7. இயேசு பெருமான் சொன்ன, கடவுளிடம் வேண்டுதல் செய்யும் முறை: விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது திருப்பெயர் தூயதெனப் போற்றப்படுவதாக. உமது அருளாட்சி வருவதாக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுவதாக. அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தந்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னித் திருக்கிறது போல, நாங்கள் செய்த தீமைகளை எங்களுக்கு மன்னித் தருளும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையினின்று எங்களை விடுவித்தருளும். ஆட்சியும்,வல்லமையும், மாட்சிமையும் என்றென்றைக்கும் உம்முடையவையே.

ஆமென்.

8. பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தூய வாழ்வின் அவசியம்-எல்லாரும் எழுந்து நிற்க.

நட: தம் இனிய ஆன்மீக நிலையை உணர்ந்தவர்கள் நற்பேறு பெற்றவர்கள்.

அவை: விண்ணரசு அவர்களுக்குரியது.

நட: துயரத்தில் ஆழ்ந்திருக்கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்.

அவை: அவர்களுக்குக் கடவுளின் ஆறுதல் கிடைக்கும்.

நட: பணிவுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள்

அவை: அவர்கள் உலகத்தையே உடமையாகப் பெறுவார்கள்.

நட: நீதி நிலவ வேண்டுமென்பதில் மிகுந்த வேட்கை கொண்டவர்கள் நற்பேறு பெற்றவர்கள்.

அவை: கடவுள் அவர்கள் வேட்கை நிறைவேறும் படி செய்வார்.

நட: இரக்கம் காட்டுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்.

அவை: கடவுள் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்.

நட: தூய உள்ளமுள்ளவர்கள் நற்பேறு பெற்றவர்கள்.

அவை: அவர்கள் கடவுளைக் காண்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது ஞாயிறு வழிபாடு

நட: அமைதி நிலவச் செய்கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்.

அவை: அவர்கள் கடவுளின் மைந்தர்கள் எனப் படுவார்கள்.

நட: நீதியின் பொருட்டு துன்புறுத்தப் படுகிற வர்கள் நற்பேறு பெற்றவர்கள்.

அவை: விண்ணரசு அவர்களுக்குரியது.

நட: என்பொருட்டு மக்கள் உங்களை
இகழ்ந்து துன்புறுத்தி,
உங்களைப்பற்றி தீமையான வற்றை
எல்லாம் பொய்யாய்ச் சொல்வார்
களானால், நீங்கள் நற்பேறு பெற்றவர்
களாவீர்கள்.

அவை: மனமகிழ்ந்து களிகூருங்கள்,
விண்ணுலகில் உங்கள் பலன்
மிகுதியாகும். உங்களுக்கு முன்
வாழ்ந்த இறைவாக்குரைப்போரும்
இவ்வாறே துன்புறுத்தப்பட்டனர்.
ஆமென்.

10. திருமறை வாசிப்புகள்.

11. விசுவாச அறிக்கை.

திருத்தூதுவர் பற்றுறுதி

விண்ணுலகையும் மண்ணுலகையும்
உருவாக்கிய எல்லா
வல்லமையுமுள்ள கடவுளை விசுவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கிறேன். அவருடைய ஒரே புதல்வராகிய நம்முடைய ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் தூய ஆவியானவரால் கன்னி மரியாளிடத்தில் கருவாகிப் பிறந்தார். போஞ்சி பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தார். விண்ணுலகுக் கெழுந்தருளி, எல்லா வல்லமையுமுள்ள கடவுளுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்ப்பதற்குத் திரும்பவும் வருவார்.

தூய ஆவியானவரையும் விசுவாசிக்கிறேன். பொதுவாய் இருக்கிற தூய திருச்சபையும், புனிதர்களின் ஐக்கியமும், பாவ மன்னிப்பும், உடல் உயிர்ப்பும், என்றென்றுமான உயிரும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

பரிந்து மன்றாடல்

அமைதி காத்து தனி வேண்டுதல் செய்தபின்,நடத்துபவர் தனி ஜெபம் செய்யலாம். அல்லது பின்வரும் பரிந்து மன்றாடலில் ஏதாவது ஒன்று ஏறெடுக்கலாம்.
(பக்கம் 4-7 பார்க்கவும்)

## 13.அவை அறிவிப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பாட்டு-இவ்வேளையில் திருப்பணிக்கான காணிக்கை சேர்க்கப்படும்.
15. அருளுரை.
16. பாட்டு.
17. அருட்பேறு.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின்
கிருபையும் தந்தையாகிய கடவுளின்
அன்பும், தூய ஆவியானவரின்
ஐக்கியமும் நல்லுறவும் நம் யாவரோடும்
என்றென்றும் இருப்பதாக.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது ஞாயிறு வழிபாடு

1. வணக்க அழைப்பு அல்லது தேவாரம் கூட்டுப் பிரார்த்தனை

2. எல்லாரும் எழுந்து நிற்க.

நட: கர்த்தர் உயிர்த்தெழுந்தார்.

அவை: உண்மையாகவே கர்த்தர் உயிர்த்தெழுந்தார்.

நட: இதோ மேகங்கள்மீது வருகிறார். எல்லாக் கண்களும் அவரைக் காணும், அவரை ஊடுருவக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். உலகிலுள்ள எல்லா இனத்தவரும் அவரைக் கண்டவுடன் புலம்பி அழுவார்கள்.

அவை: எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள், "அல்பாவும் நானே, ஒமேகாவும் நானே, துவக்கமும் நானே, முடிவும் நானே, இருந்தவரும் நானே,இருக்கிறவரும் நானே இனி இருப்பவரும் நானே" என்று திருவுளம் பற்றுகிறார்.

நட: இரவு முடியப்போகிறது, பகல் நெருங்கி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை: ஆகையால் இருளுக்குரிய செயல்களை அறவே களைந்து விட்டு, ஒளிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள் வோமாக.

நட: கர்த்தர் என் வெளிச்சம், என் இரட்சிப்பு: யாருக்கு அஞ்சுவேன்.

அவை: கர்த்தர் என் உயிருக்கு அரணானவர்: யாருக்குப் பயப்படுவேன்.

நட: கர்த்தர் எனக்குச் செய்த எல்லா நன்மை களுக்காகவும் நான் எதைச் செலுத்து வேன்.

அவை: இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தரின் திருப்பெயரைத் தொழுது கொள்ளுவேன்.

3. பாட்டு.

4. வழிபாட்டு விளக்கம் (எல்லாரும் எழுந்து நிற்க.)

அன்பானவர்களே நாம் நமது விண்ணகத்தந்தையாகிய கடவுளுக்கு முன்பாகக் கூடி வந்திருக்கின்றோம். அவர் முன்னிலையில் நமது பாவங்களையும் தீமைகளையும் மறைத்து வைக்க முடியாது. அவற்றை உணர்ந்து அறிக்கை செய்யும் பொழுது. நமக்குப் பாவமன்னிப்பு கிடைக்கும் என்பதை திருமறை வாக்குகளும் எடுத்துணர்த் துகின்றன. எனவே நாம் எக்காலத்திலும் கடவுளுக்கு முன்பாக நமது பாவங்களை உணர்வுடன் மனம் விட்டுச் சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேஷமாக துதி செலுத்தவும், அவருடைய புனித வாக்குகளைக் கேட்கவும், நமது தேவைகளை வேண்டிக் கொள்ளவும் கூடி வந்திருக்கும் இவ் வழிபாட்டு நேரத்தில் மனத் தாழ்மையோடே நமது பாவங்களை அறிக்கை செய்து, அவர் வாக்குப் பண்ணிய மன்னிப்பை எதிர் நோக்கிக் காத்திருப்போமாக.

5. பாவ அறிக்கை (விண்ணப்ப நிலையில்)

இரக்கமுள்ள தந்தையே, நாங்கள் தப்பிப் போன ஆடுகளைப்போல, உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் உள்ளத்தின் விருப்பப்படி செயல்பட்டோம். உம்முடைய தூய கட்டளைகளைக் கடைப்பிடிக்காமல் வாழ்ந்து வந்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமலும். செய்யத்தகாதவைகளைச் செய்தும் வந்தோம்; எங்கள் உள்ளத்தில் சுகமேயில்லை.

ஆனாலும் கடவுளே, நீர் எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குறுதிப்படி, நிர்க்கதியற்ற எங்களுக்கு இரங்கும். தப்புக்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமை யாயிரும். பாவத்தின் நிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள தந்தையே, உம்முடைய தூயபெயருக்கு மாட்சிமையுண்டாகும்படி, இனிமேல் நாங்கள் தெய்வபக்தியும், நீதியும் தெளிந்த புத்தியுமுள்ளவர்களாய் வாழ்ந்துவருவதற்கு. இயேசுக்கிறிஸ்துவின் மூலம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். **ஆமென்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மன்னிப்பின் நற்செய்தி.

கடவுள் நமக்கு அடைக்கலமாயும் ஆற்றலுமாயும் இருக்கிறார். இக்கட்டுக் காலத்தில் நமக்கு உறுதுணை அளிப்பவர் அவரே.

நமது விண்ணகத் தந்தையாகிய கடவுள், உண்மையான மன உருகுதலோடும் நம்பிக்கையோடும் தம்மிடத்திற்கு மனந்திரும்பி, தங்கள் சகோதரர் குற்றங்களை மன்னிக்கிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச் செய்வோம் என்று மிகுந்த இரக்கமாய் வாக்குப் பண்ணியிருக்கிறார். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் பொருட்டு, நமக்கு இரங்கி நம் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, அவைகளினின்று நம்மை விடுதலையாக்கி, எல்லாவித நன்மைகளிலும் நம்மை உறுதிப்படுத்தி, நம்மை என்றென்றுமுள்ளவாழ்வுக் கரையில் சேர்ப்பாராக.

அவை: எங்கள் பாவங்கள் சிவேரென்று இருந்தாலும், அவை உறைந்துபோன மழைநீரைப்போல் வெண்மையாகி விடும். அவை இரட்டிப்பான செந்நிறமாயிருப்பினும், வெண்பஞ்சைப் போலாகி விடும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இயேசு பெருமான் சொன்ன, கடவுளிடம் வேண்டுதல் செய்யும் முறை:
விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமது திருப்பெயர் தூயதெனப் போற்றப்படுவதாக. உமது அருளாட்சி வருவதாக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுவதாக. அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தந்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னித்திருக்கிறது போல நாங்கள் செய்த தீமைகளை எங்களுக்கு மன்னித்தருளும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையினின்று எங்களை விடுவித்தருளும். ஆட்சியும் வல்லமையும் மாட்சிமையும் என்றென்றைக்கும் உம்முடையவையே. **ஆமென.**

8. பாட்டு

9. **தூய வாழ்வின் அவசியம்**
(எல்லோரும் எழுந்து நிற்க)

நட: வெற்றி வேந்தரான ஆண்டவரே, உமது ஆலயம் எவ்வளவு அருமையானது. ஆண்டவரின் ஆலயப்பிரகாரங்கள் மீதுள்ள தேட்டத்தால் என் ஆன்மா ஏங்கிப்போயிற்று.

**அவை:** என்றுமுள்ள கடவுளை நினைத்து என் உள்ளமும் உடலும் களிப்புடன் ஆர்ப்பரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட: வெற்றி வேந்தரான ஆண்டவரே, என் கடவுளே,என் அரசே;

அவை: உம்முடைய பீடங்கள் இருக்கும் இடங்களில் வீடு கட்ட அடைக்கலன் குருவிகளுக்கு இடம் கிடைத்தது; தங்கள் குஞ்சுகளுக்குக் கூடுகட்டச் சிட்டுக்குருவிகளுக்கும் இடம் கிடைத்தது.

நட: உமது ஆலயத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்.

அவை: அவர்கள் எந்நாளும் உம்மைப் புகழ்ந்து போற்றிக் கொண்டேயிருப்பார்கள்.

நட: உமது ஆலயப்பிரகாரங்களில் ஒரு நாள் இருப்பது.

அவை: வேறோரிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதைவிட மேலானது.

நட: பொல்லாதவரின் கூடாரங்களில் அவர்களோடு வாழ்வதைவிட.

அவை: என் கடவுளின் ஆலய வாயிற்படியில் காவற்காரனாயிருப்பதையே தேர்ந்து கொள்வேன்.

நட: கடவுளான ஆண்டவர் நமக்குக் கதிரவனும்,கேடயமுமாயிருக்கிறார்; ஆண்டவர் அருளையும் மேன்மையையும் அளிப்பார்.

அவை: வெற்றி வேந்தரான ஆண்டவரே, உம்மை நம்பும் மனிதன் நற்பேறு பெற்றவன்.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. திருமறை வாசிப்பு/கள்

11. நைசீய பற்றுறுதி.
விண்ணையும் மண்ணையும்,
காணப் படுகின்றவையும் காணப்
படாதவையுமான எல்லாவற்றையும்
படைத்தவராயிருக்கிற, எல்லா
வல்லமையுமுள்ள தந்தையாகிய ஒரே
கடவுளை விசுவாசிக்கின்றேன்.

ஒரே ஆண்டவரும், தந்தையாகிய
கடவுளின் ஒரே பேறான புதல்வராகிய
இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசி
க்கின்றேன். அவர் எல்லா உலகமும்
உண்டாக்கப் படுவதற்கு முன், தமது
தந்தையினாலே பிறப்பிக்கப்பட்டவர்.
கடவுளிற் கடவுளானவர்,ஒளியில்
ஒளியானவர், மெய்க்கடவுளில்
மெய்க்கடவுளானவர். அவர்
உண்டாக்கப்படாமல்,
பிறப்பிக்கப்பட்டவர். தந்தையோடு ஒரே
தன்மையுடையவர்; எல்லாவற்றையும்
உருவாக்கியவர்.

மனிதராகிய நமக்காகவும், நமது
மீட்பிற்காகவும், அவர் விண்ணுலகில்
இருந்து இறங்கி வந்து, தூய
ஆவியானவரால் கன்னி மரியாளிடத்தில்
உற்பவித்து மனிதனானார். நமக்காகப்
போஞ்சி, பிலாந்துவின் காலத்தில்
சிலுவையில் அறையுண்டு,
பாடுகளனுபவித்து, மரித்து அடக்கம்
பண்ணப்பட்டார். திருமறையின் வாக்குப்
படி, அவர் மூன்றாம் நாளில்
உயிர்த்தெழுந்தார். அவர் விண்ணு
லகிற்கு ஏறி, தன் தந்தையின் வலது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவர் உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பதற்கு, மாட்சிமையோடே திரும்பவும் வருவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவேயில்லை.

உயிருக்கு ஆண்டவரும், வாழ்வு அளிப்பவருமாயிருக்கிற தூய ஆவியானவரையும் விசுவாசிக்கின்றேன். அவர் தந்தையிலும், புதல்வரிலும் இருந்து புறப்படுகிறவர். அவர் தந்தையோடும் தனையனோடும் கூடத் தொழுது போற்றப்படுகிறவர்; அவர் இறைவாக்கு உரைப்பவர்களைக் கொண்டு உரைத்தவர்.

ஒரே பொதுவான திருத்தூதுவத் திருச்சபை உண்டென்றும் விசுவாசிக்கின்றேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே திருமுழுக்கை அறிக்கை இடுகின்றேன். மரித்தோரின் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய வாழ்வும் வருமென்று காத்திருக்கின்றேன்.
ஆமென்.

12. பரிந்து மன்றாடல்

நட: கிறிஸ்துவின் முழுத் திரு அவைக்காகவும், எல்லா மனிதருடைய தேவைக்காகவும் நாம் ஒரே உள்ளத்தோடும் ஒரே சிந்தையோடும் நமது வேண்டுதல்களை ஏறெடுப்போமாக. முழுஉலகத்தினதும் சமாதானத்திற்காக; நாடுகள் மத்தியிலும் எல்லாமனிதர் மத்தியிலும் நல்லுறவும் புரிந்துணர்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட வேண்டும் என்பதற்காக; எல்லா ஆட்சியாளர்களும் நீதியோடும் அமைதியோடும் ஆளுகை செய்ய வேண்டும் என்பதற்காக; மனிதர் தம் நாளாந்த வாழ்விலும் வேலையிலும் கடவுளுடைய விருப்பத்தையே நிறைவேற்றி மகிழ்வடைய வேண்டும் என்பதற்காக மன்றாடுவோம்.

கர்த்தாவே உமது இரக்கத்தில்.

அவை: எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நட: கடவுளுடைய நோக்கங்கள் நிறைவு பெறும் வகையில் துன்புறுவோர், நண்பர் இல்லாதோர், தேவைகளுள்ளோர் மத்தியில் பணிசெய்வோருக்காக; கிறிஸ்தவ சாட்சி நம்மில் விளங்கும் வண்ணம், நமக்குத் தீமைசெய்வோர், நமது எதிரிகளுக்காக ; துக்கமாயி ருப்போர், முதிர்வயதுடையோர்,மரிக்கும் நிலையிலுள்ளோர் யாவரும் பெலப்பட்டு ஆறுதல் அடையவேண்டும் என்பதற்காக மன்றாடுவோம்.

கர்த்தாவே உமது இரக்கத்தில்.

அவை: எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

நட: கிறிஸ்துவினுடைய திருஅவையானது, ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு ஆகியவற்றில் நிலைத்திருக்கவும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவின் அழைப்பைப்பெற்ற யாவரும் ஒருமைப்பாட்டில் நிலைத்திருக்கவும்; அருட் செய்தி பரப்புதலில் ஈடுபட்டிருக்கும் யாவரும் எல்லா மனிதரையும் தந்தையாரிடத்தே அழைத்து வரவும்; கடவுள் வாக்கைப்பெறும் யாவரும் அவருடைய மாட்சிமையை வெளிப்படுத்தவும் வேண்டுமென மன்றாடுவோம்.
கர்த்தாவே உமது இரக்கத்தில்

அவை: எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நட: உமது தூயர்கள் யாவர் நிமித்தமும் உம்மைப் போற்றுகிறோம் ஆண்டவரே. நாங்கள் அவர்களுடைய ஐக்கியத்தில் பெலப்பட்டு, அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றிவாழ்ந்து , முடிவிலே அவர்களோடு சேர்ந்து உமது பேரானந்தத்தின் நிறைவை அனுபவிக்க அருள் செய்யும். ஆண்டவராகிய கடவுளே தூய்மையும் நம்பிக்கையுமா னவரே, உமது பணிக்கென நீரே எங்களை அழைத்தவர்; உமது விருப்பை நாங்கள், அறியவும் அவற்றையே நாங்கள் செய்யவும் உதவியருளும்; உமது அழைப்புக்கு ஏற்ற விதமாய் நாங்கள் வாழ, எங்கள் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவில் இரங்கியருளும்.

ஆமென்.

13. அவை அறிவிப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பாட்டு: இவ்வேளையில் திருப்பணிக்கான காணிக்கை சேர்க்கப்படும்.

15. அருளுரை
16. பாட்டு
17. அருட்பேறு

கடவுளுடைய கிருபையுள்ள
இரக்கத்திற்கும் பராமரிப்பிற்கும்
உங்களை ஒப்புக்கொடுக்கிறோம்.
கர்த்தர் உங்களைஆசீர்வதித்துக்
காப்பாராக; கர்த்தர் தமது முகத்தை
உங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணி,
உங்கள் மேல் கிருபையாய்
இருப்பாராக; கர்த்தர் தமது முகத்தை
உங்கள் மேல் பதியவைத்து
உங்களுக்குச் சமாதானத்தைக்
கட்டளையிடுவாராக.
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காவது ஞாயிறு வழிபாடு

1. வணக்க அழைப்பு அல்லது தேவாரம்/ கூட்டுப் பிரார்த்தனை
2. எல்லோரும் எழுந்து நிற்க.

நட: விண்ணுலகில் வீற்றிருப்பவரே, உம்மையே என் கண்கள் நோக்குகின்றன.

அவை: தலைவரின் விருப்பத்தை அறிய வேலைக்காரரின் கண்கள் அவர் கையைப்பார்த்த வண்ணம் இருப்பது போலவும்.

நட: தலைவியின் விருப்பத்தை அறிய வேலைக்காரியின் கண்கள் அவள் கையைப் பார்த்த வண்ணம் இருப்பது போலவும்.

அவை: எங்கள் கடவுளாகிய ஆண்டவர் எங்களுக்கு இரங்கும் வரையில், எங்கள் கண்கள் அவரையே நோக்கிக் கொண்டிருக்கும்.

நட: புனித மலையையே என் கண்கள் நோக்குகின்றன. எனக்கு உதவி எங்கிருந்து வரும்.

அவை: விண்ணையும் மண்ணையும் உண்டாக்கின ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்.

நட: நீர் அருளிய வாக்குகளை நான் எவ்வளவோ நேசிக்கிறேன்; நாளெல்லாம் அவற்றையே தியானிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவை:** உமது வார்த்தை என் கால்களுக்கு விளக்கு, அது என் பாதைக்கு வெளிச்சம்.

நட: யூதரல்லாதவர்களே, நீங்கள் அனைவரும் ஆண்டவரைத் துதியுங்கள்; மனித இனத்தாரே நீங்கள் அனைவரும் அவரைப் புகழுங்கள்.

**அவை:** ஏனெனில், ஆண்டவர் நமக்குக் காட்டும் இரக்கம் மிகப் பெரியது; அவரது உண்மை என்றென்றுமுள்ளது.

3. பாட்டு

4. வழிபாட்டு விளக்கம் (எல்லோரும் எழுந்து நிற்க)

அன்பானவர்களே நாம் நமது விண்ணகத்தந்தையாகிய கடவுளுக்கு முன்பாகக் கூடி வந்திருக்கின்றோம். அவர் முன்னிலையில் நமது பாவங்களையும் தீமைகளையும் மறைத்து வைக்கமுடியாது, அவற்றை உணர்ந்து அறிக்கை செய்யும் பொழுது, நமக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்பதை திருமறை வாக்குகளும் எடுத்துணர்த்துகின்றன.

எனவே நாம் எக்காலத்திலும் கடவுளுக்கு முன்பாக நமது பாவங்களை உணர்வுடன் மனம் விட்டுச் சொல்ல வேண்டும். விஷேடமாக நாம் கடவுளுடைய கையினின்று பெற்ற நன்மைகளுக்காகத் துதி செலுத்தவும், அவருடைய புனித வாக்குகளைக் கேட்கவும், நமது தேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிக் கொள்ளவும் கூடி வந்திருக்கும் இவ் வழிபாட்டு நேரத்தில் மனத் தாழ்மையோடே நமது பாவங்களை அறிக்கை செய்து, அவர் வாக்குப் பண்ணிய மன்னிப்பை எதிர் நோக்கிக் காத்திருப்போமாக.

5. பாவ அறிக்கை-விண்ணப்ப நிலையில்

நட: மிகவும் தூயவரான கடவுளே, உமது பிள்ளைகளென அழைக்கப்படுவதற்கு நாங்கள் தகுதியற்றவர்கள். உமது திருக்கட்டளைகளை மீறி பாவத்திற் குட்பட்டவர்களென்று அறிக்கை செய்கிறோம்.

அவை: அன்புத் தந்தையே,எங்களை மன்னிக்கு மாறு உம்மை வேண்டிக்கொள்ளு கிறோம்.

நட: உமது கிருபையை நினையாமல், உம்மிடம் பேசுவதை அலட்சியம்செய்து, உமது திருப்பணியை அசட்டை செய்கிறோம்.

அவை: அன்புள்ள தந்தையே, எங்களை மன்னிக்குமாறு உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

நட: மனிதர் பார்வையில் அயோக்கியராய் நடந்து, உமது பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தி,மற்றையோருக்குத் தெரியாமல் மறைவாகப் பாவங்களைச் செய்கிறோம்.

அவை :அன்புள்ள தந்தையே, எங்களை மன்னிக்குமாறு உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட: மற்றவர்களின் துன்பங்களையும் கவலைகளையும் பற்றிக் கரிசனையற்று எங்கள் சொந்த நலனிலும், நல்வாழ்க்கையிலும், சுகபோகத்திலுமே கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிறோம்.

அவை: அன்புள்ள தந்தையே, எங்களை மன்னிக்குமாறு உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

நட: நீர்எங்கள் குற்றங்களை மன்னிக்கிறது போல எங்களுக்குத் தீமை செய்கிறவர் களைநாங்கள் மன்னியாதிருக்கிறோம்.

அவை: அன்புள்ள தந்தையே, எங்கள் பாவங் களையெல்லாம் மன்னித்தருள வேண்டு மென்று, உம்மிடம் விண்ணப்பிக்கின்றோம்.

ஆமென்.

6. மன்னிப்பின் நற்செய்தி

பரம்பொருளே, பலவித கொடிய மோசங்களால் சூழப்பட்டிருக்கிற நாங்கள், எங்கள் சுபாவ பெலவீனத் தினால் நிலைத்துநிற்க சக்தியற்றவர் கள் என்பதை அறிந்திருக்கின்றீரே. எங்களை எல்லாவித மோசங்க ளிலும் தாங்கவும், நாங்கள்எல்லாவித சோதனைகளினின்றும் கடைத்தேறவும், ஏற்ற பெலனையும் ஆதரவையும் கட்டளையிட்டருளும்படி, எங்கள் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து வினிடத்தில் வேண்டிக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை: ஆண்டவர் நம்மிடத்தில் அன்புகொண்டு, தமது இரக்கத்தினால் நம்முடைய பாவங்களினின்று நம்மை விடுவித்து, நம்மை ஒரு அரசகுலமாக்கினார். அதாவது, தம்முடைய தந்தையும் கடவுளுமாயிருக்கிறவருக்கென, நம்மை ஆசாரியராக்கினார். இவருக்கே என்றென்றும் மாட்சிமை, வல்லமை உண்டாவதாக. ஆமென்.

7. இயேசு பெருமான் சொன்ன, கடவுளிடம் வேண்டுதல் செய்யும் முறை.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது திருப்பெயர் தூயதெனப் போற்றப்படுவதாக. உமது அருளாட்சி வருவதாக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறை வேறுவதாக. அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தந்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னிக்கிறது போல, நாங்கள் செய்த தீமைகளை எங்களுக்கு மன்னித்தருளும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தா தேயும், தீமையினின்று எங்களை விடுவித்தருளும், ஆட்சியும் வல்லமையும் மாட்சிமையும் என்றென்றைக்கும் உம்முடையவையே.

ஆமென்.

8. பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தூய வாழ்வின் அவசியம்
(எல்லோரும் எழுந்து நிற்க.)

நட: என் ஆன்மா ஆண்டவரைப் புகழ்ந்து போற்றுகிறது.

அவை: என் மீட்பராகிய கடவுளை நினைத்து என் உள்ளம் களி கூறுகிறது.

நட: அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்; ஆம் இதுமுதல் எல்லாத் தலை முறையினரும் என்னை நற்பேறு பெற்றவர் என்பார்கள்.

அவை: ஏனெனில், வல்லமையுடையவர் எனக்கு அரும்பெரும் செயல்கள் பல செய்தார்;பரிசுத்தம் என்பதே அவரது திருப்பெயர்.

நட: அவரது இரக்கம் அவருக்கு அஞ்சுவோருக்கு தலைமுறை தலைமுறையாகக் கிடைக்கும்.

அவை: அவர் தமது கைவல்லபத்தைக் காட்டினார்;இறுமாப்புடையவர்களையும், அவர்கள் தங்கள் உள்ளத்தில் கொண்டுள்ள திட்டங்களையும் சிதறடித்தார்.

நட: ஆட்சி புரிவோரை அரியணையினின்று இறக்கினார்;தாழ்நிலையில் அமர்த்தினார்.

அவை: பசியுள்ளவர்களை நலன்களால் நிரப்பினார்; செல்வர்களை வெறுமையாக அனுப்பினார்.

நட: நம்முடைய மூதாதையருக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவர் மரபினருக்கும் என்றென்றைக்கும் இரக்கங்காட்ட நினைத்தருளி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை: தம் அடியானாகிய
இஸ்ரவேலுக்கு ஆதரவளித்தார்.
ஆமென்.

10. திருமறை வாசிப்புகள்

11. விசுவாச அறிக்கை

நட: கடவுள் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்.

அவை: விண்ணிலே கடவுளுக்கு மாட்சிமை உண்டாவதாக.

நட: கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை நாம் அறிந்திருக்கிறோம், அதில் நம்பிக்கையும் வைத்திருக்கிறோம், கடவுள் அன்பே; அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான், கடவுளும் அவனுக்குள் நிலைத்திருக்கிறார்.

அவை: விண்ணிலே கடவுளுக்கு மாட்சிமை உண்டாவதாக

நட: கடவுள் ஒளியே; இருள் என்பதே அவரிடம் இல்லை. அவர் ஒளியில் இருப்பதற்கிசைய நாமும் ஒளியில் நடப்போமானால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்ஒருவரோடொருவர் நல்லுறவில் இணைக்கப்பட்டிருப்போம்.

அவை: விண்ணிலே கடவுளுக்கு மாட்சிமை உண்டாவதாக.

நட: உரியகாலம் வந்தபோது, கடவுள் தம் மைந்தரை இவ்வுலகிற்கு அனுப்பினார். அம்மைந்தர் ஒரு பெண்ணிடம் பிறந்து நீதிச் சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவரானார்.

அவை: கடவுள்அருளிய எண்ணற்ற நன்மைகளுக்காக அவரைப் போற்றிப் பாடுவோம்.

நட: நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைத்தந்தார். கடவுள் நம்மிடம் அன்புகொண்டுள்ளார் என்பதற்கு இதுவே சான்று.

அவை: கடவுள் அருளிய எண்ணற்ற நன்மைகளுக்காக அவரைப் போற்றிப் பாடுவோம்.

நட: நம்முடைய ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் தந்தையாகிய கடவுளுக்கே எல்லாப் புகழும் போற்றுதலும் உரியன. அவர் இயேசுக் கிறிஸ்துவை இறந்தோரிடமிருந்து உயிரோடு எழுப்பினதன் மூலம், தமது மிகுந்த இரக்கத்திற்கேற்ப நாம் மறுபடியும் பிறந்து புதிய மனிதராய் வாழும்படி செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை: கடவுள் அருளிய எண்ணற்ற நன்மை களுக்காக அவரைப் போற்றிப் பாடுவோம்.

நட: நாம் கடவுளுடைய மைந்தர்களாய் இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்த, “அப்பா”என்று கூப்பிடும் தம் புதல்வரின் ஆவியை, கடவுள் நம் உள்ளங்களில் தந்தருளினார்.

அவை: ஆண்டவராகிய உமக்கே புகழ் உண்டாவதாக

நட: நாம் இனி அன்னியருமல்ல, அயல் நாட் டினருமல்ல. நாம் கடவுளுக்குரிய மக்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; நாம் கடவுளுடைய வீட்டார்; திருத்தூதுவர்கள் இறைவாக்கு ரைப்பவர்கள் ஆகியவர்களை அடித்தளமாகக் கொண்டுகட்டடமாக எழுப்பப்பட்டவர்கள்; அதற்கு இயேசுக்கிறிஸ்துவே மூலைக்கல்.

அவை: என் ஆண்டவராகிய உமக்கே புகழ் உண்டாவதாக

நட: என் அன்பார்ந்தவர்களே, இப்பொழுது நாம்கடவுளுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் இனி எவ்விதமிருப்போம் என்பதுஇன்னும் வெளிப்படுத்த ப்படவில்லை. ஆனால், வெளிப்படும்போது அவர் இருக்கிறபடியே நாம் அவரைக் காண்போமாகையால், அவரைப் போலவே நாமும் இருப்போம் என்பது நமக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை: ஆண்டவராகிய உமக்கே புகழ் உண்டாவதாக.

நட: தந்தையாகிய கடவுளுக்கும், மைந்தராகிய கடவுளுக்கும், தூய ஆவியானவராகிய கடவுளுக்கும், ஆதியிலே மாட்சிமை உண்டானது போல.

அவை: இப்பொழுதும், எப்பொழுதும், காலா காலங்களிலும் அப்படியே உண்டாவதாக..

ஆமென்.

12. பரிந்து மன்றாடல்

நட: நண்பர்களே உலகெங்கிலும் வாழும் கடவுளுடைய குடும்பத்திற்காக உங்கள் மன்றாட்டை வேண்டுகிறேன். அவருடைய மக்கள் மத்தியில் பொறுப்புகளை ஏற்றிருப்போர், வார்த்தைக்கும் திருஅவைச் சடங்குகளுக்குமாகத் திருப்பணியாளராய் இருப்போர், அவருடைய திருப்பெயரில் இங்கே கூடிவந்திருப்போர் யாவருக்காகவும் உங்கள் மன்றாட்டை வேண்டுகிறேன். (அமைதி)

கடவுள் நமது விண்ணப்பத்திற்குச் செவி கொடுக்கிறார்.

அவை: கடவுளுக்கே நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட: உலக சமாதானத்திற்காகவும், எல்லா நாட்டினதும் ஆட்சியாளர்களுக்காகவும்; கடவுளுடைய தூய சித்தத்தின்படியே ஆளுகையாவும் நடைபெறவேண்டும் என்பதற்காகவும்; சரியானதும் சமமானதுமான கரிசனை யாவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும்; உங்கள்மன்றாட்டை வேண்டுகிறேன் நண்பர்களே.
(அமைதி)
கடவுள் நமது விண்ணப்பத்திற்குச் செவி கொடுக்கிறார்.

அவை: கடவுளுக்கே நன்றி.

நட: நமது திருஅவை, அவைக் குடும்பத்திற்குள்ளும் வெளியேயும் கரிசனையோடு செய்யும் எல்லாவிதத் திருப்பணிக்காகவும்; நமது குடும்பங்கள், நண்பர்கள், அயலகத்தார் யாவருக்காகவும், உங்கள் மன்றாட்டை வேண்டுகிறேன் நண்பர்களே.
(அமைதி)

கடவுள் நமது விண்ணப்பத்திற்குச் செவி கொடுக்கிறார்.

அவை: கடவுளுக்கே நன்றி.

நட: துக்கத்திலும், தேவையிலும், கவலையிலும்,நோயிலும், தனிமையிலும் இருப்போருக்காக; புறக்கணிக்கப்பட்டோர், துன்புறுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்படுவோர், கஷ்டப்படுவோருக்காக உங்கள்மன்றாட்டை வேண்டுகிறேன் நண்பர்களே.
(அமைதி)
கடவுள் நமது விண்ணப்பத்திற்குச் செவி கொடுக்கிறார்.

அவை: கடவுளுக்கே நன்றி.

நட: சந்ததி சந்ததியாகக் கிறிஸ்துவின் மாட்சி மையை வெளிப்படுத்திவாழ்ந்த யாவர் பொருட்டும் உம்மைப்போற்றுகிறோம் ஆண்டவரே. அவர்களுடைய முன்னுதாரணங்களாலும், ஒளியினாலும் நாமும் கவரப்பட்டுக் கிறிஸ்துவின்மாட்சிமையை நம்வாழ்வில் காட்டுவதற்கு, அவருடைய கிருபை வேண்டுமென மன்றாடுவோம் நண்பர்களே. (அமைதி)
கடவுள் நமது விண்ணப்பத்திற்குச் செவி கொடுக்கிறார்.

அவை: கடவுளுக்கே நன்றி.

நட: எல்லா வல்லமையுமுள்ள கடவுளே, நாங்கள் உம்மிடம் கேட்பதற்கு முன்பே எங்கள் தேவைகளையும் விருப்பங்களை -யும் நீர்அறிந்திருக்கிறீர். உமது விருப்பத்தின்படியே நாங்கள் உம்மிடம் கேட்பதற்கு எங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவியருளும். நாங்கள் உம்மிடம் கேட்கா
விட்டாலும், எங்கள் நன்மைக்கு ஏதுவான
யாவற்றையும எங்களுக்குத் தாரும்.
ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின்
நிமித்தம் இவற்றை எங்களுக்கு
ஈந்தருளும்.

ஆமென்.

13. அவை அறிவிப்புகள்:

14. பாட்டு- பாடப்படும் பொழுது திருப்பணிக்
கான காணிக்கை சேர்க்கப்படும்.

15. அருளுரை.

17. அருட்பேறு

(பின்வருவனவற்றில் ஏதாவது
ஒன்றைக் கூறலாம்).

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின்
கிருபையும். தந்தையாகிய கடவுளின்
அன்பும், தூய ஆவியானவரின்
ஐக்கியமும் நல்லுறவும் உங்கள்யாவ
ரோடும் என்றென்றும் இருப்பதாக.

ஆமென்.

எல்லா அறிவிற்கும் மேலான சமாதானம்
உங்களோடு இருந்து, நீங்கள்
கடவுளையும் அவருடைய புதல்வராகிய
நம்முடைய நாதர் இயேசுக்
கிறிஸ்துவையும் அறிகிற அறிவிலும்
அவரைப்பற்றும் அன்பிலும் நிலை
கொண்டிருக்கும்படிஉங்கள்
இருதயங்களையும் சிந்தைகளையும்
காக்கக்கடவது.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஞாயிறு வழிபாடு

1. வணக்க அழைப்பு அல்லது தேவாரம்/ கூட்டுப் பிரார்த்தனை.

2. எல்லாரும் எழுந்து நிற்க.

நட: கடவுளே, நீரே என் கடவுள்; ஆர்வமுடன் நான் உம்மை நாடுகிறேன்.

அவை: தண்ணீரின்றி வறண்டுபோன நிலம், தண்ணீரை நாடுவது போல, என் ஆன்மா உம்மீது வேட்கை கொள்கிறது; என் புலன்களெல்லாம் உம்மை அவாவுகின்றன.

நட: உமது வல்லமையையும் உமது மாட்சிமையையும் காணும்படி, இந்த நாட்டத்தோடே உமது புனித அகத்திற்கு வருகிறேன்.

அவை: உமது பேரருள் உயிரைவிட அருமையானது; என் நாவு உம்மை போற்றுகின்றது.

நட: நான் உயிரோடிருக்கும் வரையில் இப்படியே உம்மைப் புகழ்வேன்.

அவை: உமது திருப்பெயரைச் சொல்லிக் கைகூப்பிமன்றாடுவேன்.

நட: கொழுப்புள்ள சத்துணவை உண்பது போல, என் ஆன்மா ஆவல் தீர்த்துக் கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை:நான் வாயார உம்மைக் களிப்புடன் போற்றுவேன்.

3. பாட்டு.

4. வழிபாட்டுவிளக்கம் (எல்லோரும் எழுந்துநிற்க)

அன்பானவர்களே! நாம் நமது விண்ணகத்தந்தையாகிய கடவுளுக்கு முன்பாகக் கூடிவந்திருக்கின்றோம். அவர் முன்னிலையில் நமது பாவங்களையும், தீமைகளையும் மறைத்துவைக்க முடியாது; அவற்றை உணர்ந்து அறிக்கை செய்யும்போது நமக்குப்பாவமன்னிப்புக் கிடைக்கும் என்பதை திருமறை வாக்குகளும் எடுத்துணர்த்துகின்றன.

எனவே நாம் எக்காலத்திலும் கடவுளுக்கு முன்பாக நமது பாவங்களை உணர்வுடன் மனம் விட்டுச் சொல்லவேண்டும். விசேடமாக, நாம்கடவுளுடைய கையினின்று பெறுகின்ற நன்மைகளுக்காகத் துதி செலுத்தவும், அவருடைய புனிதவாக்குகளைக் கேட்கவும், நமது தேவைகளை வேண்டிக் கொள்ளவும் கூடி வந்திருக்கும் இவ்வழிபாட்டு நேரத்தில் மனத்தாழ்மையோடே நமது பாவங்களை அறிக்கை செய்து, அவர் வாக்குப்பண்ணிய மன்னிப்பை எதிர்நோக்கிக் காத்திருப்போமாக.

5. பாவ அறிக்கை (விண்ணப்ப நிலையில்)

எல்லா வல்லமையுமுள்ள கடவுளே, எங்கள் தந்தையே, எல்லாவற்றையும் படைத்தவரே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதருக்கும் நீதிபதியாய் இருப்பவரே,நாங்கள் உமக்கு விரோதமாக எங்கள் சிந்தை பேச்சு, செயல்களினால் அடிக்கடி கொடிதாய்ச் செய்த எங்கள் பாவங்களையும் தீமைகளையும்உணர்ந்து; அவற்றிற்காகப் புலம்பித் துக்கப்படுகின்றோம். எங்கள் தவறுதல்களை நினைத்துக் கவலைப்பட்டு வருந்துகின்றோம். நாங்கள் முழு மனதுடன் உமது மன்னிப்பைநாடி நிற்கின்றோம். எங்கள் மேல் இரங்கியருளும் இரக்கமுள்ள தந்தையே. எங்கள் தந்தையே, நீர் எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் உமது புதல்வரும் எங்கள் ஆண்டவருமாகிய யேசுக்கிறிஸ்து நிமித்தம் எங்களுக்கு மன்னித்தருளும். நாங்கள் இனிமேல் உமது திருப்பெயரின் மாட்சிமை விளங்கும்படி, புதுவாழ்வு வாழ்வும் உமக்குப் பணி புரியவும், உமக்கு விருப்பமுள்ளவர்களாக இருக்கவும் தக்கதாக எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம் நற்பேறு ஈந்தருளும், ஆமென.

6. மன்னிப்பின் நற்செய்தி.

எல்லா வல்லமையும் மிகுந்த இரக்கமுள்ள ஆண்டவர் மன்னிப்பையும், பாவத்திலிருந்து விடுதலையையும் நமக்குக்கட்டளையிட்டருளி; நமது வாழ்க்கை முறையை சீர்படுத்திக் கொள்வதற்கான காலத்தையும், தூய ஆவியானவருடைய அருட்கிருபை யையும் ஆறுதலையும் தந்தருளுவாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை : என் ஆன்மாவே ஆண்டவரைப் போற்று, என் முழு உள்ளமே அவருடைய திருப் பெயரைப் போற்று. என் ஆன்மாவே ஆண் டவரைப் போற்று, அவர் செய்த நன்மைகளுள் ஒன்றையும் மறவாதே. ஆமென்.

7. இயேசு பெருமான் சொன்ன. கடவுளின் வேண்டுதல் செய்யுமுறை.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது திருப்பெயர் தூயதெனப் போற்றப்படுவதாக. உமது அருளாட்சி வருவதாக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுதாக. அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தந்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் மன்னித்தி ருக்கிறதுபோல. நாங்கள் செய்த தீமைகளை எங்களுக்கு மன்னித்தருளும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தா தேயும், தீமையினின்று எங்களை விடுவித்தருளும். ஆட்சியும், வல்லமையும், மாட்சிமையும் என்றென்றைக்கும் உம்முடையவையே ஆமென்.

8. பாட்டு

9. தூய வாழ்வின் அவசியம் (எல்லாரும் எழுந்து நிற்க.)

நட: கடவுள் அருளிய வார்த்தைகளாவன, உன்ஆண்டவராகிய கடவுள் நானே. என்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்றி உனக்கு வேறு கடவுள்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி, நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட: நீ உனக்கென்று ஒரு விக்கிரகத்தையாவது, ஒரு உருவத்தையாவது உண்டாக்கவும், அவற்றை வணங்கிச் சேவிக்கவும் வேண்டாம்.

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி, நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : உன் ஆண்டவராகிய கடவுளின் திருப்பெயரை வீணிலே வழங்காதிருப்பாயாக.

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி, நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : ஓய்வுநாளைப் புனிதமாக ஆசரிக்க நினைப்பாயாக.

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி, நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக் கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : உன் தந்தையையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி. நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : கொலை செய்யாதிருப்பாயாக.

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி. நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : கற்புநெறி தவறாதிருப்பாயாக

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி. நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : களவு செய்யாதிருப்பாயாக

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி. நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி. நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

நட : பிறனுக்குரியவைகளை இச்சியாதிருப்பாயாக.

அவை: ஆண்டவரே எங்களுக்கிரங்கி, நாங்கள் இந்தத் திருக்கட்டளையைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **திருமறை வாசிப்பு/கள்.**
11. **விசுவாச அறிக்கை.**

## திருதூதுவர் பற்றுறுதி

விண்ணுலகையும் மண்ணுலகையும் உருவாக்கிய எல்லா வல்லமையுமுள்ள கடவுளை விசுவாசிக்கின்றேன். அவருடைய ஒரே புதல்வராகிய நம்முடைய ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவையும் விசுவாசிக்கின்றேன். அவர் தூய ஆவியானவரால் கன்னிமரியாளிடத்தில் கருவாகிப் பிறந்தார். போந்தியு பிலாத்துவின். காலத்தில் பாடுபட்டு. சிலுவையில் அறையுண்டு. மரித்து. அடக்கம் பண்ணப்பட்டு பாதாளத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தார். விண்ணுலகுக்கெழுந்தருளி. எல்லா வல்லமையுமுள்ள கடவுளுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து. உயிருள்ளோரையும் மரித் தோரையும் நியாயம் தீர்ப்பதற்குத் திரும்பவும் வருவார்.

தூய ஆவியானவரையும் விசுவாசிக்கிறேன் பொதுவாயிருக்கிற தூய திருச்சபையும் புனிதர்களின் ஐக்கியமும்,பாவமன்னிப்பும். உடல் உயிர்ப்பும். என்றென்றுமான உயிரும் உண்டென்று விசுவாசிக்கின்றேன். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. பரிந்து மன்றாடல்.

நட : கிறிஸ்துவின் முழுத் திரு அவைக்காகவும், எல்லா மனிதருடைய தேவைக்காகவும் நாம் ஒரே உள்ளத்தோடும் ஒரேசிந்தையோடும் நமது வேண்டுதல்களை ஏறெடுப்போமாக.

முழு உலகத்தினதும் சமாதானத்திற்காக, நாடுகள் மத்தியிலும் எல்லா மனிதர் மத்தியிலும் நல்லுறவும், புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காக; எல்லா ஆட்சியாளர்களும் நீதியோடும், அமைதியோடும் ஆளுகை செய்ய வேண்டும் என்பதற்காக; மனிதர் தம் நாளாந்த வாழ்விலும் வேலையிலும் கடவுளுடைய விருப்பத்தையே நிறைவேற்றி மகிழ்வடைய வேண்டும் என்பதற்காக மன்றாடுவோம்.

அவை: கர்த்தாவே உமது இரக்கத்தில்.
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நட: கடவுளுடைய நோக்கங்கள் நிறைவு பெறும் வகையில்; துன்புறுவோர், நண்பர் இல்லாதோர், தேவைகளுள்ளோர் மத்தியில் பணிசெய்வோருக்காக; கிறிஸ்தவ சாட்சி நம்மில் விளங்கும் வண்ணம், நமக்குத் தீமை செய்வோர். நமது எதிரிகளுக்காக; துக்கமாயிருப்போர், முதிர்வயதுடையோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரிக்கும் நிலையினிலுள்ளோர் யாவரும் பெலப்பட்டு ஆறுதல் அடையவேண்டும் என்பதற்காக மன்றாடுவோம்.
கர்த்தாவே உமது இரக்கத்தில்.

**அவை:** எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**நட:** கிறிஸ்துவினுடைய திரு அவையானது, ஒரே ஆண்டவர் ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு ஆகியவற்றில் நிலைத்திருக்கவும், அருட்செய்தி பரப்புதலில் ஈடுபட்டிருக்கும் யாவரும் எல்லா மனிதரையும் தந்தை யாரிடத்தே அழைத்து வரவும்; கடவுள்வாக்கைப் பெறும் யாவரும் அவருடைய மாட்சிமையை வெளிப்படுத்தவும் வேண்டுமென மன்றாடுவோம்.
கர்த்தாவே உமது இரக்கத்தில்.

**அவை:** எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**நட:** உமது தூயர்கள் யாவர் நிமித்தமும் உம் மைப் போற்றுகிறோம் ஆண்டவரே. நாங்கள் அவர்களுடைய ஐக்கியத்தில் பெலப்பட்டு, அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி வாழ்ந்து, முடிவிலே அவர்களோடு சேர்ந்து உமது பேரானந்தத்தின் நிறைவை அனுபவிக்க அருள் செய்யும். ஆண்டவராகிய கடவுளே தூய்மையும் நம்பிக்கையுமானவரே, உமது பணிக்கென நீரே எங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தவர்; உமது விருப்பை நாங்கள் அறியவும் அவற்றையே நாங்கள் செய்யவும் உதவியருளும்; உமது அழைப்புக்கு ஏற்றவிதமாய் நாங்கள் வாழ, எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவில் இரங்கியருளும். ஆமென்.

13. அவை அறிவிப்புகள்

14. பாட்டு - இவ்வேளையில் திருப்பணிக்கான காணிக்கை சேர்க்கப்படும்.

15. அருளுரை

16. பாட்டு

17. அருட்பேறு

நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள் செயல்பட கடவுள் வல்லவராய் இருக்கிறார். அவருக்கே, திருச்சபையில் கிறிஸ்து இயேசுவின்மூலமாய் தலைமுறையாகவும், காலம் காலமாகவும் மாட்சிமை உண்டாவதாக.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வழிபாடு

1. திருமணம் செய்ய வந்திருக்கும் மணமகனும், மணமகளும் திருப்பணியாளருக்கு முன்பாக வந்துநிற்க வேண்டும் மணமகள், மணமகனின் இடது பக்கத்தில் நிற்பதேமுறை. திருப்பணியாளர் விரும்பியபடி வழிபாட்டு முறைமையை மாற்றியமைக்கலாம். உதாரணமாக, 1-ம் பாட்டிற்குப்பின் பகுதிகள் 7,8,9,வரலாம்.

2. பாட்டு

நோக்கம் அறிவிக்கப்படல

3. அவையினர் உட்கார்ந்திருக்க, திருப்பணியாளர் அவையினரைப் பார்த்துச் சொல்லவேண்டியது.

அன்பானவர்களே, மணமகனாகிய (அ) வினதும், மணமகளாகிய (ஆ) வினதும், திரு மணத்திற்குச் சாட்சிகளாய் இருக்கவும், அவர்களை விண்ணப்பத்தில் தாங்கவும். அவர்களுடைய மகிழ்ச்சியில் பங்கு கொள்ளவும், நாம் கடவுள் முன்னிலையில் இங்கே கூடிவந்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் கடவுளால் கொடுக்கப்ப டுகிறது. அதை அப்பமாகவும் சுயநலமாயும் எண்ணாமல். பொறுப்புணர் வோடும் கடவுள் அன்போடும் ஏற்று. அதில் பிரவேசிக்க வேண்டும்.

கிறிஸ்துவானவரின் போதனைப்படி: திரு மணமானது: ஒரே மணமகன் ஒரே மணமகள் ஆகியோரின் உடல். சிந்தை. ஆவி ஆகியவற்றின் வாழ்நாள் இணைப்பாகும். மணமகனும்.மணமகளும தம் வாழ்வுமுழுவதும் ஒருவருக் கொருவர் அன்பினால் நிறைவு கண்டு: தோழமையும். உதவியும். ஆதரவும் அளிக்க வேண்டும் என்பதே அவருடைய சித்தமாகும். கடவுளுடைய உதவியினால் இந்த அன்பானது வருடங்களுக் கூடாக. ஆழமான வளர்ச்சியடைகின்றது இப்படிப்பட்ட திருமணமே. மெய்யான குடும்ப வாழ்வின் அடித்தளமாகும். பிள்ளைகள் கொடையாகக் கிடைக்கின்ற பொழுது. அது மனித இனத்தின் தொடர்ச்சிக்கான கடவுளின் தெரிந்தெடுத்த வழியாகவும். பிள்ளைகள் பாதுகாப்புக்குள்ளும் நம்பிக்கைகுள்ளும் வளர்க்கப்படவேண்டிய இடமாகவும் அமைகின்றது. கணவன் மனைவி இணைப்பானது. கிறிஸ்துவினதும் அவருடைய திரு அவையினதும் இணைப்பைப் போன்றது என்று திருமறை கூறுகின்றது. அவர் தமது திருஅவையை நேசித்தபடியினால், அதற்காகத் தம்மையே கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகனாகிய (அ) வும். மணமகளாகிய (ஆ) வும் இப்பொழுது ஒருவரை யொருவர் திருமணத்தில் ஏற்றுக்கொண்டு. அவர்களுடைய குடும்ப வாழ்வுக்காகக் கடவுளுடைய ஆசீர்வாதத்தை நாடி நிற்கின்றார்கள். இவர்கள் திருமணம் செய்வதற்குச் சட்டப்படி ஏதாவது தடையான நியாயம் உங்களில் எவருக்காவது தெரியுமேயானால். அதை அவர் இப்பொழுதே தெரியப்படுத்த வேண்டும். அல்லது. இதுபற்றி இனிமேல் ஒன்றுமே கூறக் கூடாது.

## சட்டப்படியான உறுதிமொழிகள்

4. திருமணம் செய்ய வந்திருப்போரைப் பார்த்து திருப்பணியாளர் சொல்ல வேண்டியது:

நீங்கள் இருவரும் திருமணத்தில் ஒன்றாய் இணைக்கப்படுவதற்குத் தடையான நியாயம் உங்கள் இருவரில் எவருக்காவது தெரியுமே யானால்.அதை நீங்கள் இப்பொழுதே தெரியப்படுத்த வேண்டுமென்று கடவுள் முன்னிலையிலும். இந்த அவையினர் முன்னிலையிலும். நான் உங்கள் இருவருக்கும் கட்டளையிடுகிறேன்.

5. மணமகன் சொல்லவேண்டியது: (அ) ஆகிய நான் (ஆ) ஆகிய இவரை சட்டப்படி திருமணம் செய்வதற்கு யாதொரு தடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கில்லை என்று இத்தால்
அறிக்கையிடு கிறேன்.

6. மணமகள் சொல்லவேண்டியது. (ஆ) ஆகிய நான். (அ) ஆகிய இவரை சட்டப்படி திருமணம் செய்வதற்கு யாதொரு தடையும் எனக்கில்லை என்று இத்தால் அறிக்கையிடுகிறேன்.

### சுருக்க விண்ணப்பம்

7. **திரு: விண்ணப்பம் செய்வோமாக.** எல்லா இருதயங்களையும் அவற்றின் விருப்பங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிற எல்லா வல்லமையுமுள்ள கடவுளே; உமக்கு மறைவாய் இருப்பது ஒன்றுமேயில்லை . நாங்கள் உம்மிடத்தில் நிறைவாய் அன்புகூரவும், உமது திருப்பெயரை யோக்கியமாய்த் துதிக்கவும் தக்கதாக, நீர் எங்கள் இருதயங்களை உமது தூய ஆவியானவரின் தூண்டுதலினால் தூய் மைப் படுத்தியருள வேண்டுமென்று கர்த்தராகிய கிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

### பாவ அறிக்கை

8. திருப்பணியாளர் ( அல்லது திருப்பணியாளரும் அவையினரும்) சொல்லவேண்டியது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளே, உமது தராளமான அன்பு எங்களைச் சுற்றியிருக்கிறது, நாங்கள் அனுபவிக்கும் யாவும் உம்மிடமிருந்தே வருகின்றன. உமது நன்மைகளுக்குத் தக்கதாக நாங்கள் நன்றியோடு வாழவில்லை என்பதையும், உமது கொடைகளை சுயநலத்திற்காகவே உபயோகம் செய்தோம் என்பதையும் வெட்கத்தோடே அறிக்கை யிடுகிறோம் நீர் எங்கள் பாவங்களை மன்னித்து, மெய்யான நன்றியறிதலினால் எங்களை நிரப்பியருள வேண்டு மென்று, உம்மோடும் தூய ஆவியானவரோடும் நாங்கள் என்றென்றும் துதித்து வழிபடுகின்ற எங்கள் இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகின்றோம். **ஆமென்.**

9. **கர்த்தருடைய விண்ணப்பம்**
( 7,8, ஆம் பக்கம் பார்க்கவும்)

## திருமணப் பிரதிக்கினை

10. எல்லாரும் எழுந்து நிற்க,
திருப்பணியாளர் சொல்ல வேண்டியது:
அன்பின் கடவுளே, (அ), (ஆ) ஆகிய இருவரையும் அன்பிலும் நம்பிக்கையிலும் உமக்கு முன்பாக நீர் கொண்டு வந்தது போல:. உமது தூய ஆவியானவரின் வல்லைமையினால் இவர்கள் தங்கள் பிரதிக்கினைகளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அவற்றைக்காத்துக் கொள்ளவும்
செய்தருள வேண்டுமென்று,
ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின்
மூலம் வேண்டிக் கொள்ளுகின்றோம்
ஆமென்.

11. திருப்பணியாளர் மணமகனைப் பார்த்துச் சொல்லவேண்டியது:
(அ) ஆகிய நீர், பரிசுத்த திருமண நிலைமையில் கடவுளுடைய நியமப்படி, (ஆ) வை, உமது மனைவியாக
ஏற்றுக்கொள்ள விரும்பு கிறீரா .
சுகத்திலும் சுகவீனத்திலும் இந்தப் பெண்ணை நேசித்து, ஆதரித்து, கனப்படுத்தி , காப்பாற்றி நீங்கள் இருவரும் உயிரோடிருக்கு மளவும் அவருக்கு உண்மையுள்ள கணவனாயிருக்கச் சம்மதிக்கின்றீரா .

12. மணமகன் சொல்லவேண்டியது :
ஆம், அப்படிச் செய்ய பிரியப்படுகிறேன்.

13. திருப்பணியாளர் மணமக்களைப் பார்த்துச் சொல்ல வேண்டியது:
(ஆ) ஆகிய நீர், பரிசுத்த திருமண நிலைமையில் கடவுளுடைய நியமப்படி, (அ) ரை, உமது கணவனாக
ஏற்றுக்கொள்ள விரும்புகிறீரா.
சுகத்திலும் சுகவீனத்திலும் இவரை நேசித்து, கனப்படுத்தி, காப்பாற்றி, நீங்கள்இருவரும் உயிரோடிருக்குமளவும் இவருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையுள்ள மனைவியாயிருக்கச் சம்மதிக்ககிறீரா.

14. மணமகள் சொல்ல வேண்டியது:
ஆம், அப்படிச் செய்யப் பிரியப்படுகிறேன்.

15. திருப்பணியாளர்: இந்த மணமகளை மணமகனுக்கு மனைவியாகக் கொடுப்பவர் யார்?

(தகப்பன் அல்லது பொறுப்பாளி அல்லது உத்தரவாதமுள்ள ஒருவர், "நான்" என்று சொல்லி, மணமகளின் வலது கையில் கொடுக்கவேண்டும். ஒருவரும் இல்லாவிடில், திருப் பணியாளர் தாமே மணமகனை மணமகளின் கரத்தைப்பிடிக்கச் செய்யலாம்).

16. திருப்பணியாளர் மணமகளின் வலது கரத்தை மணமகனின் வலது கரத்தோடு இணைத்தபின், மணமகன் திருப்பணியாளர் சொல்லுவது போல் சொல்லவேண்டியது:
இங்கே கூடியிருக்கும் மக்கள் சாட்சியாயிருக்க,
(அ) ஆகிய நான், (ஆ) ஆகிய உம்மை என்மனைவியாக ஏற்றுக்கொண்டு, கடவுளுடைய தூய நியமத்தின்படி நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் சுகயீனத்திலும் இன்று தொடக்கம் மரணம் நம்மைப்பிரிக்குமளவும், உம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிக்கவும், காப்பாற்றவும்,
கனம்பண்ணவும் வாக்குக்
கொடுக்கிறேன்.

17. அப்படியே, மணமகனின் வலது
கரத்தையும், மணமகள் தனது வலது
கரத்தினால் இணைத்தபின், மணமகள்
திருப்பணியாளர் சொல்வது போல்
சொல்ல வேண்டியது:
இங்கே கூடியிருக்கும் மக்கள்
சாட்சியாயிருக்க, (ஆ) ஆகிய நான்,
(அ), ஆகிய உம்மை என
கணவனாக ஏற்றுக்கொண்டு,
கடவுளுடைய தூய நியமத்தின்படி;
நன்மையிலும் தீமையிலும்,
வாழ்விலும் தாழ்விலும்,
சுகத்திலும் சுகயீனத்திலும்;
இன்று தொடக்கம் மரணம் நம்மைப்
பிரிக்குமளவும், உம்மை நேசிக்கவும்,
காப்பாற்றவும், கனம்பண்ணவும்
வாக்குக் கொடுக்கிறேன்.

மாங்கல்யம் அல்லது மோதிரம்
அல்லது
இரண்டும் அணிதல்.

18. மாங்கல்யமும் மோதிரமும்/ங்களை)
திருமறையில் வைக்கப்பட்டபின்
திருப்பணியாளர், அதை/ அவற்றை
ஆசீர்வதித்துச் சொல்ல வேண்டிய
விண்ணப்பம்:

இரக்கமுள்ள ஆண்டவரே, இந்தத் திரு
மாங்கல்யத்தை (மோதிரத்தை/களை)
அணிந்து கொள்ளுபவரும்/வர்களும்
தாங்கள் செய்த வாக்குறுதிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது/இவை அடையாளமும் உறுதியுமாயிருக் கும்படி நீர் இதை/இவற்றை ஆசீர்வதித்து, இவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக் கவும், தங்கள் வாழ்நாள் முழுவதும் அன்பில் நிலைத்திருக்கவும் கிருபை கூர்ந்தருள வேண்டு மென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம், ஆமென்.

19. ஆசீர்வதிக்கப்பட்ட திருமாங்கல்யமும் (மோதி ரமும்/களும்) அணியப்பட்டபின், மணமக்கள் இருவரும் ஒருமித்துச் சொல்ல வேண்டியது (மணமகன் திருமாங்கல்யத்தை தனது வலது கையினால் பிடிக்கலாம்):

**இந்தத் திருமாங்கல்யத்தினால் (மோதிரத் தினால்/களினால்) தந்தை, மைந்தன், தூய ஆவியானவரான கடவுளின் திருப்பெயரில் நாங்கள் ஒருவருக்கொருவர் எங்களை ஒப்புக் கொடுக்கிறோம். ஆமென்.**

(மோதிரத்தை மணமகன் வலது கை விரலிலும், மணமகள் இடது கை விரலிலும் அணிவதே முறை).

20. வேண்டுமானால் எல்லாரும் விண்ணப்ப நிலை யில் இருக்க, ஆசீர்வாதம் பாட்டாகப் பாடப் படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணப் பிரகடனம

21. திருப்பணியாளர் தம்பதியின் வலக்கரங்களைஇணைத்துச் சொல்ல வேண்டியது.

(அ) வும், (ஆ) வும் கடவுளுக்கு முன் பாகவும், இந்த மக்களுக்கு முன்பாகவும் பயபக்திக்குரிய உடன்படிக்கையைச் செய்து, கைகளை இணைத்து, திருமாங்கல்யத்தை (மோதிரத்தை/களை) கொடுத்தும் அணிந்தும்தங்களை ஒருவருக் கொருவர் ஒப்புவித்திருக்கிற படியினால், இவர்கள் கணவனும் மனைவியுமாயிருக்கிறார்களென்று, தந்தை மைந்தன், தூய ஆவியானவரின் நாமத்தினாலே நான் அறிவிக்கிறேன். எனவே, கடவுள், இணைத் தவர்களை மனிதன் பிரிக்காதிருப்பானாக.

ஆமென்.

தந்தையாகிய கடவுள், குமாரனாகிய கடவுள்,தூய ஆவியாகிய கடவுள் உங்களை ஆசீர்வதித்து காத்து, வழிநடத்தக்கடவர். உங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருமித்து சமாதானத்தோடே நீங்கள் வாழும்படி, அவர் தம் கிருபையின் நிறைவை உங்கள் மேல் ஊற்றி, நீங்கள் இறுதியல் நித்திய வாழ்வை அடையும்படி தமது இரக்கத்தை உங்கள்மேல் பொழிந்தருளுவாராக.

ஆமென்.

22. பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவசனப் பணி

23. மணமக்கள் ஆசனத்தில் அமர்ந்தபின், பின் வரும், திருமறைப் பகுதிகளில் விரும்பியவற்றை அல்லது வேறு பொருத்தமானவற்றை வாசிக்கலாம். மத்தேயு 19:4-6; 1 கொரிந்தியர் 13:4-13; எபேசியர் 3;14-19; கொலோசேயர் 3:12-16அ, 17.

24. அருளுரை.

25. பாட்டு.

## பரிந்து வேண்டுதல்

26.திரு:விண்ணப்பம் செய்வோமாக (இவ்விடத்தில் மேலதிக விண்ணப்பங்கள் சொல்லப்படலாம். அதன் பின்பு பின்வரும் பரிந்து வேண்டலை திருப்பணியாளர் வழிநடத்த வேண்டும்.

திரு :கடவுளே எல்லாக் கிருபையும் உம்மிடமிருந்தே வருகின்றன, நீர் ஒருவரே நித்தியவாழ்வின் ஊற்றாய் இருக்கிறீர். உமது அடியாராகிய (அ) வையும் (ஆ) வையும் ஆசீர்வதித்தருளும்.

அவை:அவர்கள் வாழ்நாள் முழுவதும் விசுவாசமாய் இணைந்துவாழ இரங்கியருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு: அவர்களுடைய மகிழ்ச்சியில் நீர் அவர் களோடு இரும்.

அவை: உம்முடைய மகிழ்ச்சி அவர்களில் நிலைத் திருக்கவும், அதுநிறைவாய் இருக்கவும் இரங்கியருளும்.

திரு: துன்பம் ஏற்படும் போதெல்லாம் நீர் அவர்களைப் பெலப்படுத்தியருளும்.

அவை: அவர்கள் ஒருவர் சுமையை ஒருவர் சுமந்து, கிறிஸ்துவின் கட்டளையை நிறை வேற்ற இரங்கியருளும்.

திரு: அவர்கள் வீட்டில் உமது ஆசீர்வாதம் தங்குவதாக.

அவை: உமது சமாதானம் அங்கே நிலைநிற்க இரங்கியருளும்.

திரு: அவர்கள் வீடு நல்லவரவின் இல்லமாய் இருக்கட்டும்,.

அவை: அதன் மகிழ்ச்சி இலவசமாய்ப் பகிர்ந் தளிக்கப்பட இரங்கியருளும்.

திரு: (அ) யினதும், (ஆ) யினதும் குடும்பத் தினரையும், நண்பர்களையும் ஆசீர்வதியும்.

அவை: நாம் யாவரும் அன்பிலும் நட்பிலும் இணைக்கப்பட இரங்கியருளும்.

திரு: வழுவாதபடி உங்களைக் காக்கவும், அவர் முன்னிலையில் மகிழ்ச்சியோடு மாசற்றவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாய் உங்களை நிறுத்துவதற்கு
வல்லமையுடைய அவருக்கு.

அவை:தாம் ஒருவரே கடவுளும் இரட்சகரு
மாய் உள்ள அவருக்கு, நமது
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்
மூலமாய்மகிமையும், மகத்துவமும்,
வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும்
எப்பொழுதும் உண்டாவதாக.

ஆமென்.

27. இப்பொழுது கர்த்தருடைய திருவிருந்து பரிமாறப்படலாம் அல்லது பின்வரும் தோத்திர விண்ணப்பம் அல்லது திருப்பணியாளருடைய சொந்த தோத்திர விண்ணப்பம் ஏறெடுக்கப்படலாம்.

## தோத்திரம்

28. எல்லாரும் எழுந்து நிற்க,
திருப்பணியாளர் சொல்லவேண்டியது:
எல்லாவற்றையும் உருவாக்கி,
மனிதனையும் தன் சொந்தச் சாயலில்
படைத்த உலகின் அரசராகிய
கடவுளுக்கு துதி தோத்திரம்
உண்டாவதாக.காதலையும்
திருமணத்தையும்; மகிழ்ச்சியையும்
இன்பத்தையும்; கொண்டாட்டத்தையும்
சிரிப்பையும், பிரியத்தையும்
பெருமகிழ்ச்சியையும்; அன்பு,
சகோதரத்துவம், சமாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம், ஐக்கியம் ஆகியவற்றையும் சிருஸ்டித்த கடவுளுக்கு துதி தோத்திரம் உண்டாவதாக.

சுயநலத்திலிருந்து நமது அன்பை மீட்பதற்கும், பாவத்திலிருந்து நம்மை இரட்சிப்பதற்குமாக இயேசு கிறிஸ்துவை அனுப்பினதற்காகவும்; அவரோடும் ஒருவரோடொருவரோடும் நாம் ஒன்றாய் இணைவதற்கு தூய ஆவியானவரைத் தந்தமைக்காவும்; கடவுளுக்கு துதி தோத்திரம் உண்டாவதாக.

**ஆமென்**

இப்பொழுது, விண்ணிலுள்ள சங்கத்தார் அனைவரோடும் சேர்ந்து, முடிவில்லா தோத்திரப்பாடலை ஏறெடுப்போமாக:

29. எல்லாரும் -

தூய தூய தூயரான ஆண்டவரேவல்லமையினதும் சக்தியினதும் கடவுளே விண்ணும்மண்ணும் உமது மகிமையினால் நிறைந்திருக்கின்றன

உன்னதத்திலே ஓசன்னா

திருவருள் அறிவிப்பு

30. **திருப்பணியாளர் பின்வருகிறபடி அல்லது வேறு முறைப்படி கூறுவார்:**

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையும், கடவுளின் அன்பும், தூய ஆவியானவரின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

**ஆமென்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்கனவே திருமணம் செய்தவர்களுக்கான ஆசீர்வாத வழிபாடு

1. மணமகனும், மணமகளும் திருப்பணியாளருக்கு முன்பாக வந்து நிற்கவேண்டும். மனைவியானவள் கணவனின் இடது பக்கத்தில் நிற்பதே முறை. திருப்பணியாளருடைய விருப்பப்படி வழிபாட்டு முறைமை மாற்றியமைக்கப்படலாம் (உதாரணமாக பகுதிகள் 4,5,6, 1-ம் பாட்டுக்குப்பின் வரலாம்).

2. பாட்டு

3. நோக்கம் அறிவிக்கப்படல்
அவையினர் உட்கார்ந்திருக்க, திருப்பணியாளர் அவையினரைப் பார்த்துச் சொல்லவேண்டியது:
அன்பானவர்களே, (அ)வும், (ஆ)வும், கடவுள் முன்னிலையில் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, திருமாங்கல்யமும், மோதிரமும்/களும் அணிய வந்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்காகக் கடவுளை நோக்கி மன்றாடும் படி நாமும் இக்கோவில் பிரகாரங்களில் கூடி யிருக்கிறோம்.

கிறிஸ்துவானவரின் போதனைப்படி திருமண மானது; ஒரேமணமகன்-ஒரேமணமகள் ஆகியோ ரின் உடல், சிந்தை, ஆவி ஆகியவற்றின் வாழ் நாள் இணைப்பாகும். கணவன் மனைவி இருவ ரும் தம்வாழ்வு முழுவதும் ஒருவருக்கொருவர் அன்பினால் நிறைவு கண்டு; தோழமையும், உதவியும், ஆதரவும் அளிக்க வேண்டுமென்பதே அவருடைய சித்தமாகும். கடவுளுடைய உதவி யினால் இந்த அன்பானது வருடங்களுக்கூடாக வளர்ச்சியடைகின்றது. இப்படிப்பட்ட திருமணமே, மெய்யான குடும்பவாழ்வின் அடித்தளமாகும்; பிள்ளைகள் ஈவாகக் கிடைக்கன்ற பொழுது, அது மனித இனத்தின் தொடர்ச்சிக்கான கடவுளின் தெரிந்தெடுக்கப்பட்ட வழியாகவும்; பிள்ளைகள் பாதுகாப்புக்குள்ளும் நம்பிக்கைக்குள்ளும் வளர்க்கப்பட வேண்டிய இடமாகவும் அமைகின் றது. கணவன் மனைவி இணைப்பானது, கிறிஸ்துவினதும் அவருடைய திருஅவையினதும் இணைப்பைப் போன்றது; அவர் தமது திருஅவையை நேசித்தபடியினால், அதற்காகத் தம்மையே கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விண்ணப்பம் செய்வோமாக- சுருக்கவிண்ணப்பம்

திரு: எல்லா இருதயங்களையும் அவற்றின் விருப்பங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிற எல்லா வல்லமையுள்ள கடவுளே; உமக்கு மறைவாய் இருப்பது ஒன்றுமேயில்லை. நாங்கள் உம்மிடத்தில் நிறைவாய் அன்பு கூரவும், உமது திருப்பெயரை யோக்கியமாய்த் துதிக்கவும் தக்கதாக, நீர் எங்கள் இதயங்களை உமது தூய ஆவியானவரின் தூண்டுதலினால் தூய்மைப்படுத்தியருள வேண்டுமென்று கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்

5. பாவ அறிக்கை

திருப்பணியாளர் (அல்லது திருப்பணியாளரும் அவையினரும்) சொல்லவேண்டியது;

கடவுளே, உமது தாராளமான அன்பு எங்களைச் சுற்றியிருக்கிறது, நாம் அனுபவிக்கும் யாவும் உம்மிடமிருந்தே வருகின்றன. உமது நன்மைகளுக்குத் தக்கதாக நாங்கள் நன்றியோடு வாழவில்லை என்பதையும் வெட்கத்தோடே அறிக்கையிடுகிறோம். நீர் எங்கள் பாவங்களை மன்னித்து, மெய்யான நன்றியறிதலினால் எங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நிரப்பியருள வேண்டுமென்று, உம்மோடும் தூய ஆவியானவரோடும் நாங்கள் என்றென் றும் துதித்து வழிபடுகின்ற எங்கள் இரட்சக ராகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆமென்.

6. கர்த்தருடைய விண்ணப்பம்
(7,8 ஆம் பக்கம் பார்க்கவும்)

7. பிரதிக்கினை- எல்லாரும் எழுந்து நிற்க.

திரு: (கணவனிடம்) நீர் இந்தப் பெண்ணை (பெயர் சொல்லலாம்) உமது சட்ட பூர்வ மான மனைவியாக ஏற்றுக் கொண்டிருக்கிறீர். இது கடவுள் சித்தத்தின் படியே ஏற்பட்டது என்பதை அவர் முன்னிலையில் நீர் அறிக்கை செய்ய விரும்புவதால், மரணம் உங்கள் இருவரையும் பிரிக்கும் வரை, நீர் உமது மனைவியை நேசித்து, கனப்படுத்தி, காப்பாற்றி, அவருக்கு மாத்திரமே உண்மையுள்ளவராய் வாழுவேன் என வாக்குக் கொடுக்கிறீரா?

கணவன் சொல்லவேண்டியது:

ஆம், கடவுளுடைய உதவியோடு அப்படியே வாழுவேன் என வாக்குக் கொடுக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு: (மனைவியிடம்) நீர் இவரை (பெயர் சொல் லலாம்) உமது சட்டபூர்வமான கணவனாக ஏற்றுக் கொண்டிருக்கிறீர். இது கடவுள் சித்தத் தின்படியே ஏற்பட்டது என்பதை அவர் முன்னிலையில் நீர் அறிக்கை செய்ய விரும்பு வதால், மரணம் உங்கள் இருவரையும் பிரிக்கும் வரை, நீர் உமது கணவனை நேசித்து, கனப்படுத்தி, காப்பாற்றி, அவருக்கு மாத்திரமே உண்மையுள்ளவளாய் வாழுவேன் என வாக்குக் கொடுக்கிறீரா?

மனைவி சொல்லவேண்டியது:
ஆம், கடவுளுடைய உதவியோடு அப்படியே வாழுவேன் என வாக்குக் கொடுக்கிறேன்.

8. மாங்கல்யம் அல்லது மோதிரம் அல்லது இரண்டும் அணிதல்:

மாங்கல்யமும், மோதிரமும்/களும் திருமறையில் வைக்கப்பட்டபின், திருப்பணியாளர் அதை/அவற்றை ஆசீர்வதித்துச் சொல்ல வேண்டிய ஜெபம்:
இரக்கமுள்ள ஆண்டவரே, இந்தத் திருமாங்கல்யத்தை (மோதிரத்தை/களை) கொடுப்பவரும்/வர்களும் அணிந்து கொள்ளுபவரும்/வர்களும் தாங்கள் செய்த வாக்குறுதிகளுக்கு இது/இவை அடையாளமும் உறுதியுமாயிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்படி நீர் இதை/இவற்றை ஆசீர்வதித்து, இவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையா யிருக்கவும் தங்கள் வாழ்நாள் முழுவதும் அன்பில் நிலைத்திருக்கவும் கிருபை கூர்ந்தருள வேண்டுமென்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஆமென்.

9. ஆசீர்வதிக்கப்பட்ட திருமாங்கல்யமும் (மோதிரமும் / களும்) அணியப்பட்டபின், மணமக்கள் இருவரும் ஒருமித்துச் சொல்ல வேண்டியது (மணமகன் தன் வலக்கையினால் திருமாங்கல்யத்தைப் பிடித்துக் கொண்டு):

நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் சுகயீனத்திலும், இன்று தொடக்கம் மரணம் நம்மைப் பிரிக்குமளவும், கிறிஸ்தவ திருமணத்தில் கடவுள் நம்மை ஒன்றிணைத்தார். அவருக்கே நன்றி. தந்தை, மைந்தன், தூய ஆவியானவரின் நாமத்திலே. ஆமென்.

(மணமகன் வலதுகை விரலிலும், மணமகள் இடதுகை விரலிலும் மோதிரங்களை அணிவதே முறை)

10. வேண்டுமானால், எல்லாரும் விண்ணப்ப நிலையில் இருக்க ஆசீர்வாதம் பாட்டாகப் பாடப் படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அதன்பின் திருப்பணியாளர் சொல்ல வேண்டியது:

கடவுள் இணைத்தவர்களை மனிதன் பிரிக்காதிருப்பானாக. ஆமென்.

தந்தையாகிய கடவுள், குமாரனாகிய கடவுள், தூய ஆவியானவராகிய கடவுள் உங்களை ஆசீர்வதித்து, காத்து வழிநடத்தக்கடவர். உங்கள் வாழ்நாள் முழுவதும் ஒருமித்து சமாதானத்தோடே நீங்கள் வாழும்படி, அவர்தம் கிருபையின் நிறைவை உங்கள்மேல் ஊற்றி, இறுதியில் நித்திய சீவனை நீங்கள் அடையும்படி தமது இரக்கத்தை உங்கள்மேல் பொழிந் தருளுவாராக. ஆமென்.

12. பாட்டு

13. திருவசனப்பணி: மணமக்கள் ஆசனத்தில் அமர்ந்தபின், பின்வரும் திருமறைப்பகு திகளில் விரும்பியவற்றை அல்லது வேறுபொருத் தமானவற்றை வாசிக்க லாம்
மத்தேயு 19:4-6; 1 கொரிந்தியர் 13:4-13; எபேசியர் 3:14-19; கொலோசேயர் 3:12-16அ,17

14. அருளுரை

15. பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. பரிந்து வேண்டல்

திரு: விண்ணப்பம் செய்வோமாக (இவ்விடத்தில் மேலதிக விண்ணப்பங்கள் சொல்லப் படலாம். அதன் பின்பு பின்வரும் பரிந்துவேண்டலை திருப்பணியாளர் வழிநடத்த வேண்டும்)

கடவுளே, எல்லாக் கிருபையும் உம்மிடமிருந்தே வருகின்றன, நீர்ஒருவரே நித்திய வாழ்வின் ஊற்றாய் இருக்கிறவர். உமது அடியாராகிய (அ) வையும் (ஆ) வையும் ஆசீர்வதித்தருளும்.

அவை: அவர்கள் வாழ்நாள் முழுவதும் விசுவாசமாய் இணைந்து வாழ இரங்கியருளும்.

திரு: அவர்களுடைய மகிழ்ச்சியில் நீர் அவர்களோடு இரும்.

அவை: உம்முடைய மகிழ்ச்சி அவர்களில் நிலைத் திருக்கவும், அது நிறைவாய் இருக்கவும் இரங்கியருளும்.

திரு: துன்பம் ஏற்படும் போதெல்லாம் நீர் அவர்களைப் பெலப்படுத்தியருளும்.

அவை: அவர்கள் ஒருவர் சுமையை ஒருவர் சுமந்து, கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்ற இரங்கியருளும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு: அவர்கள் வீட்டில் உமது ஆசீர்வாதம் தங்குவதாக.

அவை: உமது சமாதானம் அங்கே நிலைநிற்க இரங்கியருளும்.

திரு: அவர்கள் வீடு நல்வரவின் இல்லமாய் இருக்கட்டும்.

அவை: அதன் மகிழ்ச்சி இலவசமாய்ப் பகிர்ந்தளிக்கப்பட இரங்கியருளும்.

திரு: (அ) வினதும், (ஆ) வினதும் குடும்பத்தினரையும், நண்பர்களையும் ஆசீர்வதியும்.

அவை: நாம் யாவரும் அன்பிலும் நட்பிலும் இணைக்கப்பட இரங்கியருளும்.

திரு: வழுவாதபடி உங்களைக் காக்கவும், அவர் முன்னிலையில் மகிழ்ச்சியோடு மாசற்றவர்களாய் நம்மை நிறுத்துவதற்கு வல்லமையுடைய அவருக்கு.

அவை: தாம் ஒருவரே கடவுளும் இரட்சகருமாய் உள்ள அவருக்கு, நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய் மகிமையும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும், இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக
ஆமென்.

17. இப்பொழுது கர்த்தருடைய திருவிருந்து பரி மாறப்படலாம். அல்லது பின்வரும் தோத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திர விண்ணப்பம் அல்லது திருப்பணி யாளருடைய சொந்த தோத்திர விண்ணப்பம் ஏறெடுக்கப் படலாம்.

18 தோத்திரம் - எல்லாரும் எழுந்து நிற்க:

திரு: எல்லாவற்றையும் உருவாக்கி, மனிதனையும் தன் சொந்தச் சாயலில் படைத்த உலகின் அரசராகிய கடவுளுக்குத் துதி தோத்திரம் உண்டாவதாக.

காதலையும் திருமணத்தையும்;மகிழ்ச்சி யையும் இன்பத்தையும் கொண்டாட்டத் தையும் சிரிப்பையும்: அன்பு, சகோதரத்துவம், சமாதானம், ஐக்கியம் ஆகியவற்றையும் உருவாக்கிய கடவுக்குத் துதி தோத்திரம் உண்டாவதாக.

சுயநலத்திலிருந்து நமது அன்பை மீட்பதற்கும்,பாவத்திலிருந்து நம்மை இரட்சிப்பதற்குமாக இயேசுக் கிறிஸ்துவை அனுப்பினதற்காகவும்; அவரோடும் ஒருவ ரோடொருவரோடும் நாம் ஒன்றாய் இணை வதற்கு தூய ஆவியானவரைத் தந்தமைக் காகவும்; கடவுளுக்குத் துதி தோத்திரம் உண்டாவதாக. ஆமென்.

19. இப்பொழுது, விண்ணிலுள்ள சங்கத்தார் அனைவரோடும் சேர்ந்து, முடிவில்லாத தோத்திரப்பாடலை ஏறெடுப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும்: தூய, தூய, தூயரான ஆண்டவரே வல்லமையினதும் சக்தியினதும் கடவுளே விண்ணும் மண்ணும் உமது மகிமையினால் நிறைந்திருக்கின்றன, உன்னதத்தில்

-ஓசன்னா

20. திருவருள் அறிவிப்பு - திருப்பணியாளர் பின்வருகிறபடி அல்லது வேறு முறைப் படி ஆசீர்வாதம் கூறுவார்:

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையும், தந்தையாகிய கடவுளின் அன்பும், தூய ஆவியானவரின் ஐக்கி யமும் உங்கள் அனைவரோடும் இருப்பததாக. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை திருமுழுக்கு வழிபாட்டு ஒழுங்கு

## ஆயத்தம்

1. பாட்டு
2. கர்த்தருடைய விண்ணப்பம், இதைப் பிற்பாடும் சொல்லலாம் (7,8ஆம்பக்கம்).
3. ஞாயிறு வழிபாடு. ஆயத்தப் பகுதியிலிருந்து ஏதாவது பகுதி.
4. அந்த நாளுக்குரிய சுருக்க விண்ணப்பம் அல்லது வேறு விண்ணப்பம் அல்லது பின்வரும் விண்ணப்பம்:

குரு: விண்ணிலிருக்கும் எங்கள் தந்தையே, நீர் ஒவ்வொரு தலைமுறையிலும் உமது திருச் சபைக்குத் தருகின்ற புதிய மகன்களுக்கா கவும், மகள்களுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். திருமுழுக்கின் மூலமாய் நாங்கள் ஏற்றுக் கொள்ளவிருக்கிற இந்தக் குழந்தை, உம்மை அதிகமாய் அறியவும், நாளுக்குநாள் உம்மிடம் அன்பில் வளரவும் நீர்தாமே இரங்கியருள வேண்டுமென்று உமது மகனும் எங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

திருவசனப் பணி

5. பழைய ஏற்பாடு அல்லது நிருப திருமறைப்பகுதி வாசிக்கப்படலாம்.

6. விரும்பினால், ஒரு அருளுரை ஆற்றப்படலாம்.

7. பின்வரும் நற்செய்திப் பகுதிகள் வாசிக்கப் படல் அல்லது இரண்டு பகுதிகள் இங்கேயும், மூன்றாவது பின்பும் வாசிக்கப்படல்:

அ) மாற்கு எழுதிய அருட்செய்தி 1ம் அதிகாரம் 9ம் வசனம் முதல்:
அக்காலத்தில் ஒருநாள் இயேசு கலிலேயா விலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்து வந்து, யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். பிறகு அவர் தண்ணீரை விட்டு வெளி யேறி வருகையில், வானம் பிளவுபடுவதையும், ஆவியானவர் புறாவைப் போலத் தன்மேல் இறங்குவதையும் கண்டார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு வாக்குப்பிறந்து, "நீர் என்னுடைய அன்பார்ந்த மைந்தர்; "உம்மால் பெரு மகிழ்ச்சியடைகிறேன்" என்று உரைத்தது.

ஆ) மாற்கு எழுதிய அருட்செய்தி 10ம் அதிகாரம் 13ம் வசனம் முதல்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு சிறுபிள்ளைகளைத் தொட்டு ஆசீர் வதிக்க வேண்டுமென்று அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர், கொண்டு வந்தோரைச் சீடர்கள் கடிந்து கொண்டார்கள். இயேசுவோ அதைக் கண்டு சினமடைந்து, "சிறு பிள்ளைகள் என்னிடம் வர அவர்களுக்கு இடங் கொடுங்கள், அவர்களைத் தடை செய்யாதிருங் கள், கடவுளின் அரசு அப்படிப்பட்டவர்களு டையது. ஒரு சிறு பிள்ளை ஏற்பது போல, கடவுளின் அரசை எவன் ஏற்றுக்கொள்ளவில் லையோ அவனால் அதனுள் செல்ல இயலாது. இது உறுதி என்று உங்களுக்குச் சொல்லுகி றேன்" எனக் கூறிவிட்டு, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

(இ) மத்தேயு எழுதிய அருட்செய்தி 28ம் அதிகாரம் 18ம் வசனம் முதல்:

அப்பொழுது இயேசு சீடருக்கு அருகில் வந்து அவர்களோடு பேசினார். "எனக்கு விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் அருளப் பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லா நாட்டினரையும் சீடராக்குங்கள், அவர்களுக்குத் தந்தையார், மைந்தர், தூய ஆவியானவரின் திருப்பெயரால் திருமுழுக்குக் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ யுக முடிவு வரை எல்லா நாட்களிலும் நான் உங்களோடு இருக்கிறேன்" என்று அவர்களுக்குச் சொன்னார்.

8. திருப்பணியாளர் சொல்ல வேண்டியது:

அன்பானவர்களே, கிறிஸ்துவிற்குள் புது வாழ்வின் அடையாளமாய் நீரினால் திரு முழுக்குப் பெற்று கடவுளின் குடும்பமாகிய திரு அவையில் உறுப்பினராவதற்கு கிறிஸ்தவ்தாய் தந்தையர் தம் பிள்ளைகளைக் கொண்டு வருகிறார்கள். கடவுள் நமது பொறுப்பில் தந்துவிட்ட இந்தப்பிள்ளையை யும் நாம் அவ்விதமே கொண்டு வந்து, கிறிஸ்து நம்மெல்லாருக்காகவும் வெற்றி கொண்டவற்றை இப்பிள்ளை பெறும்படி உரிமைகொண்டாடுகிறோம். கிறிஸ்து இப்பிள்ளையை நேசிக்கின்றார், இரக்கத்தின் கரங்களினால் அரவணைத்து, நித்திய வாழ்வின் ஆசீர்வாதத்தினால் ஆசீர்வதித்து, இப்பிள்ளையை தம்மிடம் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கின்றார்.

திருமுழுக்கு விண்ணப்பம்

9. வேண்டுதல் செய்வோமாக:

திருப்பணியாளர் திருமுழுக்குத் தொட்டியண்டை நிற்றல். அவை யினர் எழுந்து நிற்க எல்லாரும் சேர்ந்து சொல்ல வேண்டியது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையே, நீர் எல்லாவற்றையும் படைத்து, எங்களை உமது சாயலில் உருவாக்கியமைக்காக உம்மைத் துதிக்கின்றோம்,

நாங்கள் பாவத்தில் விழுந்தபோது, நீர் எங்களை அதன் இருளில் விட்டுவிடாமல் உமது ஒரே இரட்சகராகத் தந்தமைக்காக உம்மைத் துதிக்கின்றோம்,

கிறிஸ்து தமது மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் தீமையின் வல்லமையை உடைத்தமைக்காக உம்மைத் துதிக்கின்றோம்,

தூய ஆவியானவரை அனுப்பி எங்களை புதிய படைப்புக்களாக்கிய உமது தயவுக்காக உம்மைத் துதிக்கின்றோம்; ஆமென்.

**திருப்பணியாளர் சொல்லவேண்டிய ஜெபம்:**

தந்தையே, தூய ஆவியானவரின் வல்லமையில் நீர் எங்களோடு இருந்தருளும். இப்போது நீரினால் திருமுழுக்குப் பெறப்போகிற இந்தப் பிள்ளை, பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவில் புது வாழ்வுக்கென்று எழுப்பப்பட வேண்டு மென்று உம்மிடம் மன்றாடுகின்றோம். ஆமென்.

இப்பிள்ளை இயேசுக் கிறிஸ்துவையே தன் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்று, நம்பிக்கை வைத்து, அவரிலே கற்றுக்கொள்ள உதவியருள வேண்டுமென்று உம்மிடம் மன்றாடுகிறோம். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியானவரின் வல்லமையினால் இப் பிள்ளை தீமையை வென்றுவிட வேண்டுமென்று உம்மிடம் மன்றாடுகின் றோம். ஆமென்.

இப்பிள்ளையை இருளிலிருந்து ஒளியண்டை அழைத்து வாரும். மரணத்திலிருந்து நித்திய வாழ்வுக்குள் கொண்டு வாரும், எங்கள் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலமாய் வேண்டுகிறோம்.

ஆமென்.

### வாக்குத் தத்தங்களும் விசுவாசத்தை அறிக்கை செய்தலும்

10. திருப்பணியாளர் அவையினரைப் பார்த்துச் சொல்ல வேண்டியது:
கிறிஸ்துவின் உடல் உறுப்பினராகிய அவை யினரே, இப்போது கிறிஸ்துவின் நாமத்தில் இந்தப்பிள்ளையை நீங்கள் ஏற்றுக்கொள்ளப் போகின்றீர்கள். இந்தப் பிள்ளையும், உங்கள் மத்தியில் இருக்கும் எல்லாப் பிள்ளைகளும், கடவுளினதும், நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவினதும் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளரத்தக்கதாக, இங்கே வழிபாடும் சேவையும் கொண்ட பொது வாழ்வினைக்கட்டிக் காத்து வருவீர்களா?

அவை: கடவுளுடைய உதவியினால் நாங்கள் அப்படியே செய்வோம்.
*(அவையினர் உட்காருதல்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **பிள்ளையின் பெற்றோரிடம் அல்லது பாதுகாவலர்களிடம் திருப்பணியாளர் சொல்ல வேண்டியது**

திரு: அன்பான வர்களே, இந்தப் பிள்ளையை திரு முழுக்குப் பெறும்படி கொண்டு வந்திருக்கின் றீர்கள். இவன்/இவள் கிறிஸ்தவ மார்க்கத்தின் போதனைகளிலும் சலாக்கியங்களிலும், கடமைகளிலும் பயிற்றப்படும்படியாக திரும்பவும் இவனை/இவளைப் பெற்றுக் கொள்ளப் போகின்றீர்கள். எனவே பின்வருகிறபடி, வாக்குக் கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்:

விடை: அன்பும், பக்தியும் நிறைந்த ஒரு இல்லத்தை இந்தப் பிள்ளைக்குக் கொடுப்பீர்களா?

திரு: **கடவுளுடைய உதவியினால் நாங்கள அப்படியே செய்வோம்.**
இவன்/இவள் எல்லாத் தீமையையும் விட்டொழிக்கவும், இவனுடைய/இவளுடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவில் மாத்திரமே இவன்/இவள் நம்பிக்கை வைக்கவும் தக்கதாக உங்கள் வார்த்தைகளினாலும், வேண்டுதல்களினாலும், முன்னுதாரணங்களினாலும் உதவி புரிவீர்களா?

விடை: **கடவுளுடைய உதவியினால் நாங்கள அப்படியே செய்வோம்.**

திரு: இவன்/இவள் திருஅவையின் முழு உறுப்பி னராய் வந்து, கிறிஸ்துவுக்காக உலகில் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை திருமுழுக்கு வழிபாட்டு ஒழுங்கு

செய்து வாழுவதற்கு உரிய விளக்கம் அளிப்பீர்களா?

விடை: கடவுளுடைய உதவியினால் நாங்கள் அப்படியே செய்வோம்.

12. உத்தரவாதிகள் யாராவது இருந்தால், அவர்களைப் பார்த்து திருப்பணியாளர் சொல்லவேண்டியது:

அன்பானவர்களே, இந்த நியமத்தில் இங்கு நிற்கும் பெற்றாருக்கு ஆதரவாய் வந்துள்ள நீங்கள், அவர்கள் தம் பிள்ளையை கிறிஸ்தவமுறைப்படி வளர்ப்பதற்கு உதவி புரிவீர்களா?

விடை: கடவுளுடைய உதவியினால் நாங்கள் அப்படியே செய்வோம்.

(எல்லாரும் எழுந்து நிற்கவும்)

13. திரு: திருஅவையின் விசுவாச அறிக்கையைச் செய்வோமாக:

அ) எல்லாரும்: உலகத்தை உருவாக்கிய தந்தையாகியகடவுளை விசுவாசிக்கின்றோம், மனித குலத்தை மீட்டுக்கொண்ட அவருடைய மகனாகிய இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசிக்கின்றோம். கடவுளின் மக்களை புனிதப்படுத்தும்: தூய ஆவியானவரையும் விசுவாசிக்கின்றோம்

ஆமென்,

(அல்லது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) எல்லாரும்: விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே மைந்தராகிய நம்முடைய ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் தூய ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். போந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மரித்தோரிடத்திற்கு இறங்கினார். மூன்றாம் நாள் அவர் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணுலகிற்கு ஏறி, எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்க்கும்படி அவர் திரும்பவும் வருவார்.

தூய ஆவியானவரையும் விசுவாசிக்கிறேன். பொதுவான தூய அவையும், புனிதர்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், உடல் உயிர்த்தெழுதலும், நித்திய வாழ்வும் உண்டென்றும் விசுவாசிக்கிறேன். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. திருப்பணியாளர் பெற்றோரைப் பார்த்துச சொல்ல வேண்டியது: இப்பொழுது உங்கள் பிள்ளையை திருமுழுக்கிற்காக ஒப்புக்கொடுக்கி ன்றீர்களா?

விடை:ஆம், அப்படியே ஒப்புக்கொடுக் கிறோம்.

திருமுழுக்கு

15. திருப்பணியாளர் ஒவ்வொரு பிள்ளையையும் கையிலேந்தி, பெற்றாரிடம் அல்லது பாதுகாவ லரிடம் பிள்ளையின் பெயரை அறிந்தபின், அந்தப் பெயரைச் சொல்லி, பிள்ளையின் தலை மேல் நீர் ஊற்றி அல்லது தெளித்துச் சொல்ல வேண்டியது.

(அ)ஆகிய உமக்கு நான் தந்தை, மைந்தன், தூய ஆவியானவரின் திருப்பெயரில் திரு முழுக்குக் கொடுக்கிறேன். ஆமென்.

16. திருப்பணியாளர் பிள்ளையின் நெற்றியில் சிலுவை அடையாள மிட்டுச் சொல்ல வேண்டியது: நாம் இந்தப்பிள்ளையை திருமுழுக்கு மூல மாய்க் கிறிஸ்துவின் மந்தையாகிய திருஅவை யில் ஏற்றுக் கொள்ளு கின்றோம்.இந்தப்பிள்ளை சிலுவையிலறை யப்பட்ட கிறிஸ்துவில் தன் விசு வாசத்தை அறிக்கையிட வெட்கப்படாதிருக்கவும், தீமைக்கெதிராய் போராடவும், தன் வாழ்நாள் முடிவுபரியந்தம் கிறிஸ்துவின் உண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையுள்ள போர்ச்சேவகரும் தொண்டரு
மாய் நிலைத்திருக்கவும் தக்கதாக
ஆண்டவர் அருள் கூருவாராக.
ஆமென்.

எல்லாரும்: சொல்லுதல் அல்லது பாடுதல்.
கர்த்தர் உன்னை ஆசீர்வதித்துக் காக்கக்
கடவர், கர்த்தர் தம் முகத்தை உன்மேல்
பிரகாசிக்கப் பண்ணி, உன்னோடு
கிருபையாய் இருக்கக் கடவர், கர்த்தர்
தம்முடைய முகத்தை உன்மேல்
பிரசன்னமாக்கி, உனக்குச் சமா
தானத்தைத் தரக்கடவர். ஆமென்.

17. திருப்பணியாளர் அல்லது திருமுழு
க்குப் பதிவேட்டுச் செயலாளர்
பிள்ளையின் பெற்றாரிடம் அல்லது
பாதுகாவலரிடம் கொழுத்தப்பட்ட
ஒரு மெழுகுதிரியைக் கொடுத்து,
பிள்ளையிடம் சொல்ல வேண்டியது:

நான் இந்த அடையாளத்தை உனக்குத்
தருகிறேன், உலகத்தின் ஒளியாகிய
கிறிஸ் துவுக்கு நீ இப்பொழுது
சொந்தமானவன்/ள். மனிதர் உன்
நற்செயல்களைக் கண்டு, விண்ணக
த்திலிருக்கும் உன் தந்தையை புகழ்ந்து
போற்றும்படி, உன்னுடைய ஒளி
அவர்கள் முன் ஒளிர்வதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வேண்டுதல்கள்

18.திரு:வேண்டுதல் செய்வோமாக
தந்தையே, நீர் இந்தப் பிள்ளையை உமது குடும்பமாகிய திருஅவைக்குள், உமது சொந்தமாக ஏற்றுக் கொண்டமைக்காக உம்மை நாங்கள் ஸ்தோத்திரிக்கின்றோம் இவன்/இவள்

திருமுழுக்குப்பெற்ற விசுவாசத்திற்குள் வளரவும்,எல்லா மனிதர் முன்பாகவும் அந்த விசு வாசத்தைக் காத்துக் கொள்ளவும் உதவியருளும். ஆமென்.

இந்தப்பிள்ளையின் வீட்டை ஆசீர்வதியும், இந்தப்பிள்ளையின் பெற்றார் தம் பிள்ளைகளை பூரண அன்பின் பாதையில் வழிநடத்தத் தக்கதாக அவர்களுக்கு உமது புத்தியையும், கருணையையும் ஈந்தருளும். ஆமென்.

எங்கள் வழிபாடு, உலகத்தில் எங்கள் தொண்டு ஆகியவற்றின் மூலம் இந்தப் பிள்ளை கிறிஸ்துவைப் பின்பற்ற அறிந்து கொள்ளும் படி, தூய ஆவியானவரில் உமது திருஅவை பெலனடைய இரங்கியருளும். ஆமென்.
(அல்லது)

19. திருப்பணியாளர் தன் சொந்தச் சொற்களில் வேண்டுதல் செய்யலாம். பொது வழிபாடு தொடர்ந்து நடைபெறுமேயாகில், இவ்விடத்தில் திருப்பணியாளர் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக்குச் சம்பந்தப்பட்டவர்களை அனுப்பமுன் சொல்ல வேண்டியது:

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையும், கடவுளுடைய அன்பும், தூய ஆவியானவரின் ஐக்கியமும் நம்மனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

20. தொடர்ந்து நடைபெறும் பொதுவழிபாட்டில் மேலதிகத் திருமறைப்பாடங்கள் வாசிக் கப்பட்டு, ஏற்கனவே அருளுரை செய்யப் பட்டிருக்காவிடில், அருளுரையும் ஆற்றப் படலாம். அருளுரைக்குப் பின் வழிபாடு வழமைபோல தொடர வேண்டும். பரிர் து வேண்டல் விண்ணப்பம் சுருக் கப்படலாம் அல்லது தவிர்க்கப்படலாம், விசுவாச அறிக்கையையும் திரும்பவும் அறிக்கையிட வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ந்தோர் திருமுழுக்கு வழிபாட்டு ஒழுங்கு

1. பாட்டு

2. விண்ணப்பம்

திரு: விண்ணிலிருக்கும் எங்கள் தந்தையாகிய கடவுளே, திருமுழுக்கு என்னும் தூய நியமத்தை நீர் எங்களுக்குத் தந்ததிற்காக உம்மைத் துதிக்கிறோம். இங்கே நிற்கும் உமது அடியவர்/யார்,திருமுழுக்கின் மூலம் உமது உடலின் உறுப்புகளாய் ஆகவும்; அதனால் உமது மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் பங்கு கொள்ளுகிறவர்களாய் ஆகவும், நீர்தாமே கிருபை கூர்ந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

3. பின்வரும் பழைய ஏற்பாட்டு வாசிப்பு அல்லது வேறு பழைய ஏற்பாட்டு வாசிப்பு:

அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான தண்ணீரைத் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும், உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கி, உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்குப் புதிதான இரு தயங்களைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயங்களை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத் துப்போட்டு, சதையான இருதயங்களை உங்க ளுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என்கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும், அவைகளின் படி செய்யவும் பண்ணுவேன். உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன் - எசேக்கியேல்36:25-28

4. பின்வரும் நிருப வாசிப்பு அல்லது வேறு நிருப வாசிப்பு:

கிறிஸ்து இயேசுவுடன் இணைக்கப்படுவதற்கென்று திருமுழுக்குப் பெற்ற நாமனை வரும், அந்தத் திருமுழுக்கினால் அவருடைய மரணத்தில் மரணமடைந்துமிருக்கிறோம் என் பதை அறியீர்களா?. ஆகவே விண்ணகத் தந் தையாரின் மாட்சிமை பொருந்திய வல்லமை யால் கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிரோடெழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான மேல்நிலை வாழ்வைப் பெற்றவர்களாய் நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும்படி திருமுழுக்கின் மூலம் அவரோடு மரணம் அடைந்து அடக்கம் செய்யப்பட்டோம் - உரோமர் 6 : 3 - 4.

5. பாட்டு

6. நற்செய்தி வாசிப்பு :
அறிவிக்கப்பட்டவுடன் அவையினர் சொல்ல வேண்டியது :

நமது இரட்சகராகிய கிறிஸ்துவுக்கே மகிமை.

நிர்கொதேமு என்ற ஒரு மனிதர் இருந்தார்; அவர் பரிசேயர், யூதருடைய தலைவர்களுள் ஒருவர். அவர் ஒருநாள் இரவு இயேசுவினிடம் வந்து, "ரபீ நீர் கடவுளிடம் இருந்து வந்த போதகர் என்பது எங்களுக்குத் தெரியும். கடவுள் தன்னோடு இருந்தாலன்றி இந்த அரிய செயல்களைச் செய்ய முடியாது" என்றார். அதற்கு இயேசு, "ஒருவன் மறுபடியும் பிறந்தாலன்றிக் கடவுளின் அரசைக் காண முடியாது என்று மிகவும் உறுதியாக உன்குச் சொல்லுகிறேன்" என்று சொன்னார். அப்பொழுது நிக்கொதேமு, "வயதானபின் ஒருவன் எப்படிப் பிறக்க முடியும்? அவன் தன் தாயின் வயிற்றில் இரண்டாம் முறை நுழைந்து பிறக்கமுடியுமா?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி அவனால் கடவுளின் அரசினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினுள் செல்ல முடியாது என்று மிகவும் உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன். ஊனன் இயல்பினால் பிறப்பது ஊனன் இயல்புடையது. ஆவியினால் பிறப்பது ஆவியின் இயல்புடயது. நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து வியப்படைய வேண்டாம்" என்று சொன்னார் - யோவான் 3:1-7

வாசித்து முடிந்தவுடன் அவையினர் சொல்ல வேண்டியது:

நமது ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கே துதி.

7. அருளுரை

8. பாட்டு

9. திருப்பணியாளரும், திருமுழுக்குப் பெற வந்திருப்போரும், அவர்களுடைய உத்தரவாதிகளும் திருமுழுக்குத் தொட்டியண்டை வருதல். பின்பு திருப்பணியாளர் சொல்லவேண்டியது:

அன்பானவர்களே, நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து, யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்ற வேளையிலே, தூய ஆவியானவர் அவர்மேல் இறங்கினார் என்று நாம் திருமறை வாயிலாக அறிந்து கொள்ளுகிறோம். கடவுளின் அரசுக்குள் வருவதற்கு நாம் மறு பிறப்பு அடையவேண்டும் என இயேசு நமக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் போதித்துள்ளார். அவர் நமது பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்தபின்; தந்தை, மைந்தன், தூய ஆவியானவரின் திருப்பெயரில் எல்லா இனத்தவருக்கும் திருமுழுக்குக் கொடுத்து அவர்களைத் தமது சீடராக்க வேண்டுமென, தமது திருஅவைக்குக் கட்டளை இட்டுள்ளார். தமது ஆவியானவரை திரு அவையின்மேல் அவர் ஊற்றியுள்ள படியினால் அவருக்குள் திருமுழுக்குப் பெறுகின்ற யாவரும் அவருடைய மரணத்திலும் உயிர்த் தெழுதலிலும் பங்கு கொள்ளுகின்றனர்.

எனவே, இங்கே நிற்பவர்களை, மனமாற்றத்திலும் விசுவாசத்திலும் கடவுள் தம்மிடம் ஏற்றுக் கொண்டு, அவர்களுடைய பாவங்கள் யாவற றையும் மன்னித்து விடுவார் என்பதை நாமறிவோம். தூய ஆவியானவர் மூலமாக அவர் இவர்களுக்குப் புது வாழ்வை அளித்து, இவர்களைத் திருஅவையின் உறுப்பினராய் ஆக்கியருளுவார் என்பதையும் நாமறிவோம்.

10. எல்லாரும் எழுந்து நிற்க திருப்பணியாளர் சொல்லவேண்டியது:

தூய தந்தையே எல்லா வல்லமைக்கும் ஆண்டவரே, என்றென்றும் உயிருள்ளவரா யிருக்கிற கடவுளே, நாங்கள் உமது மகிமையை பறைசாற்றுகிறோம். நீரே எல்லாவற்றையும் உருவாக்கி, எங்களை உமது சாயலில் சிருஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டித்தவர். நாங்கள் பாவத்திற்குள் விழுந்த போதும் நீர் எங்களை இருளில் விட்டுவிடாமல், உமது ஒரே மைந்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எங்களுக்கு இரட்சகராக அனுப்பினீர்.

அவர் எங்கள் உளன் இயல்பை எடுத்து யோர்தானில் திருமுழுக்குப் பெற்றபின் உமது தூய ஆவியானவரின் அருட்பொழிவு பெற்று நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்து, சிலுவைமீது மரித்து, எங்கள் இரட்சிப்புக் காகவே உயிர்த்தெழுந்து, விண்ணேறியபின் தமது தூய ஆவியானவரை அவருடைய மக்கள் மேல் ஊற்றி, அவர்களைப் புதுச்சிருஸ்டிகளாக்கினார். இவை எல்லாவற்றிற்காகவும் நாங்கள் உம்மை மனமாரத் துதிக்கிறோம். **ஆமென்.**

**விண்ணப்பம்:**
தந்தையே, உமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு, உமது ஆவியானவரின் வல்லமையில், எங்கள் மத்தியில் எழுந்தருளும்.

கிறிஸ்துவில் வைத்துள்ள விசுவாசத்தை அறிக்கை செய்து, ஆவியானவரால் புதுப் பிறப்படைந்து, தண்ணீரில் திருமுழுக்குப்பெற வந்திருக்கிற இவர்கள், பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவிலான நீதித்தன்மையின் புதுவாழ்வு அடையும்படி எழுப்பப்பட, நீர்தாமே இரங்கியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். **ஆமென்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅவையாம் கிறிஸ்துவின்
உடலுக்குள் திருமுழுக்குப்
பெறுவதினால், இவர்கள் தீமையை
வெற்றிகொண்டு வாழுவதற்கு
நீரேகிருபை கூர்ந்தருள வேண்டுமென
உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

இருளில் இருந்து நீர் இவர்களை
ஒளிக்குள் கொண்டுவாரும்,
மரணத்திலிருந்து நீர் இவர் களை
நித்திய வாழ்வுக்குள் கொண்டுவாரும்,
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்
திருப் பெயரில் விண்ணப்பம் கேளும்
சுவாமி.

ஆமென்.

வாக்குத்தத்தங்களும், விசுவாசத்தை
அறிக்கை யிடுதலும்.

11. திருப்பணியாளர் அவையினரிடம்:
அன்பார்ந்த அவையினரே, கிறிஸ்துவின்
உடல் உறுப்பினர்களே,இங்கே
நிற்பவர்களை நீங்கள் இப்போது
கிறிஸ்துவின் நாமத்தில் ஏற்றுக்கொள்ள
ப்போகிறீர்கள். இவர்கள் கடவுளின்
அறிவிலும் அன்பிலும்; நமது
ஆண்டவரும் அவருடைய
குமாரனுமாகிய கிறிஸ்துவின் அறிவிலும்
அன்பிலும்; கிருபையில் வளரத்தக் கதாக
இங்கே பொது வாழ்வுக்கான
வழிபாட்டையும் பணியையும்
கடைப்பிடித்துக் காத்து வருவீர்களா?

அவை:கடவுளுடைய உதவியோடு நாங்கள்
அப்படியே செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. திருப்பணியாளர் திருமுழுக்குப் பெற வந்திருப் போரிடம்:

திரு: இயேசு தம் முதற் சீடர்களிடம் சொன்னது போல், உங்களிடமும், 'என் பின்னே வாருங்கள்' என்று சொன்னதைக் கேட்டீர்கள். அவருடைய அழைப்பிற்கு நீங்கள் ஏற்கனவே அடிபணிந்துள்ளீர்கள். அவரில் மாத்திரம் வைக்கும் விசுவாசத்தினால் உங்கள் பாவங்களில் இருந்து மீட்படையும் வாஞ்சை யுள்ளவர்களாய் இருக்கிறீர்கள். எனவே, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தா பப்பட்டு எல்லாத்தீமையையும் வெறுத்து விடுகிறீர்களா?

பதில்: ஆம், அப்படியே வெறுத்து விடுகிறேன்/ றோம்.

திரு: இயேசுக் கிறஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்று, அவரில் மாத்திரம் நம்பிக்கை வைக்கிறீர்களா?

பதில்: ஆம், அப்படியே நம்பிக்கை வைக்கிறேன்/ றோம்.

திரு: நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து, திருஅவையிலும் அவருக்கென்று பணி செய்வீர்களா?

பதில்: ஆம், கடவுளுடைய உதவியோடு அப்படியே கீழ்ப்படிந்து பணி செய்வேன்/ வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நாம் எல்லாரும் எழுந்து நின்று நமது திரு அவையின் விசுவாசத்தை அறிக்கை செய்வோமாக:

திருத்தூதுவர் பற்றுறுதி அறிக்கை:
வானத்தையும் பூமியையும் படைத்த எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளை விசுவாசிக்கிறேன்.
அவருடைய ஒரே மைந்தராகிய நம்முடைய ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் தூய ஆவியானவராலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். போந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, மரித்தோர் இடத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணுலகிற்கு ஏறி, எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத் திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருவார்.
தூய ஆவியானவரையும் விசுவாசிக் கிறேன். பொதுவான தூய சபையும், புனி தர்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்பும், உடல் உயிர்த்தெழுதலும், நித்திய வாழ்வும் உண்டென்றும் விசுவாசிக்கிறேன். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. திருப்பணியாளர் திருமுழுக்குப் பெற வந்திருப்போரிடம்:

திரு: இப்பொழுது நீங்கள் திருமுழுக்குப் பெற விரும்புகிறீர்களா?

பதில்: ஆம், அப்படியே விரும்புகிறேன்/றோம்.

15. திருமுழுக்கு:

திருப்பணியாளர் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி, அவர்/கள் மேல் தண்ணீர் ஊற்றி அல்லது தெளித்து அல்லது வசதியிருப்பின் நீரில் முழுக்கியெடுத்துச் சொல்லவேண்டியது:

(அ)ஆகிய உமக்கு நான் தந்தை,மைந்தன், தூய ஆவியானவரின் திருப்பெயரினால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். ஆமென்.

16. திருப்பணியாளர் திருமுழுக்குப் பெற்றவரின் நெற்றியில் சிலுவை அடையாளமிட்டுச் சொல்ல வேண்டியது:

நாம் இந்தச் சகோதரனை/ரியை திருமுழுக்கின் மூலமாய்க் கிறிஸ்துவின் மந்தையாகிய திருஅவைக்குள் ஏற்றுக் கொள்ளுகிறோம்இவர்/ள் சிலுவையி லறையப்பட்ட கிறிஸ்துவில் தன் விசவாசத்தை அறிக்கையிட வெட்கப்படாதிருக்கவும், தீமைக்கெதிராய்ப் போராடவும், தன் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையுள்ள போர்ச் சேவகரும் தொண்டருமாய் நிலைத்துநிற்கவும் தக்கதாக ஆண்டவர் அருள் கூருவாராக. **ஆமென்.**

**எல்லோரும்:** சொல்லுதல் அல்லது பாடுதல்.
கர்த்தர் உன்னை/ங்களை ஆசீர்வதித் துக்காக்கக் கடவர்; கர்த்தர் தம் முகத்தை உன்மேல்/உங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்னோடு/ ங்களோடு கிருபையாய் இருக்கக் கடவர்: கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல்/ங்கள் மேல் பிரசன்னமாக்கி, உனக்கு/ ங்களுக்குச் சமாதானத் தைத் தரக்கடவர். **ஆமென்.**

**17.** திருப்பணியாளர் அல்லது திருமுழுக் -குப் பதிவேட்டுச் செயலாளர் திருமுழுக்குப் பெற்றவரிடம் கொழுத் -தப்பட்ட ஒரு மெழுகுதிரியைக் கொடுத்துச் சொல்லவேண்டியது:
நான் இந்த அடையாளத்தை உமக்குத்/ ங்களுக்குத் தருகிறேன். உலகத்தின் ஒளியாகிய கிறிஸ்துவுக்கு நீ/ங்கள் இப்பொழுது சொந்தமானவர்/வர்கள். மனிதர் உமது/ங்கள் நற்செயல்களைக் கண்டு, பரலோகத்திலிருக்கும் உம/ங்கள் தந்தையைப் புகழ்ந்து போற்றும் படி, உமது/ங்கள் ஒளி அவர்கள் முன் ஒளிர்வதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. இறுதி விண்ணப்பங்கள

திரு: விண்ணப்பம் செய்வோமாக:
தந்தையே, நீர் இவரை/களை உமது குடும்பமாகிய திருச்சபைக்குள், உமது சொந்தமாக ஏற்றுக்கொண்டமைக்காக உம்மை நாங்கள் தோத்தரிக்கிறோம். இவர்/கள் தான்/ம் திருமுழுக்குப்பெற்ற விசுவாசத்திற்குள் வளரவும், எல்லா மனிதர் முன்பாகவும், அந்த விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவும் உதவியருளும். ஆமென்.

இவரின்/களின் வீட்டை ஆசீர்வதியும், இவரும்/வர்களும் இவருடையவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் பூரண அன்பின் பாதையில் வழிநடந்து வாழ்வதற்கு உமது புத்தியையும், கருணையையும் ஈந்தருளும்.

ஆமென்.

எமது வழிபாடு, உலகத்தில் எமது தொண்டு ஆகியவற்றின் மூலம் இவர்/கள் கிறிஸ்துவைப் பின்பற்ற அறிந்து கொள்ளும் படி , தூய ஆவியானவரில் உமது திருஅவை பெலமடைய இரங்கியருளும்.

ஆமென்.

19. பொது வழிபாடு தொடர்ந்து நடைபெறுமேயாகில், இவ்விடத்தில் திருப்பணியாளர் திரு முழுக்குச் சம்பந்தப்பட்டவர்களை அனுப்ப முன் சொல்ல வேண்டியது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையும், கடவுளுடைய அன்பும், தூய ஆவியானவரின் ஐக்கியமும நம்மை -னவரோடும் இருப்பதாக. ஆமென்.

20. தொடர்ந்து நடைபெறும் பொது வழிபாட்டில் மேலதிகத்திருமறைப்பாடங் கள் வாசிக்கப் பட்டு, ஏற்கனவே அருளுரை செய்யப்பட்டிருக்காவிடில் அருளுரையும் ஆற்றப்படலாம். அருளு -ரைக்குப்பின் வழிபாடு வழமைபோல் தொடர வேண்டும். பரிந்து வேண்டல் விண்ணப்பம் சுருக்கப்படலாம் அல்லது தவிர்க்கப்படலாம். விசுவாச அறிக்கையை -யும் திரும்பவும் அறிக்கையிட வேண்டியதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடப்படுத்தல் அல்லது முழு உறுப்பினர் ஆகும் வழிபாட்டு ஒழுங்கு

1. பாட்டு
2. விண்ணப்பம் செய்வோமாக: பின்வரும் விண்ணப்பம் அல்லது திருப்பணியாளரு -ழடைய சொந்த விண்ணப்பம்:

திரு : விண்ணகப் பிதாவே, உமது நற்செய்திப் போதனையைக் கேட்ட இவ்வடியார்கள், உமது சத்தியத்தை அறிந்துகொள்ளும் படி நீர் இவர்களை வழிநடத்தியதற்காக உம்மைத் துதிக்கிறோம். நீர் இவர்கள் வாழ்வில் துவங்கிவிட்ட நற்கிரியை யானது, உமது தூய ஆவியானவரின் தொடர் இயக்கத்தினால் இவர்களிலே உறுதியடைய நீரே இரங்கியருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம் வேண்டுதல் ஏறெடுக்கிறோம் ஆமென்.

3. பின்வரும் பழைய ஏற்பாட்டு வாசிப்பு அல்லது வேறு பழைய ஏற்பாட்டு வாசிப்பு :
இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது இஸ்ரவேல் -குடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தினரோடும, யூதா குடும்பத்தினரோடும் நான் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவர அவர்கள் கைபிடித்த நாளிலே, அவர்களோடே செய்து கொண்ட உடன்படிக் கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அவர்கள் நான் செய்த அந்த உன்படிக்கையை அவமாக்கிப் போட்டார்களே, என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது :"நான் என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி நான் அவர்கள் தேவனாயிருப்பேன்,அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.இனி ஒருவன் தன் அயலானையும் ,ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: "கர்த்தரை அறிந்து கொள் என்று போதிக்க வேண்டியதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லோரும் என்னை அறிந்து கொள்ளுவார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன். ஏரேமியா 31:31-34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடப்படுத்தல் அல்லது முழு உறுப்பினர் ஆகும் வழிபாட்டு ஒழுங்கு

4. பின்வரும் நிருப வாசிப்பு அல்லது வேறு நிருப வாசிப்பு:

ஆகையால், சகோதரரே, நமக்கு ஒரு கடமை உண்டு. ஆனால், அது உளன் இயல்பைபட பற்றிய தன்று; அதாவது, உளன் இயல்புக்கு இசைவாக வாழ்ந்தால், நீங்கள் சாவது திண்ணம்; ஆனால், உடலின் தீய செயல்களை ஆவியானவரைக் கொண்டு சாகடித்தால், நீங்கள் மெய்வாழ்வு உடையவர் களாய் இருப்பீர்கள். யார் யார் கடவுளின் ஆவியால் நடத்தப்படு கிறார்களோ, அவாகள் அனைவரும் கடவுளின் மைந்தர்கள்.மீண்டும் உங்களை அடிமை களாக்கி அச்சத்தில் ஆழ்த்தும் ஆவியை நீங்கள் பெறவில்லை. உங்களை கடவுளின் மைந்தர்களாக்கும் ஆவியைப்பெற்றிருக்கிறீர்கள்; அந்த ஆவியின் அருளால் நாம் "அபா" (அதாவது அப்பா) என்று கூப்பிடுகிறோம். இவ்வாறு கூப்பிடும்போது, நாம் கடவுளுடைய பிள்ளைகளென்று நம் ஆவி உணர்த்தும் உண்மையை, அந்தஆவியானவர் தாமே உறுதிப்படுத் -துகிறார். நாம் பிள்ளைகளென்றால் உரிமையாளருமாய் இருக்கிறோம்; கடவுள் வாக்களித்தவற்றிற்கு உரிமையாளர்கள்; கிறிஸ்துவின் உடன் உரிமையாளருமாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவரோடு பாடுகளடைந்தால்,
அவரோடு மாட்சிமையும் பெறுவோம்.
உரோமர் 8:12-17

5. பாட்டு
6. நற்செய்தி வாசிப்பு: வாசிப்பு அறிவிக்கப்பட்டவுடன் அவையினர் சொல்ல வேண்டியது:

அவை: நமது இரட்சகராகிய கிறிஸ்துவுக்கே மகிமை.

யோவான் சிறையில் வைக்கப்பட்ட பின்பு இயேசு கலிலேயாவுக்கு வந்து, கடவுளுடைய அரசின் நற்செய்தியை அறிவித்து வந்தார்: "காலம் நிறைவேறியி-ருக்கிறது, கடவுளின் அரசு கிட்டியுள்ளது, மனமாற்றமடைந்து இந்த நற்செய்தியில் நம்பிக்கை வையுங்கள்" என்றார். அவர் கலிலேயாக் கடலோர மாய்ப் போகை-யில், மீனவராகிய சீமோனும் அவருடைய சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலை வீசிக் கொண்டிருக்கிறதைக் கண்டார். இயேசு அவர்களைப்பார்த்து, "என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப்பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று சொன்னார். உடனே அவர்கள் வலைகளை விட்டு விட்டு அவரைப் பின்பற்றிச் சென்றார்கள். அவர் சற்று அப்பால் போன போது, செபெதேயுவின் மகன் யாக்கோபுவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய சகோதரன் யோவானையும் கண்டார். அவர்கள் தங்கள் படகில் வலைகளைப் பழுதுப்பார்த்துக் கொண்டிருந்தார்கள் . அவர் அவர்களையும் அழைத்தார். அவர்கள்தகப்பன் செபெதேயுவை கூலியாட்களோடு படகிலே விட்டுவிட்டு அவருக்குப்பின்னே சென்றார்கள். மாற்கு 1:14-20.

நற்செய்தி வாசிப்பு வாசித்து முடிந்தவுடன் அவையினர் சொல்ல வேண்டியது:

அவை: நமது ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கே துதி.

7. அருளுரை

8. பாட்டு

9. **திடப்படுத்தப்பட வேண்டியவர்கள் வரிசையாய் நிற்க, திருப்பணியாளர் அவர்களைப் பார்த்துச் சொல்ல வேண்டியது:**

திரு: கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நீங்கள் திருமுழுக்கின் மூலம் திருஅவையாகிய கடவுளின் குடும்பத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறீர்கள். இப்பொழுது ஆண்டவரின் அன்பிலும் அறிவிலும் வளர்ந்தவர்களாய் அவர் முன்னிலையில் நிற்கிறீர்கள். கிறிஸ்து "என் பின்னே வாருங்கள்" என்று தம் முதல் சீடருக்கு அழைப்பு விடுத்த.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்போல், உங்களுக்கும் அழைப்புக் கொடுக்கிதைக் கேட்டீர்கள். இந்த அழைப்புக்கு நீங்கள் ஏற்கனவே இசைந்திருக்கிறபடியால், இப்பொழுது எல்லாத் தீமையையும் வெறுத்தவர்களாய், அவர் மேல் நீங்கள் வைத்துள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கு, பகிரங்கமாக இந்த அவையார் முன்னிலையில் நிற்கிறீர்கள். ஒரு தெரிவு செய்யப்பட்ட ஜனத்தினதும், அரச ஆசாரியக் கூட்டத்தினதும், பரிசுத்த மக்கள் கூட்டத்தினதும், கடவுளுடைய சொந்தமக்களினதும், உலகினுள் சாட்சிபகருவதற்காக அனுப்பப்பட்ட கிறிஸ்துவின் பணியாளரினதும் உறுப்பினராய். நீங்கள் இப்பொழுது திடப்படுதல் அடையப் போசிறீர்கள். இவை எல்லாவற்றிலும் கடவுள் தமது தூய ஆவியானவராலே உங்களைப் பெலப்படுத்துவார். எனவே நான் கேட்கும் வினாக்களுக்கு நீங்கள் தகுந்த விடைபகர வேண்டுமென உங்களை நான் அன்புடன் அழைக்கிறேன்.

10. வினாக்கள்-விடைகள்

திரு: நீங்கள் உங்கள் பாவங்களுக்காக மனஸ் தாபப்பட்டு, எல்லாத் தீமையையும் விட்டுவிடுகிறீர்களா?

விடை:ஆம், அப்படியே செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு: இயேசு கிறிஸ்துவே உங்கள் ஆண்டவரும் இரட்சகருமாய் இருக்கிறார் என்பதில் முழு நம்பிக்கை கொண்டுள்ளீர்களா?

விடை: ஆம்,அப்படியே நம்பிக்கை கொள்ளுகிறோம்.

திரு: நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்து, திருஅவையிலும் உலகிலும் அவருக்குப் பணிசெய்து வாழுவீர்களா?

விடை: ஆம்,அப்படியே நம்பிக்கை கொள்ளுகிறோம்.

திரு: நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து, திருஅவையிலும் உலகிலும் அவருக்குப் பணி செய்து வாழுவீர்களா?

விடை: ஆம்,அவருடைய உதவியோடு அப்படியே வாழுவோம்.

11.திரு:இப்பொழுது நாம் யாவரும் எழுந்து நின்று நமது திருஅவையின் விசுவாசத்தை அறிக்கையிடுவோமாக.எல்லோரும் எழுந்து நின்று சொல்லவேண்டிய திருத்தூதுவர் பற்றுறுதி அறிக்கை:

விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே மைந்தராகிய நம்முடைய ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் தூய ஆவியானவராலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுண்டு,மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, மரித்தோர்இடத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணுலகிற்கேறி எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளுடைய வலதுபக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் ,மரித்தோரையும், நியாயந் தீர்க்க வருவார்.
தூய ஆவியானவரையும் விசுவாசிக்கிறேன்.பொதுவான தூய அவையும், புனிதர்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்பும், உடல் உயிர்த்தெழுதலும், நித்திய வாழ்வும் உண்டென்றும் விசுவாசிக்கிறேன். ஆமென்.

12. **திடப்படுத்தலும் ஏற்றுக்கொள்ளலும்.**
அவையினர் நின்று கொண்டிருக்க, திடப்படுதல் அடைய வந்திருப்போர் முழங்காற்படியிடுவார்கள்.அப்பொழுது திருப்பணியாளர் சொல்ல வேண்டிய விண்ணப்பம்:

திரு: விண்ணகத் தந்தையே, எல்லா வல்லமையும் உடைய கடவுளே, திருமுழுக்கின் மூலமாய் இந்த உமது பிள்ளைகளை உமது திருக்குடும்பத்தில் ஏற்றுக்கொண்டவரே; இப்பொழுது உமது தூய ஆவியானவரால் இவர்களை விசுவாசத்தில் நிலைப்படுத்தியருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் இவர்கள் உமது கிருபையின் ஈவுகளில் நிறைவடைய இரங்கியருளும்;

இவர்களுக்கு உமது புத்தியின் ஆவியையும், புரிந்துணர்வின் ஆவியையும் கொடும் ஆமென்.

இவர்களுக்கு உமது ஆலோசனையின் ஆவியையும்,வல்லமையின் ஆவியையும் கொடும். ஆமென்.
இவர்களுக்கு உமது அறிவின் ஆவியையும்,மெய்யான தெய்வபக்தியின் ஆவியையும், கர்த்தருக்குப் பயப்படுதலின் ஆவியையும் கொடும். ஆமென்.

இவர்களை எப்போதும் உமது இரக்கத்திற்குள் வைத்துக் காத்தருளும். ஆமென்.

13. திருப்பணியாளர் இப்பொழுது ஒவ்வொருவர் தலை மீதும் கைவைத்துச் சொல்ல வேண்டியது:

திரு: ஆண்டவரே, உமதடியானாகிய (அ)வை, உமது தூய ஆவியானவரினால் நிலைப்படுத்தி, இவர் உம்முடையவராய்த் தொடர்ந்து சீவிக்க இரங்கியருளும். ஒவ்வொருவரும் சொல்ல வேண்டியது. ஆமென்.

அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடப்படுத்தல் அல்லது முழு உறுப்பினர் ஆகும் வழிபபட்டு ஒழுங்கு

திரு: ஆண்டவரே, உமதடியார்களாகிய இவர்களை,உமது தூய ஆவியானவரினால் நிலைப்படுத்தி,இவர்கள் உம்முடையவர்களாய் தொடர்ந்து சீவிக்க இரங்கியருளும்.

எல்லாரும் சொல்ல வேண்டியது- ஆமென்.
எல்லாரும் எழுந்து நிற்க,
திடப்படுத்தப்பட்டவர்களைப் பார்த்து திருப்பணியாளர் சொல்ல வேண்டியது;

திரு:(அ)உம்மைக் கிறிஸ்தவ திருஅவைக் குள்ளும் இந்த அவை ஐக்கியத்திற் குள்ளும் (அல்லது இந்தச் சேகர அவைக்ளுக்குள்ளும்)முழு உறுப்பினராய் ஏற்றுக்கொள்ளுகிறோம்.
(அல்லது)

திரு: உங்களைக் கிறிஸ்தவ திருஅவைக்குள்ளும், இந்த அவை ஐக்கியத்திற்குள்ளும் (அல்லது இந்தச் சேகர அவைக்குள்ளும்) முழு உறுப்பினர்களாய் ஏற்றுக்கொள் ளுகிறோம்.

14. ஐக்கியத்தின் வலக்கரமும்,திருமறையும் கொடுத்தல் பின்பு:

15. திருப்பணியாளரும் அவையினரும் எழுந்து நின்று சொல்ல வேண்டியது: ஆண்டவராகிய கடவுளே, தூய தந்தையே, நாங்கள் உமக்கேயல்லாமல் எங்களுக்குச் சொந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமானவர்களல்ல. உலகம் இரட்சிப்பு அடையும்படி நீர் உமது மைந்தரை, உலகத்தினுள் அனுப்பியது போல்: நாங்கள் எங்கள் அயலவர் மத்தியில் பணி செய், அவர்களை உமது குமாரனில் நம்பிக்கை வைக்கும்படி கொண்டுவரத்தக்கதாக, எங்களையும் உலகத்தினுள் அனுப்பியருளும். ஆமென்.

கர்த்தருடைய விண்ணப்பம்:

விண்ணுலகில் இருக்கிற எங்கள் பிதாவே, உமது திருப்பெயர் தூயதெனப் போற்றப்படுனவதாக: உமது அருளாட்சி வருவதாக: உமது திருவவுளம் விண்ணுலகிலும் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுவதாக. அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை, இன்று எங்களக்குத் தந்தருளும். எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் எங்களுக்கு மன்னித்தருளும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்: ஆட்சியும் ,வல்லமையும், மாட்சிமையும் என்றென்றும் உம்முடையவையே. ஆமென்.

16. பாட்டு

இதன்பின் திருவிருந்து வழிபாடு தொடர்ந்து நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடப்படுததல் வழிபாடு
# - ஒரு மாற்று ஒழுங்கு

1.உட்புகுதல்-இறைப்பாடல்
2.வழிபாட்டுக்கு அழைப்பு

அன்பு நிறை இறைமக்களே! இறை அழைப்பைக் கேட்டு, இறைக் குடும்பத்தில் முழு உறுப்பினரைச் சேர்க்கும் இறைபபணியாளர்களே! "கலலறையில் இருந்து வெளியே வாருங்கள்" என்று இறைமகன் இயேசு அழைக்கிறார்.
கட்டுளை அவிழ்த்து வடுங்கள்" என்று ஆணையிடுகின்றார். இந்த அழைப்பினை ஏற்றிடவும் இப்பணியை ஆற்றிடவும் அருளினைத் தரும் இறைவனை போற்றுவோம் வாருங்கள்.

3. இறை வேண்டல்
4. பாட்டு
5. பிழையை அறிக்கை செய்தல்

நடத்துனர் : உயிர்ப்பிக்கும் அறைவனின் ஆற்றிலை உணரத்தவறிய, அதனைத் எற்கத தயங்கிய வேளைகளை நிளைவு கூர்ந்து இறைவனிடம் மன்னிப்புக்கேட்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடப்படுத்தல் வழிபாடு
-ஒரு மாற்று ஒழுங்கு

இறைமக்கள்: மீட்பை அருளும் எம்து இரக்கத்திற்காக அறைஞவுசுகின்றோம் தந்தையே!

நடத்துனர் : எத்தனையோ சமயங்களில் அரறவன் அழைக்கும் குரலைக் கேட்டும், நமக்கு விருப்பமான வழிகளில் நாம சென்ற தறகாக, அறைவனிடம் மன்னிப்புக் கேட்கின்றோம்.

இறைமக்கள்: மீட்பை அருளும் எம்து இரக்கத்திற்காக இறைஞ்சுகின்றோம் தந்தையே!

நடத்துனர் : இறைவனின் ஆற்றலை ஏறக மறுத்ததான் மூலம் அவரையே மறுதலித்தபாவ நிலைமைக்காய் இறைவனிடம் மன்னிப்புக் கேட்கின்றோம்.

இறைமக்கள்: மீட்பை அருளும் எம்து இரக்கத்திற்காக இறைஞ்சுகின்றோம் தந்தையே!

நடத்துனர் : இறைவனுடையபணியை அலட்சியம் செய்ததற்காகவும், கடவுளுக்கு சாட்சியாய் இருக்கத் தவறஜயதயற்காகவும் அவர் மேலுள்ள பற்றில் நிலையற்று, அவரது அன்பை விட்டு விலகியதற்காகவும் இறைவனிட்ம் மன்னிப்புக் கோட்கின்றோம்.

இறைமக்கள்: மீட்பை அருளும் உமது இரக்கத்திற்காக இறைஞ்சுகின்றோம் தந்தையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துனர்: கட்டவிழ்க்க வேண்டிய நாமே, சொல்லாலும், செயலாலும்,சிந்தையாலும் நம்மையும் பிறரையும் கட்டிக்கொண்ட இழிந்த நிலைமைக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்கின்றோம்.

இறை மக்கள்: மீட்பை அருளும் உமது இரக்கத்திகாக இறைஞ்சுகின்றோம் தந்தையே!.

நடத்துனர்: "கட்டுகள்" இன்னவை என்று இனம் கண்டும்,உணர்த்தும், செயல்பட இயலாத நிலைக்களுக்காய் இறைவனிடம் மன்னப்புக் கேட்கின்றோம்.

இறை மக்கள்: மீட்பை அருளும் உமது இரக்கத்திற்காக இறைஞ்சுகின்றோம் தந்தையே!
(அமைதி)

6. மன்னிப்பு அருளல்

நடத்துனர்: எம் பெருமான் திருறவாய் மலர்ந்தருளும் அருள் மொழியைக் கேளுங்கள். "நான் உன்னை ஆக்கினைக்குள் தீர்ப்பதில்லை சமாதானத்துடன் செல்வாய்: இனி பாவம் செய்திடாதே"

இறைமக்கள்: இறைவா உமது பேரருளால் எங்கள்பாவங்களை மன்னித்து பலப்படுத்தாங்கிக் கொள்ளும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நன்றி செலுத்துதல்

வாழ்வை இருளாக்கி, சிதைத்து மூடுகின்ற அறியாமை, கல்லாமை, உழையாமை, பொறாமை, கொடாமை போன்ற மனிதப் பிணக்குக் கல்லறைகளிலிருந்து "வெளியே வாருங்கள்" என்று இடைவிடாமல் ஒலிக்கின்ற விடுதலையளிக்கும் இறைவனின் குரலுக்காய் நன்றி செலுத்துவோம். வாழ்வின் இயக்கத்தை நல்நோக்கோடு வேகப்படுத்தும் அவரது தூய ஆவியின் உந்துதலுக்காய் நன்றி செலுத்துவோம்.

(பொதுவான நன்றி செலுத்துதல் சொல்ல ப்படலாம்)

8. திருமறை வாசிப்பு

9. திருத்தூதுவர் பற்றுறுதி அறிக்கை

விண்ணையும் மண்ணையும் படைத்த எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளை நம்புகின்றேன். அவருடைய ஒரே புதல்வராகிய நம்முடைய ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவையும் நம்புகின்றேன். அவர் தூய ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மரித்தோரிடத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிட த்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்தெழுந்தார். விண்ணுக்கேறி எல்லா வல்லமையுமுள்ள தந்தையாகிய கடவுளுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிர் உள்ளோருக்கும் மரித்தோருக்கும் நீதி வழங்க வருவார். தூய ஆவியானவரையும் நம்புகின்றேன். பொதுவான திருஅவையும் ,இறை மக்களுடைய ஒற்றுமையும் , பாவ மன்னிப்பும், உடல் உயிர்த்தெழுதலும், நிலைபெறு வாழ்வும் உண்டென்று நம்புகின்றேன். ஆமென்.

10. திடப்படுத்தல்:

அன்பின் நண்பர்களே!இயேசு கிறிஸ்துவினுடைய திருஅவையின் முழு உறுப்பினர்களாக இப்பொழுது வாசிக்கப்படும். பெயர் உள்ளவர் களை சேர்க்கப் போகிறோம்.

(பெயர்கள் வாசிக்கப்படல்)

ஆண்டவருக்குள் அன்பானவர்களே, நீங்கள் திருமுழுக்கால் கிறிஸ்துவோடு சேர்க்கப்பட்டு இறைமக்கள் குடும்பத்தில் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். இப்போது உங்கள் சொந்தத் தீர்மானத்தின்படி திருமுழுக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி உங்கள் நம்பிக்கையை அறிக்கை செய்து, அவருக்குக் கீழ்ப்படிவதற்கு உங்களை ஒப்புக்கொடுக்கும்படி வந்திருக்கிறீர்கள். திருத்தூதுவர் முறைப்படி எங்கள் கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உங்கள் மேல் வைத்து தூய ஆவியானவர் உங்களைப் பெலப்படுத்த வேண்டுமென இறைஞ்சுகின்றோம்: இந்த அவை உங்களை இறை மக்களின் ஒத்துழைப்புக்குள் வரவேற்று வாழ்நாள் முழுவதும் உங்களோடு இறைவனை வழிபடவும் பணிபுரியவும் வாஞ்சிக் கின்றது.

11. வாக்குறுதி
கடவுள் முன்னிலையிலும், இந்த அவையின் சமூகத்திலும் நான் உங்களைக் கேட்டுக் கொள்வதாவது.

வினா: கிறிஸ்துவினுடைய வல்லமையோடு,இவ் உலகப் பெருமைகளையும் பாவச் செயல்களையும் விட்டு வாழ்வீர்களா?
விடை: இறைவனுடைய ஒத்தாசையோடு வாழ்வேன்.
வினா: இறைவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து,அவருடைய சித்தத்திற்கு அமைய வாழ்நாள் முழுவதும் நடக்க எத்தனிப்பீர்களா?
விடை: இறைவனின் ஒத்தாசையோடு நடக்க எத்தனிப்பேன்.
வினா: இறை மக்களோடு கூடி வழிபடவும், திருவிருந்தில் பங்குபற்றவும் முயலுவீர் களா?
விடை: முயலுவேன் என வாக்குறுதி கூறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா: திருமறை வாசிக்கவும், விண்ணப்பம் செய்யவும் உடன் பிறப்புகளை நேசிக்கவும் நாடுவீர்களா?

விடை: இறைவனின் துணையுடன் நாடுவேன்

வினா: சிலுவையில்அறையப்பட்டு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் உள்ள உங்கள் நம்பிக்கையை அறிக்கை பண்ணவும், உங்கள்வாழ்க்கை முடியுமட்டும்உறுதியுள்ள தொண்டர் களாக இருந்து சொல்லினாலும் செயலினாலும் அவரு க்கு சாட்சி கொடுப்பீர்களா?

விடை:அப்படியே செய்வேன் என வாக்குறுதி கொடுக்கிறேன்.

12. பாட்டு

13. ஏற்றுக் கொள்ளல்

அன்பானவர்களே! உங்களைத் திரு அவையின் ஒற்றுமைக்குள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றோம். உங்களைக் கடவுள் தம்முடையவர்களாய் இருக்க தமது அருளினாலே இடைவிடாமல் பாதுகாக்கவும், நீங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறியும் அறிவிலும் அவரைப் பற்றும் அன்பினா லும் நாள்தோறும் வளரும்படி வளரும் படி தூய ஆவியானவர் வழி நடத்த வேண்டுமென்று இறைஞ்சுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இறைமக்கள் வாழ்த்துதல்

அன்பின் நண்பர்களே, இறையாசியுடன் உங்களை வரவேற்கின்றோம். நீங்கள் உங்கள் பற்றுறுதியை அறிக்கையிட்டு கிறிஸ்துவினுடைய திரு அவையிலே முழு உறுப்பினராய் சேர்க்கப்பட்டதையிட்டு, நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். உங்களை எங்கள் உடன் உறுப்புக்களாய் ஏற்றுக்கொண்டு நீங்கள் அறிவிலும் தெய்வ பக்தியிலும் அதிகப்பட்டு, மெய்க்கிறிஸ்தவர்களாய் நடக்க உங்கள்மேல் கரிசனை கொள்வோம் என்று உடன்படுகின்றோம்.

உலகிலே சுடர்களாக ஒளிருங்கள். உங்கள் அன்புப் பணிகளை செய்வதற்கு, உங்களுக்கு உதவியும் துணையுமாய் அமைவோம் என இறை அருளால் நாங்கள் உறுதி கூறுகின்றோம்.

15. புதிய உறுப்பினர்களில் பதில

தந்தை, மைந்தன், தூய ஆவியின் திருப்பெயரால் கடவுளின், திருப்பணிக்கு எங்களை ஒப்புவிக்கின்றோம். உயிர்த்தெழுந்த ஆண்டவனின் விடுதலையாக்கும் ஆற்றல் எங்கள் மூலம் உலகிற்கு ஊடுருவிச் செல்ல எங்களை ஒப்படைக்கின்றோம்.

ஆண்டவனின் அழைப்பைக்கேட்கின்றோம். உயிர் பெறுகின்றொம். உலகுக்குள் செல்ல இருக்கின்றோம். கண்களை ஏறெடுத்துப் பார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறோம். நாங்கள் ஏற்கும் பொறுப்பின் ஆழத்தை உணர்க்கின்றோம்.
இனம்,இடம்,பிரிவு இவற்றைக் கடந்து எங்களையும் உலகையும் விடுதலையாக்குகின்ற ஆண்டவரின் அருளுக்கும் ஆற்றலிற்கும் முழுமையாய் எங்களை ஒப்புவித்து, அவரின் திருப்பெயரில் முன் செல்லுகிறோம்.

இறை அரசின் வளர்ச்சிக்கு வளமூட்டும் பணிக்காக, இறைவனின் திருவடியில் எங்களை அர்ப்பணிக்கின்றோம்.
ஆமென்.

16. பாட்டு

17. அருளுரை

18. பாட்டு

19. திருவிருந்து

20. பாட்டு

21. திருவருட்பேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்படிக்கை வழிபாடு

1. அறிமுகம்

(இந்த உடன்படிக்கை வழிபாடு, 1775ம் ஆண்டு ஆவணி மாதம், ஜோண் உவெஸ்லி போதகரால் முதன்முதலாக ஸ்பிட்டபீல்ட் என்ற இடத்தில் நடத்தப்பட்டது. அன்றுதொட்டு இன்றுவரை வருடத்தொடக்கத்தில் , மெதடிஸ்த கிறிஸ்தவர்களால், இவ்வழிபாடு கிரமமாகப் பின்பற்றப்ட்டு வந்திருக்கின்றது. கடவுள் வாக்குத் தத்தம் கொடுத்தும், அவருடைய மக்கள் கீழ்ப்படிதல் செலுத்தியும், ஒருவரோ டொருவர் உடன்படிக்கை செய்து கொள்ளுகின்றார்கள் என்ற திருமறை உண்மையே இவ்வழிபாட்டின் அடிப்படையாய் இருக்கிறது).

2. **தேவாரம் கூட்டுப்பிரார்த்தனை**
3. பாட்டு
4. **வேண்டுதல், கர்த்தருடையவிண்ணப்பம், திருமறை வாசிப்பு, அருளுரை**
5. **முகவுரை** (அவையினர் உட்கார்ந்திருக்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு : அன்பானவர்களே, நாம் யாவரும் கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். எக்காலமும் நிலைகொள்ளும் படியாகக் கர்த்தரால் துவக்கப்பட்டதும், அவருடைய சொந்த இரத்தத்தினால் முத்தரிக்கப்பட்டதுமான அன்பின் புது உடன்படிக்கைக்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டும், அவருக்குள் பாவத்தினின்று மீட்கப்பட்டும், கடவுளுக்கென்று ஒப்படைப்பு பண்ணப் பட்டுமிருக்கிறோம். ஒரு பக்கத்தில் இந்த உடன்படிக்கையானது, என்றும் மாறாதவராயிருக்கிற கிறிஸ்துவுக்குள் கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாகும். இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கு அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நாமறிவோம் "தம்முடைய சொந்த மகன் என்றும் பாராமல் நம் எல்லோருக்காகவும் கிறிஸ்துவை ஒப்புக்கொடுத்த கடவுள், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி,, மறுபக்கத்தில், இந்த உடன்படிக்கை யானாது, நாம் இனி நமக்கென்று பிழைத்திராமல், நமக்காகத்தம்மைத் தாமே ஒப்புக்கொடுத் தவருக்கென்று நாம் பிழைத்திருப்பதற்கு நம்மை மனதார ஏற்படுத்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்துபோன காலங்களில், இந்த உடன்படிக்கைக்குரிய நம்முடைய முழுப்பங்கையும் நாம் நிறைவேற்றவில்லை என்பதை நன்றாய் அறிவோம். ஆனால் கடவுளோ நம்மைக்கைவிடாமல், இன்று, நாம் நம்மை அவருக்கென்று திரும்பவும் ஒப்படைப்பு செய்யவும் அவர் தரும் வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்ளவும் ஒரு குடும்பமாய்க்கூடிவந்திருக்கிறோம். நமது தாய் தந்தையரைக் கடவுளோடு கொண்டு வந்ததும், நம்மையும் அவரோடு உறவில் கொண்டு வருகிறதுமாகிய இந்த உடன்படிக்கையை பயபக்தியோடு புதுப்பிப்போமாக.

6. வணக்கம் (அவையினர் முழங்காற்படியிட)

திரு: நமது தந்தையாகிய அன்பின் கடவுளை வணங்குவோமாக:
நம்மை உருவாக்கியவரும்,நிமிடம் நிமிடமாக நம்மைப் பாதுகாக்கின்றவரும் , ஆதரிக்கிறவரும் அவரே. முடிவிலா அன்பினால் அவர் நம்மேல் அன்பு செலுத்தி, கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை நம்மில் தோன்றச் செய்தவரும் அவரே.

அவை: உம்மை வணங்குகிறோம் கடவுளே, உம்மையே எங்கள் ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு: நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையைப் பாராட்டுவோமாக:
அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நமக்காக ஏழையானார். எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப் -பட்டும், அவர் பாவமில்லாதவரா யிருந்தார். அவர் எல்லா இடமும் சுற்றித்திரிந்து, கடவுள் அரசின் நற்செய்தியை அறிவித்து, நன்மை செய்கிற வராய்க் காணப்பட்டார். அவர் தமது மரண பரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கடவுளுக்குக் கீழ்ப்படிந்த வரானார். அவர் மரித்தும், சதாகாலங்களிலும் உயிரோடி -க்கிறார் எல்லா விசுவாசிகளுக்கும் விண்ணக அரசைத் திறந்தருளினார். தமது கந்தையாகிய கடவுளின் வலது பக்கத்தில் மகிமையோடே வீற்றிருக்கிறார். அவர் இன்னும் எல்லாவற்றையும் புதுப்பிப்பார்.

அவை: கிறிஸ்துவே, நீரே மகிமையின் அரசர்.

திரு: வாழ்வை அளிப்பவராகிய தூய ஆவியானவரின் ஐக்கியத்தில் களிகூரு வோமாக.
அவராலேயே நாம் தேவகுடும்பத்தில் பிறந்து, கிறிஸ்துவினுடைய உடலின் உறுப்புகளாகி, அவருக்குள் ஒரே ஐக்கியமானோம் அவருடைய சாட்சி நம்மை நிலைப்படுத்துகிறது; அவருடைய புத்தி நமக்குப் போதிக்கிறது; அவருடைய வல்லமை நம்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெலப்படுத்துகிறது. நாமவேண்டிக்
-கொள் ளுகிறதற்கும், நினைக்கிற
-தற்கும் மிகவும் அதிகமாய் நமக்குச்
-செய்ய, அவர் காத்திருக் கிறார்.

அவை: தூய ஆவியானவரே, உமக்கே
எல்லாத் துதியும் உண்டாகுவதாக.
**ஆமென்.**
அமைதி

**7. துதி (அவையினர் எழுந்து நிற்க)**

திரு: கடவுளுடைய பலவித இரக்கங்க
-ளுக்காக அவரைத் துதிப்போமாக.
கடந்துபோன வருடத்திலும், நம்
வாழ்நாள் முழுவதிலும், நம்மில்
அன்புள்ளவராய் இருந்தவரும்,
இருக்கிறவரும்; எல்லா நன்மைகளுக்
கும் மூலகாரணருமாய் இருக்கிற
தந்தையாகிய கடவுளே; எங்கள்
நாட்களை நிறைத்து இந்த
வேளைக்கும் இந்த இடத்திற்கும்
கொண்டு வந்த கடவுளீருடைய இரக்க
உருக்கங்களுக்காக, நாங்கள்
உம்மைத் துதிக்கின்றோம்.

அவை: உமது தூய நாமத்தையே
புகழுகிறோம், ஆண்டவரே.

திரு: எங்களுக்கு உயிரையும் அறிவையும்
தந்து,கடவுளுடைய அழகினால்
பிரகாசிக்கின்ற உலகத்தில் எங்களை
வைத்திருக்கிறீர். எங்கள் இனத்தவர்
மூலமாகவும், எங்கள் நண்பர்கள்
மூலமாகவும், எங்களைத் தேற்றி-
ஆறுதலளித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் உடனொத்தவர்களின்
கைகளினால் எங்களுக்குப் பணி செய்தீர்.

அவை: உமது தூய நாமத்தையே புகழுகிறோம், ஆண்டவரே.

திரு: எங்கள் இருதயங்களில் கடவுளைப் பற்றும் ஆவலை உருவாக்கி, உம்முடைய சமாதானத்தை ஈந்தீர். எங்களை மீட்டுக் கொண்டு, இயேசு கிறிஸ்துவிற்குள்ளான விண்ணக அழைப்பிற்குள் அழைத்தீர். உமது தூய ஆவியானவரின் நல்லுறவிலும், திருச்சபையின் சாட்சியிலும் எங்களுக்கு இடங்கொடுத்தீர்.

அவை: உமது தூய நாமத்தையே புகழுகிறோம், ஆண்டவரே.

திரு: இருளில் எங்களுக்கு வெளிச்சமாகவும், இடுக்கணிலும் வேதனையிலும் எங்களுக்குப் பலமான கன்மலையாகவும்,எங்கள் மகிழ்ச்சியின் ஆவியாகவும், எங்கள் முயற்சிகளில் முழுமையான பலனுமாயிருந்தீர்.

அவை: உமது தூய நாமத்தையே புகழுகிறோம், ஆண்டவரே.

திரு: உம்மை நாங்கள் மறந்தபோதும், நீர் எங்களை நினைவு கூர்ந்தீர். உம்மைவிட்டு நாங்கள் ஓடினபோதிலும், நீர் எங்களை பின் தொடர்ந்து வந்தீர். உம்மிடம் நாங்கள் திரும்பி வந்தபோது, இருகரம் நீட்டி எங்களை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டீர். எங்களோடு நீர் நீடிய பொறுமையாய் இருந்தீர்.

அவை: உமது தூய நாமத்தையே புகழுகிறோம், ஆண்டவரே.

திரு: இவைகளுக்காகவும்,அறியப்பட்டதும் அறியப்படாததும், நினைவு கூர்ந்தனவும் மறக்கப்பட்டனவுமான கடவுளுடைய எல்லா இரக்க உருவங்களுக்காகவும். (பாடுதல்)

அவை: தோத்திரம் இயேசு நாதா,
உமக்கென்றும் தோத்திரம் இயேசு நாதா,
தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்,
திருநாமத்தின் ஆதரவில்,ஆமென்.

8. பாட்டு

9. பாவ அறிக்கை (அவையினர் முழங்காற்படியிட)

திரு: அன்பானவர்களே, இப்பொழுது நாம் கடவுள் முன்னிலையில் நம்மைச் சோதித்துப் பார்த்து, நமது சுயவஞ்சனையினால் நாம் கடவுளுடைய சமுகத்தை விட்டுவிலகிப்போகா தபடிக்கு, நமது இருதயங்களைக் காவல்செய்து கொண்டு, கடவுள் நமக்கு வாக்குப் -பண்ணி யருளிய மன்னிப்பை எதிர்நோக்கி, நமது பாவங்களை மனத் -தாழ்மையோடு அறிக்கை செய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது அன்பான மகனுக்குள் எங்களுக்காக வாழ்வுப்பாதையை உருவாக்கிய எங்கள் தந்தையாகிய கடவுளே!, நாங்கள் இயேசுவினிடத்தில் கற்றுக் கொள்வதற்குத் தாமதித்ததையும், அவரையே பின்பற்ற விரும்பாததையும், வெட்கத்தோடு அறிக்கையிடுகிறோம். நீர் எங்களோடு பேசி எங்களை அழைத்தீர்; நாங்களோ கவனிக்கவில்லை. உமது மகிமை எங்களைச் சுற்றிவரப் பிரகாசித் -தது; நாங்களோ அதைக்காணாத குருடராயிருந்தோம்.பலர் மூலமாகவும் உமது கரங்களை எங்களிடத்தில் நீட்டினீர்; நாங்களோ அக்கரங்களைக் கடந்து சென்றோம். உம்மிடமிருந்து நாங்கள் அதிகமான நன்மைகளைப் பெற்றிருந்தும் உமக்கு நன்றி செலுத்த -வில்லை; உமது மாறாத அன்புக்கு அபாத்திரராயிருந்தோம்.

அவை: எங்களுக்கிரங்கி, எங்களை மன்னித்தருளும் தயவுள்ள ஆண்டவரே.

திரு: எங்கள் வணக்கக் குறைவையும்; எங்கள் வேண்டுதல்களில் காணப்பட்ட வெளியாசாரத்தையும், சுய நேசத்தையும்; எங்கள்உறுதியின்மையையும், அற்ப விசுவாசத்தையும்; அவை ஐக்கியத்தை அசட்டை செய்ததையும், கிறிஸ்துவிற்காகச் சாட்சிபகரத் தாமதித்ததையும்; எங்கள் பொய்யான வேடத்தையும், ஆண்டவருடைய வழிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து வேண்டுமென்ற எங்கள்அறியாமை யையும், எங்களுக்கு மன்னித்தருளும் படி உம் மிடம் மன்றாடுகிறோம்.

அவை: எங்களுக்கிரங்கி, எங்களை மன்னித் தருளும் தயவுள்ள ஆண்டவரே.

திரு: எதில் எங்கள் நேரத்தை வீணாகக் கழித் தோமோ அல்லது நீர் எங்களுக்குக் கொடுத்த ஈவுகளை அபாவனை செய்தோமோ, அதை நீர் எங்களுக்கு மன்னித்தருளும். எங்கள் பொல்லாத செயல்களுக்காக நர்ங்கள் சாட்டுப்போக்கு சொல்லியிருந்தால், அதை நீர் எங்களுக்கு மன்னித்தருளும். தீமைகளை நன்மைகளினால் வெல்லுகிறதற்கு நாங்கள் விரும்பாமல் இருந்ததையும், நீர் தந்த சிலுவையைச் சுமக்கப் பின்வாங்கினதையும், எங்களுக்கு மன்னித்தருளும்.

அவை: எங்களுக்கிரங்கி, எங்களை மன்னித் தருளும் தயவுள்ள ஆண்டவரே.

திரு: நாங்கள் கடவுளுடைய அன்பை மற்றவர் களுக்குக் காட்டாத குற்றத்தையும், அவர் களுடைய துன்பங்களையும் பாடுகளையும் எங்கள் சிந்தையில் வையாத குற்றத்தையும், எங்களுக்கு மன்னித்தருளும். நாங்கள் எங்கள் நிதானிப்பில் எண்ணமற்றிருந்தோம், குற்றப்படுத்து கிறதில் தீவிரமாயிருந்தோம், மன்னிப்பில் அரைமனதாயிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை: (பாடுதல்) எத்தனை திரள் என் பாவம் என்தேவனே எழியன் மேல் இரங்கையனே.

எல்லாரும்: கடவுளே உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உமது மிகுந்த இரக்கங்களின் படி என் மீறுதல்கள் நீங்க என்னைச்சுத்திகரியும். கடவுளே சுத்த இருதயத்தை என்னிலே உருவாக்கியருளும் நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

திரு: பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக் கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ் வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். நமக்குப் பாவமில்லை யென்போமா னால். நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம். உண்மை நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட் டால், நமது பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு, அவர் உண்மையும் நீதியுமுள்ளவராய் இருக்கிறார்.

அவை: ஆமென்.

10. அவை அறிவிப்புகள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பாட்டு: ஆண்டவருடைய திருப்பணிக்கான காணிக்கை.

12. உடன்படிக்கை

(அவையினர் எழுந்து நிற்க)

திரு: அன்பானவர்களே, நாம் இப்பொழுது நம்மை உடன்படிக்கையின் கடவுளுக்குக் கட்டுப்படுத்தி, கிறிஸ்துவின் நுகத்தைச் சுமப்போமாக. நுகம் சுமத்தலின் கருத்தாவது: கிறிஸ்துவின் நமது தொழிலையும், நிர்வாகத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்றும், அவரே நமது வெகுமதியாய் இருக்கவேண்டுமென்றும், நாம் மனப்பூர்மாய் சம்மதிக்கிறோம் என்பதாகும்.

கிறிஸ்துவுக்கு நாம் செய்யவேண்டிய பணிகள் அநேகமுண்டு. சில பணிகள் இலகு வானவை, மற்றவை கடினமானவை. சில பணிகள் நமக்குப் புகழச்சியையும், மற்றவை இகழ்ச்சியையும் கொடுக்கும். சில நம்முடைய விருப்பத்திற்கும் நயத்திற்கும் தக்கவைகள், மற்றவை நமது விருப்பத்திற்கு எதிரானவை, நட்டத்தையே கொண்டு வரும். சிலவற்றில் நாம் கிறிஸ்துவையும் நம்மையும் திருப்திப்படுத்தலாம், ஆனால் மற்றறைவைகளில் நாம் நம்மை ஒறுத்தா லன்றி கிறிஸ்துவைத் திருப்திப்படுத்தவே இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்பணிகள் யாவற்றையும் நாம் செய்து முடிப்பதற்கு, போதிய வல்லமை நமக்குக் கிறிஸ்துவுக்குள் நிச்சயமாய் அருளப்பட்டிருக்கிறது. நம்மைப்பெலப்படுத்து கிற அவருக்குள் நம்மால் எல்லாவற்றையும் செய்ய இயலும்.

ஆகையால் அன்பானவர்களே, இப்பொழுது நாம் நம்மை உண்மையாகவும் முழுமையாகவும் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கக் கூடுமோவென்று, நம் இருதயங்களை சோதித்தறிவோமாக.

அவையினர் முழங்காற்படியிட-அமைதி

திரு: கடவுள் ஏற்படுத்திய உடன்படிக்கையை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். கடவுளுடனேயே உடன்படிக்கை செய்யுங்கள். அவருக்கே உண்மையுள்ளவர்களாய் இருப் போம் என்று நிர்ணயம் பண்ணுங்கள். உங்கள் இதயங்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, இவ்வுடன்படிக்கையிலிருந்து ஒருபொழுதும் பின்வாங்க மாட்டோமென்று, உங்கள் சொந்தப் பலத்திலும் தீர்மானங்களிலும் சார்ந்து கொள்ளாமல், கடவுளுடைய பலத்திலேயே சார்ந்து தீர்மானம் செய்யுங்கள்.

அமைதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு: வேண்டுதல் செய்வோமாக.

தந்தையாகிய கடவுளே, தூய தகப்பனே, இந்தக் கிருபையுள்ள உடன்படிக்கையில் பங்காளிகள் ஆகும்படி எங்களைக் கிறிஸ்துவின் மூலம் அழைத்தவரே; கீழ்ப்படிதலின் நுகத்தை நாங்கள் மனமகிழ்வுடன் எங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, உம்மை நேசிக்கவும், உமது முழுமையான சித்தம் இன்னதென்று அறிந்து, அதற்குக் கீழ்ப்படியவும் உடன்படுகிறோம், வழியும். நீர் எங்களுக்கு வெளிப்படுத்தின படியால், அவர் செல்லுமிடமெல்லாம் நாங்கள் அவரைப் பின்பற்றுவோம். நாங்கள் எப்பொழுதும் உமக்கே சொந்தமானவர்கள்; ஒருக்காலும் நாங்கள் எங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல. **ஆமென்.**

**எல்லோரும் எழுந்து நின்று சொல்ல வேண்டியது:**

நான் உமக்கேயல்லாமல் எனக்குச் சொந்தமல்ல; கடவுளுடைய சித்தத்தின்படி என்னை எந்த நிலைமையிலாயினும் ஏற்படுத்தி, எவ் விடத்திலாயினும் இருத்தியருளும். நான் பணிசெய்ய, பாடனுபவிக்க, உமக்காக வேலை கொள்ளப்பட அல்லது விடப்பட, உமக்காக உயர்வடைய அல்லது இழிவடைய, உமக்காக வாழ்வடைய அல்லது தாழ்வடைய, உமக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் வைத்திருக்க அல்லது வேறுமையாய் இருக்க எனக்குச் செய்யும். நான் எல்லாவற்றையும் மனவிருப்பாயும், மனப்பூர்வமாயும் உம்முடைய விருப்பத்திற்கும்,ஆதீனத்திற்கும் ஒப்புக்கொடுக்கிறேன்.தந்தை, மைந்தர் தூய ஆவியானவராகிய மகிமையுள்ள கடவுளே, நீர் என் நேசர் ஆனீர், அடியேன் உமகு தாசன் ஆனேன். அப்படியே ஆவதாக. மண்ணுலகில் நான் செய்யும் இந்த உடன்படித்கை விண்ணுலகில் நிலைத்திருப் பதாக. ஆமென்.

13. பாட்டு

14. கர்த்தருடைய திருவிருந்து

திரு: உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

அவை: அப்படியே எங்கள் இருதயத்தை ஆண்டவரிடத்தில் உயர்த்துகிறோம்.

15. (12-19, 32-38ஆம் பக்கத்தில் உள்ளபடி தொடரவும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த உடல் அடக்கம் அல்லது எரித்தல் வழிபாட்டு ஒழுங்கு

## அ) வளர்ந்தோர்

**வீட்டில் நடத்தப்பட வேண்டியவை.**
(திருமறை வசனங்கள் சில வாசிக்கப்படலாம்)

1. தேவாரம் அல்லது விருத்தம் எம்மைமீட்கும்

2. பாட்டு

3. வேண்டுதல்: திருப்பணியாளரின் சொந்த வேண்டுதல் அல்லது பின்வரும் சுருக்க விண்ணப்பங்கள்.

வல்லவரும், நித்தியருமாகிய கடவுளே, வாழ்வுக்கும் மரணத்திற்கும் அதிபதியே, எங்கள் வழிகளெல்லாம் நீரே கடவுள் என்று அறிந்துள்ளோம், உம்மையே ஒப்புக்கொள்ளுகிறோம், எங்கள் உள்ளத்தைத் துயரம் ஆட்கொண்ட போதிலும், உம்மிடத்தில் நாங்கள் வைத்துள்ள அன்பும், விசுவாசமும் எங்களை ஏவுவதினால், இந்த வழிபாட்டை நிறைவேற்றக் கூடியிருக்கிறோம். அழிவுக்குரியவைகளின் நிழலிலிருந்து எங்களை எடுத்து, உமது பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையின் ஒளிக்குள் எங்களை உயர்த்தியருளும் விகாரம் பொருந்திய இவ்வாழ்வுச் சிந்தனைகளிலிருந்து எங்களை நீக்கி, நீர் வசிக்கும் என்றும் மாறாத மகிமை நிறைந்த நித்திய அரசுக்குள்எங்கள் மனங்களைத்திருப்பியருளும். காணப்படுகிறவைகளின் சிதைவின்மத்தியில்வாழும் எங்களிடம்,காணப்படாதவராகிய உதேற்றரவாளனை அனுப்பி,எங்களோடு பேசியருளும். ஆண்டவராகிய இயேசு கிறிஸதுவின் பேரில வேண்டிக்கொள்கிறோம். சுவாமி ஆமென்

ஆண்டவரே,நாங்கள் ஒரேயொரு தரம் பாவத்திற்கென்று மரித்துவிட்டோம். உம்மை ஏற்றுக் கொண்டபடியினால் நாங்கள் மறுபடியும் பிறந்து நித்தியத்திற்கென்று வாழுகிறோம். இவ்வுலக வாழ்வை ஓடிமுடித்து,கடந்து வருகின்ற போது,உம்மிடத்தில் என்றென்றுமாய் வாழுவதற்கே வருகிறோம்.இந்த நம்பிக்கையில் நாங்கள் நிலை நிற்க எங்களுக்கு இரங்கியருளும் சுவாமி ஆமென்.

இரக்கமுள்ள தந்தையே,எல்லா ஆறுதலுக்கும் அரவணைப்புக்கும் காரணரே, துக்கம் நிறைந்திருக்கும் உமது அடியாரை(விசேடமாய் இவ்வீட்டினரை ) உமது இரக்க உருக்கத்தோடு கண்ணோக்கிப் பார்க்குமாறு வேண்டுகிறோம். யாவருடைய கண்களிலிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரை நீரே துடைத்துவிட வேண்டுமென மன்றாடுகிறோம. ஆபத்துக் காலத்தில் எங்கள் அடைக்கலமும் பெலனும்,அநுகூலமான துணையும் நீரே என்பதை நாங்கள் அறிந்து கொள்ளவும்,எல்லாப் புத்திக்கும் மேலான கிறிஸ்துவினுடைய அன்பை நாங்கள் உணர்ந்து கொள்ளவும கிருபை செய்தருளும்.தம்முடைய சிலுவை மரணத்தினால் மரணத்தை வெற்றி கொண்டு,தம்முடைய உயிர்த்தெழு தலினால் நித்திய வாழ்வின் வாசலை எங்கள் எல்லாருக்குமாகத் திறந்தருளிய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவில் நமபிக் கையையும்,விசுவாசத்தையும், எங்களுக்குத் தந்தருளும். கிறிஸ்து இரட்சகரின் நாமததினாலே வேண்டிக் கொள்ளுகிறோம். கடவுளே
ஆமென்

கர்த்தருடைய விண்ணப்பம்

4. பின்வரும் திருமறைப்பாடங்களில் ஒன்றோ அல்லது விரும்பியவாறோ வாசிக்கப்பட வேண்டும்.
சங்கீதம்23 அல்லது 90 அல்லது 91 அல்லது 130 யோவான் 14 1-6,27; 1 பேதுரு 1; 3-9; 1 கொரிந்தியர் 15.1-4,20-26, 35-38, 42-44-50,53-58; உரோமர் 8.28,31-35,37-39யு;
திருவெளிப்பாடு 79-17; 21 .1-7

5 விசேட பாட்டு அலலது குடும்பப்பாட்டு அல்லது
பொதுப்பாட்டு (பாடாமலும் விடப்படலாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தஉடல் அடக்கம் அல்லது
எரித்தல் வழிபாட்டு ஒழுங்கு

6. அருளுரை

7. வேண்டுதல் (பின்வரும் வேண்டுதல் அல்லது திருப்பணியாளரின் சொந்த விண்ணப்பம்)

எல்லா வல்லமையும்,மிகுந்த இரக்கமுள்ள தந்தையே,இவ்வேளையில் எங்களை சூழ மந்தாரமாயிருக்கின்ற போதும்,எங்கள் மேல் நீர் வைத்துள அன்பும், கிருபையும் மங்கவில்லை என்பதை நன்கறிவோம். ஆகையால் விடியற்காலத் திற்குக் காத்திருக்கிற ர்களை போல முழுநம்பிக்கையோடு நாங்கள் உமக்காகக் காத்திருக்கிறோம். நாங்கள் முறுமுறுக்காமல் எங்களைத் தற்காத்து,உமது சித்தத்தையே நாங்கள் செய்யும்படி இரவும் பகலும் நீர் எங்களோடிருந்தருளும்.

நீர் இப்பொழுது உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அடியானை(ளை), இதுவரை எங்கள் மத்தியில் வாழவிட்டதற்காக உம்மைமனமாரத் துதிக்கிறோம். இவருடைய வாழ்வில், ஆங்காங்கு காணப்பட்ட அன்பிற்காகவும், நம்பிக்கைக்காகவும், சகாயத்திற்காகவும் உம்மை வாழ்த்துகிறோம். இவருடைய வாழ்வு இயல்பினால்,எங்கே பாரம் குறைந்ததோ,எங்கே இருள் நீங்கி ஒளி தோன்றியதோ அதற்தகாக உமக்கு எம் நன்றி கூறுகிறோம். எங்களை விட்டு இவர் பிரிந்த போதிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அடைந்த இடம் உமது மகிமையின் சமூகமே என்பதையுணர்ந்து ஆறுதலடைகிறோம்.இவரிலிருந்த குறைவுகள் யாவற்றையும் அகற்றி, உமது கிருபையினாலே இவரை நிறைவுபடுத்தி, உமது நித்திய இராச்சியத்தில் சேர்த்தருளுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்

(கர்த்தருடைய விண்ணப்பம் முன்புசொல்லப்படவில்லை எனில், இங்கே சொல்லலாம்)

8. திருவருள் அறிவிப்பு
பிதா, குமாரன்,பரிசுத்தாவி

9. பாட்டு: இவ்வேளையில் இறுதி மரியாதை செலுத்தப்படலாம்.

10. கல்லறையண்டை நடத்தப்பட வேண்டியவை
(இறந்த உடலை வீட்டிலிருந்து கல்லறைத் தோட்டத்திற்குக் கொண்டு போகும்பொழுது , வசதிக்கேற்ப நன்றாகப் பாடக்கூடிய சிலர் முன்நடந்து சமயோசிதமான பாட்டுக்களை பாடுதல் நல்லது. கல்லறைத் தோட்டத்திற்குள் பிரவேசித்த பின் திருப்பணியாளர் உடலை எதிர்கொண்டு,அதற்கு முன்னே நடந்து, கீழே கொடுக்கப்படும் வசனங்களை வாசிக்க வேண்டும். இரு திருப்பணியாளர்கள் பங்குபற்றினால்,இவை மாறி மாறி வாசிக்கப்படலாம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த உடல் அடக்கம் அல்லது
எரித்தல் வழிபாட்டு ஒழுங்கு

உயிர்த்தெழுதலும் மெய்வாழ்வும் நானே;என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைத்திருப்பான்.

உயிரோடிருந்து ஏனெனில் விசுவாசம் வைக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரிப்பதேயில்லை.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடை வார்கள்.

என் மீட்பர் உயிரோயடிருக்கிறார் என்றும்,அவர் கடைசி நாளிலே பூமியின் மேல் நிற்பார் என்றும்,நான் அறிந்திருக்கிறேன்.நானே நல்ல மேய்ப்பன்.......என் ஆடுகள் என் சத்தத்தை அறியும் நானும் அவற்றை அறிவேன் அவைகளை என்னிடத்திலி ருந்து எவராலும் பறித்துவிட இயலாது. உலகத்தில் நாம் ஒன்றையும் கொண்டு வந்ததுமில்லை,உலகத்தைவிட்டு நாம் ஒன்றையும் கொண்டு போகவும் முடியாது.கர்த்தர் கொடுத்தார்,கர்த்தர் எடுத்தார்,கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்.நாம் பிழைத்தாலும் ஆண்டவருக்கென்று பிழைத்திருக்கிறோம். நாம் மரித்தாலும் ஆண்டவருக்கென்றே மரிக்கிறோம்.நான் உயிரோடிருப்ப தினால்,நீங்களும் உயிரோடிருப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த உடல் அடக்கம் அல்லது
எரித்தல் வழிபாட்டு ஒழுங்கு

மரண பரியந்தம் உண்மையாயிரு, நான் உனக்கு சீவகிரீடத்தை அருளுவேன்.

11. கல்லறையண்டையில் - பாட்டு

12. உடல் குழிக்குள் இறக்கப்பட்டபின் அல்லது எரிக்க்பபடமுன் (எல்லாரும் அமைதியாயிருக்க திருப்பணியாளர் சொல்ல வேண்டியது)

திரு: மாமிசமெல்லாம் புல் போன்றது.அதன் அழகெல்லாம் வெளியின் பூ போன்றது. கர்த்தரின் சுவாசம்அதன் மேல் படவே, புல்உலரும், பூ உதிரும்.

இக்கல்லறையண்டையில் புலம்பிக்கொண்டிருக்கும் நாம், நம்பிக்கையற்றவர்களாய் புலம்பாமல், நமது தலைகளை உயர்த்தி நிற்கிறோம்.ஏனெனில் பூமிக்குரிய கூடாரமாகிய நமது வீடு அழிந்து போனாலும், கடவுளால் உண்டாகிய ஒரு வீடு விண்ணுலகில் நமக்குண்டென்று அறிந்திருக்கிறோம். இந்தத் உடலில் குடியிருக்கையில்,நாம் வெளிப்பாட்டைக் கண்டு நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். ஆனால் கடவுள் தமது சித்தத்தை ஒவ்வொருவர் வாழ்விலும் நிறைவேற்றும் பொழுது, நமது விசுவாசம் வெளிப்பாடாக மாறும். அப்பொழுது நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளு வோம்.ஆகையால் கடவுள் தாமே கட்டியிருக்கிற அந்திபாரங்க ளுள்ள நகரத்தை நாம் அடையும் வரைக்கும், நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

இறந்துவிட்ட இச்சகோதரனை சகோதரியை கடவுள் தம்மிடம் சேர்த்துக்கொள்ளத் திருவுளம் கொண்டபடியால், இவருடைய உடலை மண்ணுக்கு மண்ணாகவும், சாம்பலுக்குச் சாம்பலாகவும்புழுதிக்குப் புழுதியாகவும் பூமிக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.(அல்லது சாம்பலுக்குச் சாம்பலாகவும்,புழுதிக்குப் புழுதியாகவும் நெருப்பிற்கு ஒப்புக்கொடுக்கிறோம். நித்திய வாழ்வை அடைவதற்கு உயிர்த்தெழுதல் உண்டாகும் என்று உறுதியாய் நாம் நம்புகிறபடியினாலும், இயேசுக்கிறிஸ்துவுக்குள் என்றென்றுமாய்ச் சீவிப்போம் என்ற விசுவாசத்தினாலும் நாம் இப்படிச் செய்கிறோம். இயேசு கிறிஸதுவுக்கே எல்லா மகிமையும் என் றென்றும் உண்டாகுவதாக. ஆமென்

(அதன் பின் திருப்பணியாளர் சொல்ல வேண்டியது)
வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன் அது ஆண்டவருக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த உடல் அடக்கம் அல்லது
எரித்தல் வழிபாட்டு ஒழுங்கு

மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்களாய் இருப்பார்கள் என்றெழுது; ஆம் அவர்கள் தம் உடைப்பினின்று இளைப்பாறுவார்கள். அவர்களுடைய செயல்கதளும் அவர்களோடே கூடப்போகும் என்று ஆவியானவரும் சொல்லுகிறார்.என்றது

13. வேண்டுதல் செய்வோமாக

திரு: இரக்கமுள்ள தந்தையே ,உமது மைந்தராகிய இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழுதலும் மெய்வாழ்வுமாக ஆக்கியவரே பாவமரணத்திலிருந்து எங்களை எழுப்பி நீதிவாழ்வுக்குள் கொண்டு வாரும்நாங்கள் இப்புவி வாழ்வை விட்டு அகலும் போது,எங்களைவிட்டுப் பிரிந்துபோன சகோதரனும் ரியும் நாங்களும் உமது பார்வையில் விரும்பப்படத்தக்கவர்களாய்க் காணப்பட உமது மட்டற்ற கிருபையினால் கடாட்சித்தருளும். ஆமென்

எல்லாருக்கும் தந்தையானவரே நாங்கள் இதுவரை அன்பு செலுத்தி ,இனி காணமுடியாதயாவர் பொருட்டும் உமக்குநன்றி செலுத்துகிறோம். ஆண்டவரே அவர்களுக்கு உமது சமாதானத்தைக் கொடும: உமது தெய்வீக ஒளி அவர்கள் மேல் ஒளிர்வதாக;உமது அன்பின் புத்தியினாலும் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வமையினால்லும் உமது சித்தத்தின்
நல் நோக்கை அவர்களிலே
நிறைவேற்றியரு ளும். ஆண்டவராகிய
இயேசு கிறிஸ்துவில் வேண்டுதல் கேளும்
சுவாமி. ஆமென்.
எல்லா வல்லமைதயுள்ள கடவுளே,
எல்லா ஆறுதலையும் அளிக்கின்றவரே,
இங்கே கண்ணீர் விட்டு அழும் ஒவ்வொரு
வர் மேலும் உமது தயவான
இரக்கத்தைப் பொழிந்தருளும். அவர்கள்
தமது துக்கத்தையெல்லாம் உம்மேல்
இறக்கிவிடவும், உமது அன்பின்
ஆறுதலையும் அரணைப்பையும் அறிந்து
கொள்ளவும் இரங்கியருளும்.
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில்
வேண்டுதல் கேளும் சுவாமி, ஆமென்.
தூயரான தந்தையே, எமது தடமை
களிலெல்லாம் உமது உதவியை
ஈந்தருளும். எமது பிரச்சனைகள்
சிக்கல்களிலெல்லாம் தஉமது
வழிகாட்டலையும், எமது ஆபக்துக்களில்
உமது பாதுகாவலையும், எமது
தக்கங்களில் உமது சமாதானத்தையும்
நீர் தாமே ஈந்தருள வேண்டுமென்று
எங்கள் ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவின் மூலம் மன்றாடுகிறோம்.
ஆமென்.

14. வேண்டுமாகில் கர்த்தருடைய
விண்ணப்பம் சொல்லப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருள் அறிவிப்பு

15. பாட்டு

ஆ) சிறுபிள்ளைகள்

16. வீட்டில் நடத்தப்பட வேண்டிய வழிபாடு,வளர்ந்தோருக்கானதைப் பேன்று அமையலாம்.

17. திருமறைப்பாடங்கங்:
சங்கீதம் 23, 130, யோவான் 14:1-6, 27, மாற்கு 10:13-16 ஆகிவை வாசிக்கப்படல் வேண்டும்.

18. கல்லறைத் தோட்டத்தில் வளர்ந்தோருக்கானதைப் போன்று அமையலாம்.

19. பூமிக்கு அல்லது நெருப்பிற்கு ஒப்புக்கொடுத் தல் பின்வருமாறு இருத்தல் வேண்டும்
இப்பிள்ளை எல்லாவல்லமையுள்ள கடவுளின் பாதுகாப்பிற்குள் இருப்பதால், இவனுடைய/ளுடைய உடலை மண்ணுக்கு மண்ணாகவும், சாம்பலுக்குச் சாம்பலாகவும் நெருப்பிற்கு ஒப்புக் கொடுக்கிறோம்). நித்திய வாழ்வு உண்டாகும் என்ற மெய்யான நம்பிக்கை யினால்நாம் இப்படிச் செய்கிறோம்.
ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியணையின் மத்தியில் வாசம் செய்யும் ஆட்டுக்குட்டியானவரே இவர்களுக்கு மேய்ப்பனாய் இருப்பார். அவர் இவர்களை மேய்ச்சலுக்குக் கொண்டு போய், மெய்வாழ்வழிக்கும் நீரூற்றுக்கு இவர்களை நடத்திச் செல்வார். கடவுள் தாமே இவர்கள் கண்களினின்று கண்ணீரை அறவே துடைத்து விடுவார். ஆமென்

வேண்டுதல் செய்வோமாக:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, இவ்வாழ்வில் சிறுபிள்ளைகளை நீர் அதிகமாய் நேசித்து அவர்களை கரிசனையோடு பராமரித்து வரப்போகும் வாழ்வில் அவர்கள் உம்மையும், உமது தந்தையாரையும் முகமுகமாய்ப் பார்க்கத்தக்கதாக அவர்களுக்கான விண்ணுலக வீட்டையும் ஆயத்தம் செய்துள்ளீர். நீர் இறந்துபோன இந்தப் பிள்ளையை உம்மிடத்தில் சேர்த்துக் கொண்டீர் , இவனுக்கு/ளுக்கு உமது சமாதானத்தை ஈந்துள்ளீர்; இதை நாங்கள் உறுதியாய் நம்புகிறோம் ஆண்டவரே. ஏனெனில். "சிறு பிள்ளைகள் என்னிடம் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், என்று சொன்னீரே தந்தையோடும்,தூய ஆவியானவரோடும், உமக்கே எல்லா மகிமையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனமும், வணக்கமும், இன்றும் என்றும், உலக முடிவுபரியந்தம் உண்டாவதாக. ஆமென்

எல்லா வல்லமையுள்ள தந்தையே, நல்லதும் முழுமையானது மான ஈவுகளைத் தருகின்றவரே, இப்பிள்ளை யில் நீர் கொண்டு வந்த எல்லா மகிழ்ச்சிக்கும் அன்புக்குக்கும் நாங்கள் உமக்குத் துதி செலுத்துகிறோம். இப்பிள்ளையை உமது கரத்திலேயே இருக்கின்றான் றாள் என்ற நிச்சயத்திற்காகவும் உமக்குத் துதி செலுத்துகிறோம். உமது கிருபையுள்ள வழிநடத்துதலுக்கு எங்களை ஒப்புக்கொடுக்கவும்: உமது மகிமையின் ஒளியில் உமது பிள்ளைகள் யாவரோடும் நாங்களும்இணைக்கப்படும் வரை,இப்புவிவாழ்வில் நாங்கள் சமாதானத்தோடும்,மகிழ்ச்சியோடும் விசுவாசத்தோடும் வாழ்வதற்கு எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் இரங்கியருளும்.
ஆமென்

கர்த்தருடைய விண்ணப்பம்
திருவருள் அறிவிப்பு

20. பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் அருளுரையாளர்களை ஏற்றுக்கொள்ளும் வழிபாடு

1. வணக்க அழைப்பு

2. பாட்டு

3. விண்ணப்பம்

திரு: எல்லா இருதயங்களையும் கண்டு அவ்வவற்றின் விருப்பங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிற எல்லா வல்லமையுமுள்ள தந்தையே. உமக்கு மறைவாய் இருப்பது ஒன்றுமேயில்லை நாங்கள் உம்மிடத்தில் முழுமையாய் அன்பு செலுத்தவும்,உமது திருப்பெயரையே என்றென்றும் புகழ்ந்து போற்றவும் தக்கதாக நீர் தாமே எங்கள் இதயங்களைத் தூய்மைப் படுத்தியருள வேண்டுமென்று,எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் உம்மை வேண்டுகிறோம்.ஆமென்

எல்லாரும்:விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது திருப்பெயர் தூயதெனப் போற்றப்படுவதாக,உமது அருளாட்சி வருவதாக, உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல்,மண்ணுலகிலும் நிறைவேறுவதாக, அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை இன்று எங்களுக்குத் தீமைசெய்தவர்களை நாங்கள் மன்னித்திருக்கிறது போல,நாங்கள் செய்த தீமைகளை எங்களுக்க மன்னித்த ருளும்.எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்,தீமையினின்று எங்களை விடுவித்தருளும்,ஆட்சியும், வல்லமையும் மாட்சிமையும் என்றென றைக்கும் உம்முடையவையே. ஆமென்.

4. அவையினர் உட்கார்ந்திருக்க,திருப்ப ணியாளர் சொல்ல வேண்டியது.

நமது சகோதர சகோதரிகளாகிய இவர்க ளை உள்ளூர் அருளுரையாளர்களாக முறைப்படி ஏற்றுக்கொள்வதற்கு நாம் கடவுள் முன்னிலையில் கூடியிருக்கிறோம். இப்பெரும்பணிக்கென்று இவர்கள் கடவுளால் அழைக்கப்பட்டி ருக்கிறார்கள்என நாம் நம்புகிறோம். நமது அவை பரீட்சிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்கள் பலரை மனந்திரும்பும் படி அழைக்கவும், திருஅவை புனிதத்தில் முன்னேறவும் கடவுளுடைய திருப்பெயருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்சிமையுண்டாக்கவும் தக்கதாக, கடவுளுடைய வாக்கைப் போதிக்கும் பணிக்கு, அன்பினாலும் வல்லமையினாலும் நிரப்பப்பட வேண்டுமென்று நாம் கடவுளை மன்றாடுவோமாக.

5. பின்வரும் திருமறைப்பகுதிகளை அல்லது இவற்றில் சிலவற்றை திருப்பணியாளரோ அல்லது ஏற்கனவே உள்ளூர் அருளுரையாளராக இருக்கும் ஒருவரோ வாசித்தல்.

மத்தேயு 28:18-20;ஏசாயா 6:1-8; ஏசாயா 3:7-10; மாற்கு 3:13-14; லூக்கா 10:1-2; எபேசியர் 4:7-8, 11-13; 2 கொரிந்தியர் 4:5-6

6. பாட்டு பாடப்படும் பொழுது, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உள்ளூர் அருளுரையாளர்கள் திருப்பணியாளருக்கு முன் ஒழுங்காய் வருதல்.

7. திருப்பணியாளர் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்த பின் சொல்ல வேண்டியது.

அன்பானவர்களே, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் திருப்பெயரில், நாம் உங்களை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளுகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது கர்த்தர் தமது திருஅவைக்கு ஒப்புவித்துள்ள பொறுப்புவாய்ந்த இப்பணியைக் குறித்தும்,நற்செய்தியைப் பரப்புவதற்கு அவர் கையாண்ட வழிவகைகளைக் குறித்தும்,தமது அரசாட்சியை அவர் நிலைநிறுத் தினதைக் குறித்தும்,உங்களுக்கு நினைவூட்ட ப்பட்டிருக்கிறது. எனவே,இவைபற்றிய உங்கள் நம்பிக்கையையும், வாக்குறுதியையும் நீங்கள் வெளியரங்கமாய் அறிக்கையிட வேண்டும்.

திரு. இயேசுக் கிறிஸ்துவையே நீங்கள் உங்களுடைய மீட்பரா கவும், ஆண்டவராகவும், ஒப்பக்கொள் ளுகின்றீர்களா?அவரது திரு அவையில் உண்மையுள்ள உறுப்பினராய் இருப்போமென வாக்குக் கொடுப்பீர்களா?

விடை: ஆம், அப்படியே வாக்குக் கொடுக்கின்றோம்.

திரு: திருமறையில் வெளிப்படுத்தப்பட் டிருக்கின்ற சத்தியம் கடவுளுடைய வார்த்தையே என்றும்,இயேசுக் கிறிஸ்துவின் மூலம் வரும் மகத்துவம் நிறைந்த மீட்பை மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்றும், தூய ஆவியான வரின் ஏவுதல் உங்கள் உள்ளத்தில் உள்ளதென்றும் நம்புகிறீர்களா?

விடை ஆம்,அப்படியே நம்புகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் அருளுரையாளர்களை ஏற்றுக்கொள்ளும் வழிபாடு

திரு: விண்ணப்பம் செய்வதிலும் திருமறை வாசிப்பதிலும்,இவ்வித அறிவிற்கு உதவியான ஆராய்வு செய்வதிலும் ஆர்வமாகவும் ஊக்கமாகவும் இருப்போமென வாக்குக் கொடுப்பீர்களா?

விடை: ஆம் அப்படியே வாக்குக்கொடுக்கின் றோம்.

திரு: மெதடிஸ்த திரு அவையின் கொள்கை,கட்டுப்பாடு என்பற்றி ற்கமைய, உங்களால் இயன்றமட்டும் திருஅவை வளர்ச்சியடையும் வழிவகைகளைத் தேடி,அவைகளைச் செயலாக்க முயலுவோமென உறுதிவாக்கு தருவீர்களா?

விடை: ஆம்,அப்படியே தருகின்றோம்
நீங்கள் இப்பொழுது கூறிய பயபக்தியான சாட்சிகளையும் ,வாக்குறுதிகளையும் கேட்ட நாங்கள்,எமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் திருப்பெயரினாலும் அவருடைய திருஅவையின் பெயரினாலும்,மனமகிழ்ச்சியுடன் உங்களை உள்ளூர் அருளுரையாளர்கள ாக ஏற்றுக் கொள்ளுகிறோம்.
நற்செய்திப்பணியில் உங்கள் ஐக்கியம் எங்களுடனிருக்கத்தக்க தாக தந்தை, தனையன்,தூயஆவியானவராகிய எல்லா வல்லமையுமுள்ள கடவுளுடைய திருவருள் உங்களுடன் எப்போதும் இருப்பதாக,ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எல்லாரும் எழுந்து நிற்க.
திருப்பணியாளர் ஏற்றுக்கொள்ளப்பட வந்திருக்கும் அருளுரை யாளர்கள் ஒவ்வொருவரினதும் வலக்கரம் பிடித்துச் சொல்ல வேண்டியது.
நீர் உள்ளூர் அருளுரையாளர் நிலைக்கும்,பணிக்கும் ஏற்றுக் கொள்ளப்படும் அடையாளமாக,திருஅவையின் பேரினால் நான் உமக்கு ஐக்கியத்தின் வலக்கரம் தருகின்றேன்.
ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் முழங்காலிட்டு இருக்க,ஒவ்வொருவருக்கும் திருமறை கொடுத்துக் திருப்பணியாளர் சொல்லவேண்டியது.
உமது கரங்களில் இத்திருமறையைப் பெற்றுக்கொள்,உமக்கு இவ்வார்த்தை யைத்தந்த கடவுள் இயேசுவே.இது சத்தியவார்த்தையாய் இருப்பதால், நீர்அவரையே அருட்செய்தியாய் அறிவிக்கத்தக்கதாக,உமக்குக் கிருபையையும் அறிவையும் வல்லமையையும் அவரே தந்தருளுவாராக.ஆமென்

9. எல்லாரும் எழுந்து நிற்க,ஒரு முழுஉள்ளூர் அருளுரையாளர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ் வொரு உள்ளூர் அருளுரையாளருக்கும்,திருப் பேரவையினால் அனுப்பி வைக்கப்பட்ட சான்றிதழ்களைக் கையளிப்பார்.
அதன்பின்பின்வரும் விண்ணப்பங்களை ஏறெடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. விண்ணப்பம்:

தூய ஆவியானவரின் வரங்களுக்காக மன்றாடுவோமாக. எல்லா வல்லமையுமுள்ள நிலையான கடவுளே, உமது சித்தத்தை நிறைவேற்றக்கூடிய மனிதன், உம்மால் மாத்திரம் அருளப்படும் வரங்களையும் கிருபைகளையும் பெறுவது போல; உமது பணியாளர்களாகிய இவர்களுக்கும் விசுவாசம், திடபக்தி, அறிவு, அன்பு ஆகியவற்றை ஈந்து, பலனைப்பிறப்பிக்கும் பணிக்கு இவர்களை அலங்கரித்தருளும். பயபக்தியான இந்நேரத்தில், தங்கள் தாலந்துகளையும் வாழ்வையும் உமக்குகந்த காணிக்கைகளாகப் படைத்துள்ள இவர்களை, புனிதப்படுத்தி, உமது நற்பேறை ஈந்தருளும், இவற்றை உமது புதல்வனாகிய ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் திருப்பெயரால் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

படிப்பதிலும், ஆயத்தம் செய்வதிலும் கடவுள் வழிநடத்துதலுக்காக மன்றாடுவோமாக. எல்லா அறிவிற்கும் வல்லமைக்கும் ஊற்றாயிருக்கிற கடவுளே, உமது தூதைக்கொண்டு செல்லுமிவர்கள் உமது வாக்கைப்படிக்கும் போது, உமது தூய ஆவியானவரின் அறிவொளியைப் பெற்றுக்கொள்ளவும், அவரால் எல்லாவித உண்மைக்குள்ளும் வழிநடத்தப்படவும் தக்கதாக, மனத்தாழ்மை யையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்த இதயத்தையும் இவர்களுக்குக் கொடுத் தருளும். இவற்றை எங்கள் ஆண்டவராகிய உமது புதல்வன் இயேசுக்கிறிஸ்துவின் நிமித்தம் கட்டளையிட்டருளும். ஆமென்.

பொது வழிபாட்டில் கடவுளுடைய வல்லமை வெளிப்படுதலுக்காக மன்றாடுவோமாக. இயேசுக்கிறிஸ்துவின் திருப்பெயரில் கூடியிருக்கும் உமது மக்கள் மத்தியில், உமது தூய ஆவியானவர் மூலம் எப்பொழுதும் சமுகமா யிருக்கிற கடவுளே; உமது திருவாக்கானது பாவிக்கு உணர்ச்சியையும், கவலையாயி ருப்பவருக்கு ஆறுதலையும், அடிமைக்கு விடுதலையையும் கொடுக்கவும்; உம்மில் பக்தி முதிர்ந்த விசுவாசிகள் உமது திருப்பெயரில் கட்டியெழுப்பப்பட்டு உமது மகத்துவப்பெயருக்கு மாட்சிமையை வரப்பண்ணவும், உமது பணியாளராகிய இவர்களுக்கு உமது பணிணாளராகிய இவர்களுக்கு உமது நிலையான திருவெளிப்பாட்டின் நிச்சயத்தைக் கொடுத்தருளும். ஆமென்

கடவுளுடைய அருளாட்சியின் வருகைக்காக மன்றாடுவோமாக. எல்லா வல்லமையுமுள்ள கடவுளே, உமது திருஅவையானது இங்கேயும், பூமியின் கடைசிவரையிலான எல்லா இடங்களிலும் உமது நற்செய்தியை அறிவிக்க நீர்தாமே உதவியருள வேண்டுமென்று மன்றாடுகிறோம். உமது அருளாட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவும், ஊனுடல்பெற்ற யாவரும்
உம்முடைய மீட்பைக் காணவும் தக்கதாக,
உமது நற்செய்தியை இறிவிக்கும் எல்லார்
மேலும்; குணமாக்கும் ஆவியையும்,
அறிவையும், ஆர்வத்தையும், அன்பையும்
அனுப்பியருளும், உலகத்தின் பாவத்தைச்
சுமந்து தீர்க்க வந்த இயேசுகிறிஸ்துவின்
தீர்க்க வந்த இயேசுகிறிஸ்துவின்
திருப்பெயரில் இவற்றை இரந்து கேட்கிறோம்.
ஆமென்.

11. பாட்டு

12. திருவருள் அறிவிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர் அர்ப்பண வழிபாடு

1. வணக்க அழைப்பு
2. பாட்டு
3. பின்வரும் திருமறை வாக்கியங்களை அல்லது அவற்றில் சிலவற்றை திருப்பணியாளர் வாசித்தல்.

ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் எல்லா நாட்டினரையும் சீடராக்குங்கள், அவர்களுக்குத் தந்தையார், மைந்தர், தூய ஆவி யானவரின் திருப்பெயரால் திருமுழுக்குக் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள் இதோயுகமுடிவு வரை எல்லாநாட்களிலும் நான் உங்களோடு இருக்கின்றேன், என்று அவர்களுக்குச் சொன்னார். (மத் 28:19-20).

கிறிஸ்துவின் உடலாகிய திருஅவையின் பொதுவாழ்க்கை வளர்ச்சி அடைவதற்காக, கடவுளுக்குரிய மக்களை திருப்பணிக் கென்று பக்குவப்படுத்தும் பொருட்டு அவர்களைத் தந்தருளினர். அவரே சிலரைத் திருத்தூதுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகவும், சிலரை இறைவாக்கு உரைப்போ ராகவும், சிலரை அருட்செய்தியாளராகவும்.சிலரை அவை ஆயர்களாகவும் போதகர்களாகவும் திருஅவைக்குத் தந்தருளினார். (எபே 4:12,11).

கடைசியாக சகோதரரே, உண்மை யானவை எவையோ, நன்மதிப்புள்ளவை எவையோ, நேர்மையானவை எவையோ, நற்பண்பு புகழ்ச்சி உள்ளவை எவையோ, அவற்றிலேயே உங்கள் சிந்தனைகளைச் செலுத்துங்கள். (பிலி 4: 8)

அவர் ஒரு சிறுபிள்ளையைத் தம்மிடம் அழைத்து அதை அவர்கள் நடுவே நிறுத்தி, என்னிடம் நம்பிக்கை கொண்டுள்ள இந்தச் சிறுவருள் ஒருவன் பாவக்குழிக்குள் இடறி விழ எவன் காரணமாயிருக்கிறானோ அவன் கழுத்தில் ஒரு பெரிய ஏந்திரக் கல்லைக்கட்டி, நடுக்கடலில் அவனை மூழ்கடிப்பதே அவனுக்கு நலம். பாவக்குழியில் இடறிவிழச் செய்கிறவற்றின் பொருட்டு ஐயோ, உலகத்திற்குக்கேடு வரும், அவ்வாறு இடறி விழச் செய்பவை வந்தே தீரும். ஆனால், அவை எந்த மனிதனால் வருகின்றனவோ, ஐயோ, அந்த மனிதனின் நிலை பரிதாபமே, இந்தச் சிறுவருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனையும் நீங்கள் இழிவாகக் கருதக் கூடாதென்று எச்சரிக்கிறேன். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: இவர்களுக்குரிய தெய்வதூதர்கள் விண்ணுலகில் என் தந்தையின் முகத்தை எப்போதும் பார்த்துக்கொண்டிரு க்கிறார்கள். (மத் 18:2,6,7,10).

4. விண்ணப்பம் செய்வோமாக-எல்லாரும்

கடவுளே உமது கிருபையின்படி எங்களுக்கிரங்கும். உமது மிகுந்த இரக்கங்களின்படி எங்கள் மீறுதல்கள் நீங்குவதற்கு எங்களைத் தூய்மைப்படுத்தும். எங்கள் அக்கிரமங்கள் நீங்குவதற்கு எங்களை முழுவதுமாய்க் கழுவி, எங்கள் பாவம் அற்றுப்போக எங்களைத் தூய்மைப்படுத்தும். தூய இதயத்தை எங்களுக்குள் உருவாக்கும். என்றும் நிலைத்துநிற்கும் ஆவியை எங்கள் உள்ளத்தில் புதுப்பியும். உமது மீட்பின் மகிழ்ச்சியை எங்களுக்குத் திரும்பவும் தந்து, சுறுசுறுப்பான ஆவி எங்களைத் தாங்கும்படி செய்யும். ஆமென்.

5. பாட்டு

6. அவையினர் உட்காரத் திருப்பணியாளர் சொல்ல வேண்டியது:

அன்பானவர்களே, நமது ஓய்வுநாட் பாடசாலையில், பிள்ளைகளை மேய்த்துப் பராமரித்துப் போதிக்கும் பணிக்கென்று கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பைப் பெற்றுணர்ந்த இச்சகோதர சகோதரிகளை ஏற்றுக்கொள்ளும்படி நாம் கடவுள் முன்னிலை யில் கூடியிருக்கிறோம். இவர்கள் தாழ்மையோடும் நன்றியோடும் இப்பணிக்காகத் எங்களை கடவுளுக்கு அர்ப்பணம் செய்ய வருகிற பொழுது, இந்த உத்தரவாதம் நிறைந்த அழைப்பைப் பயபக்தியோடும் நன்றியோடும் கடவுளுடைய மாட்சிமைக் கென்று இவர்கள் ஏற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களாகும்படி, இவர்களோடு சேர்ந்து இவர்களுக்காக விண்ணகத்திலிருந்து வரும்பெல த்தைத்தேடி நமது விண்ணப்பங்களால் இவர்களைத் தாங்கவேண்டியது, அவையினராகிய நமது முழுக்கடமையுமாயிருக்கிறது.

நமது விண்ணப்ப ஆதரவை நாடி நிற்கும் அன்பர்கள் இவர்களே (திருப்பணியாளர் ஆசிரியர்களுடைய பெயர்களை வாசித்தல்- பெயர் வாசிக்கப்படும் பொழுது, ஆசிரியர்கள் ஒவ்வொருவராய் திருப்பணியாளர் முன் வந்து நிற்பர்).

7. விசுவாசத்தை அறிக்கையிடல்

திரு: அன்பானவர்களே, உங்களுக்குண்டான அழைப்பினால் நீங்கள் ஒரே நம்பிக்கைக்குள் அழைக்கப்பட்டது போல, ஒரே உடலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஆவியும். ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே திருமுழுக்கும், எல்லாருக்கும் ஒரே கடவுளும் விண்ணகத் தந்தையும் உண்டு. அவர் உங்கள் யாவர்மேலும், யாவரோடும், யாவருக்குள்ளும் இருக்கிறவர்.

ஆசி : கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு மீட்கப்பட்டோம். இது எங்களால் உண்டானதல்ல, இது கடவுளுடைய ஈவு.

குரு : வரங்களில் வேற்றுமை உண்டு, ஆனால் அவற்றைக் கொடுக்கின்ற ஆவியானவர் ஒருவரே. திருப்பணிகளிலேயும் வேற்றுமை உண்டு, ஆனால் கர்த்தர் ஒருவரே.

ஆசி : கிறிஸ்து ஒருவரே எங்களுக்குக் குரு.

திரு : நீங்கள் கடவுளுக்கு உடன் வேலையாட்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் கடவுளுடைய பண்ணையும் அவருடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்.

ஆசி : போடப்பட்டிருக்கிற அடித்தளமாகிய இயேசுக் கிறிஸ்துவையே அல்லாமல், வேறு அடித் தளத்தைப்போட ஒருவராலும் இயலாது.

திரு : ஆகையால், நீங்கள் உங்களை முழுவதுமாகக் கடவுளுக்கு உரியதும் உகந்ததும் உயிருள்ளதுமான பலியாக ஒப்புக்கொடுங்கள். கடவுளுடைய இரக்கத்தின் பெயரால் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுவது இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர்
## அர்ப்பண வழிபாடு

ஆசி : கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது.

திரு : நீங்கள் வெட்கப்படாத பணியாளர்களாகவும், திருவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவர்களாகவும், கடவுளுக்கு முன்பாக உங்களை உத்தமர்களாய் நிறுத்தும்படி கருத்துள்ளவர்களாய் இருங்கள்.

ஆசி : இவைகளை செயல்படுவதற்கு எங்களில் தகுதியானவர் யார்? அவரன்றி எங்களால் ஒன்றுமே செய்ய இயலாது.

திரு : நீங்கள் எல்லாவிதமான நற்செயல்களிலும் பெருகுகிறவர்களாய் இருக்கும்படி, கடவுள் உங்களிடத்தில் எல்லாவிதக் கிருபையையும் பெருகச் செய்வதற்கு வல்லவராய் இருக்கிறார்.

ஆசி : எங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்.

திரு : நாம் வேண்டிக் கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே செயற்படும் வல்லமையின் படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய கடவுளுக்கு.

ஆசி : அவையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலை முறைக்கும், எக்காலத்திலும் மாட்சிமை யுண்டாவதாக. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர்
அர்ப்பண வழிபாடு

(அவையினர் விண்ணப்ப நிலையிலிருக்க, ஆசிரியர்கள் முழங்காலிட்டுச் சொல்ல வேண்டியதாவது)

கிறிஸ்துவின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய பெலத்தில் நம்பிக்கை வைத்து, இந்த அவையின் ஓய்வு நாட் பாடசாலை ஆசிரியர் பணிக்கென்று நான் என்னை அவரிடத்தில் அர்ப்பணிக்கின்றேன். இயேசுக்கிறிஸ்துவிற்குள்ளான தெய்வீக அன்பை அறியும் அறிவிற்குள்ளும், அவருடைய திருஅவையின் ஐக்கியத்திற்குள்ளும், பிள்ளைகளை வழிநடத்துவதே எல்லாக்காரியங்களிலும் எனது இலக்காகும். நான் என் எசமானுக்கு உண்மையாயிருந்து, பாடங்களை ஆயத்தம் செய்வதிலும், பணி செய்வதிலும் ஊக்கமாயிருக்கவும்: ஓய்வுநாட்பாடசாலைக்கு ஒழுங்காகவும் நேரம்தவறாமலும் வரவும்: உள்ளான கிறிஸ்துவ முன்மாதிரியை பிள்ளைகளுக்கு முன்வைக்கவும் முயற்சியெடுப்பேன். ஆண்டவரே எனக்கு உதவி புரிவாராக. ஆமென.

8. திருப்பணியாளர் சொல்ல வேண்டியது: நீங்கள் உங்களுடையவர்களல்ல: கிறிஸ்துவின் மரண விலைகொடுத்து வாங்கப்பட்டவர்கள். ஆகையால், கடவுளுக்கே உரியவர்களாகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியர்
அர்ப்பண வழிபாடு

நீங்கள், உங்கள் உடலினாலும் ஆவியினாலும் கடவுளை மாட்சிமைப் படுத்துங்கள்.

உங்களுக்கு அளிக்கப்பட்ட வரங்களைக் குறித்து விளிப்பாயிருங்கள். உங்கள் வாசிப்பிலும், அறிவுரை கூறுவதிலும், போதனை செய்வதிலும் மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்.

உங்களில் ஒருவர் அறிவில் குறைவுள்ளவராய் இருந்தால், யாவருக்கும் நிறைவாய்க் கொடுக்கிறவரும், எவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய கடவுளிடத்தில் கேட்கக்கடவர். ஆனாலும், எவ்வித சந்தேகமுமின்றி விசுவாசத்தோடே கேட்கக்கடவர்.

அவையானது, உங்கள் முயற்சிகளை கடவுள் ஏற்று, நீங்கள் நற்பேறு அடைய வேண்டுமென, வேண்டுதல் செய்து: ஓய்வு நாட்பாடசாலை ஆசிரியர் பணிக்கென்று உங்களை மன மகிழ்ச்சியுடன் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் திருப்பெயரால் ஏற்றுக்கொள்ளுகிறது.

9. பாட்டு

10. அருளுரை

11. அவையினர் செய்யும் அர்ப்பண விண்ணப்பம்.

உமது திருப்பணிக்கென்று எங்களை அழைத்து, எங்கள் கர்த்தரும் மீட்பருமாயிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிற இயேசுக் கிறிஸ்துவின் அரசினுள் எங்களை உடன் பணியாளர்களாக்கிய கடவுளே, உமதன்பினால் உமது திருப்பணியில் எங்களோடு உழைக்கும் படி நீர் தெரிவு செய்ய எங்கள் சகோதர சகோதரிகளாகிய இவர்கள் நிமித்தம் உம்மைத் துதிக்கிறோம். இவர்கள் எங்களோடே சேர்ந்து பணி செய்து உம்முடைய கிருபையினால் உமது சுத்தமான அழைப்பை நிறைவேற்றி; பிள்ளைகள் நற்பேறு பெறவும், உம்முடைய அறிவிலும் பயத்திலும் பயிற்று விக்கப்படவும், இவர்களை ஏற்றுக்கொள்ளுமாறு உம்மிடம் வேண்டுதல் செய்கிறோம். இவர்களை உமது சிலுவையினால் இடைவிடாது நிரப்பி, உமது அரிய அன்பை இவர்கள் மற்றையோருக்கு வெளிப்படுத்துவதற்குத் தகுதி யுள்ளவர்களாக்கும்படி, இவர்களை எல்லா அறிவாலும், ஆத்மீக நிறைவினாலும் ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்க வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம்.

ஆமென்

12. திருவருள் அறிவிப்பு
(விரும்பினால் புனித திருவிருந்து பரிமாறப்படலாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதங்கள்

## 01. நற்பேறு பெற்றவன் யார்

நற்பேறு பெற்றவன் யாரெனில், பொல்லார் அறிவுரையின்படி நடவாமலும், பாவிகளின் வழியை பின்பற்றாமலும், இகழ்வார் கூட்டத்தில் உட்காராமலும்,
ஆண்டவர் அருளிய வேதத்தை மகிழ்ச்சியோடு படித்து,
இரவும் பகலும் அவர் அருளிய வேதத்தைத் தியானித்து வருகிற மனிதனே.
அவன் நீரோடையின் ஓரத்தில் நடப்பட்ட மரத்தைப் போலிருப்பான்; பருவகாலத்தில் கனி தந்து, என்றும் பச்சையாயிருக்கும் அம்மரத்தைப்போலச் செழிப்பான்; அவன் செய்வனைத்திலும் வெற்றி பெறுவான்.
பொல்லாரோ அவனைப் போலிரார்: அவர்கள் காற்று அடித்துக் கொண்டு போகும் பதரைப் போலிருப்பார்கள்.

ஆகையால் பொல்லார் தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்: அந்தப் பாவிகளுக்கு நல்லார் கூட்டத்தில் இடமேயிராது.

நல்லாரின் வழியை ஆண்டவர் பாதுகாப்பார்:
பொல்லாரின் வழியோ பாழாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. கடவுளின் மாட்சிமையும், மனிதரின் மேன்மையும்

ஆண்டவரே, எங்கள் ஆண்டவரே, உமது திருப்பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகிறது!
உமது மாட்சிமையை வானங்களுக்கு மேலாகவும் விளங்கச் செய்கிறீர்.

உம்முடைய பகைவருக்கு அறிவு உண்டாகும் படியும்,
எதிரியும் பழிகாரனும் அடங்கியிருக்கும் படியும், பாலகர் வாயினாலும் குழந்தைகள் வாயினாலும் வல்லமை விளங்கச் செய்தீர்.

உம் கைகளின் வேலைப்பாடாகிய வானத்தையும்,
நீர் உண்டாக்கின நிலாவையும்
வின்மீன்களையும் நான் கவனிக்கும்போது,
மனிதனை நீர் நினைவில் கொள்வதற்கு அவன் யார்? மனிதருடைய மைந்தனை நீர் கண்ணோக்குவதற்கு அவன் யார்? என்கிறேன்.

தெய்வ தூதரைவிட அவனைச் சற்று சிறியவனாக்கினீர்;

மாட்சிமையையும் மேன்மையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்.
உமது கை படைத்தவற்றின் மேல் அவன் ஆட்சி செலுத்தும்படி அருள் புரிந்தீர்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் அவன்
பாதங்களுக்குக் கீழ்படுத்தினீர்.

ஆடுமாடுகள், காட்டு விலங்குகள் அனைத்தையும் அவனுக்குக் கீழ்படுத்தினீர்.

வானத்துப் பறவைகளையும் கடல் மீன்களையும் ஆழ்கடலில் நீந்திச் செல்லும் உயிரினங்கள் அனைத்தையும் அவனுக்குக் கீழ்படுத்தினீர்.

ஆண்டவரே, எங்கள் ஆண்டவரே, உமது திருப்பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகிறது.

16. நம்பிக்கையோடு கடவுளிடம் மன்றாடுதல்
கடவுளே, என்னைக் காப்பாற்றும் , நான் உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன்.

நான் ஆண்டமவரிடம், "நீரே என் ஆண்டவர்; நீரே என் செல்வம், வேறெதுவுமன்று" என்று சொன்னேன்.

உலகிலுள்ள உம்முடைய அடியார்கள் எவ்வளவோ மேம்பட்டவர்கள்; அவர்களோடிருப்பதே எனக்குப் பெருமகிழ்ச்சி.

பிற தெய்வங்களை நாடிச் செல்வோருக்குத் துன்பம் பெருகும்: நான் அவற்றிற்கு இரத்த பலிகளைச் செலுத்த மாட்டேன்: அவற்றின் பெயர்களை என் நாவினால் உச்சரிக்கவும் மாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரே, நீரே எனக்குக் கிடைத்திருக்கும் சொத்து; வாழ்கையில் எனக்குக் குறிக்கப் பட்ட பங்கு நீரே; எனக்குரிய பாகத்தைப் பாதுகாப்பவர் நீரே.

இன்பமான இடங்களில் எனக்குப் பாகம் கிடைத்தது, ஆம், என் உரிமைச் சொத்து மிகவும் மேன்மையானதே.

என்னை வழிநடத்துகிற ஆண்டவரை நான் துதிக்கின்றேன், இரவில்கூட என் மனச்சான்று எனக்கு அறிவுரை கூறுகிறது.

ஆண்டவரை எப்பொழுதும் நான் என் கண்முன் வைத்திருக்கிறேன்; அவர் என் வலப்பக்கத்தில் இருக்கிறார், என்னை அசைக்க எவராலும் முடியாது.

ஆகையால் என் உள்ளம் மகிழ்ந்தது; என் ஆன்மா களிகூர்ந்தது; என் உடலும் நம்பகிக்கையில் நிலை கொண்டிருக்கும்.

ஏனெனில், என் ஆன்மாவை நீர் பாதாளத்தில் விட்டுவிட மாட்டீர். உம் அடியானைப் படுகுழியில் இறக்கவிட மாட்டீர்.

மெய்வாழ்வுக்குரிய நெறியை எனக்குத் தெரியப்படுத்துகிறீர்.; உமது முன்னிலையில் எனக்கு முழு நிறைவான மகிழ்ச்சியும், உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பமும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. படைப்பில் கடவுளின் மாட்சிமை (1-6)

வானங்கள் கடவுளின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன: வான மண்டலம் அவர் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கிறது.
ஒவ்வொரு பகலும் அதை அடுத்த பகலுக்குத் தெரிவிக்கிறது: ஒவ்வோர் இரவும் அதை அடுத்த இரவுக்கு அறிவிக்கிறது.

அவற்றிற்குக் குரலுமில்லை, மொழியுமில்லை அவற்றின் ஒலி கேட்கப்படுவதுமில்லை.

ஆயினும், அவற்றின் குரல் உலகெங்கும் கேட்கிறது: அவை கூறும் செய்தி உலகின் கடயெல்லை வரை எட்டுகிறது.

அங்கே கடவுள் கதிரவனுக்கு ஒரு கூடாரத்தை அமைத்திருக்கிறார்: அது மணவீட்டிலிருந்து புறப்படுகிற மனவாள னைப்போல்வருகிறது: ஓடுவதில் மகிழ்ச்சி காணும் பந்தைய வீரனைப்போல் அது தன் பாதையில் ஓடுகிறது.
வானத்தில் ஒரு முனையில் எழுந்து அதன் மறுமுனைவரைக்கும் அது செல்கிறது: அதன் வெப்பத்திற்கு மறைறவானது ஒன்றுமில்லை.

## 23. ஆண்டவரே நம் ஆயர்

ஆண்டவர் என் ஆயராயிருக்கிறார்;
எனக்கு ஒன்றும் குறைவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் புல்லுள்ள இடங்களில் மேய்ந்து என்னை இளைப்பாறச் செய்கிறார்; அமைதியான நீர் நிலைகளண்டையில் என்னைக்கொண்டு போய் விடுகிறார்.

அவர் எனக்குப் புது உயிர்அளித்து, தமது திருப்பெயருக்கேற்ப என்னை நீதிப் பாதைகளில் நடத்துகிறார்.

நான் மரணவிருள் சூழ்ந்த பள்ளத்தாக் கிலே நடந்தாலும் பொல்லாங்கிற்கு அஞ்சிடேன்; ஆண்டவரே, நீர் என்னோடு இருக்கிறீர்; உமது கோலும், உமது தடியும் எனக்கு ஆதரவு அளிக்கும்.

என் எதிரிகள் கண்முன் நீர் எனக்கு ஒரு விருந்தை ஆயத்தப்படுத்தி, என் தலையில் நறுமணதைலம் பூசி என்னை வரவேற் கிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

உம்முடைய அருள்நலமும் பேரிரக்கமும் என் வாழ்நாளெல்லாம் என்னை விட்டு நீங்காதிருக்கும்; நான் ஆண்டவரின் வீட்டில் என்றென்றும் நிலைத்திருப்பேன்.

24. மாவேந்தரின் வருகை:

மண்ணுலகும் அதிலுள்ளவை அனைத்தும்
ஆண்டவருடையவை:
நிலவுலகும் அதில் வாழும் குடிகளும்
ஆண்டவருக்கே சொந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்கள் மீது அதற்கு அடித்தளமிட்டு, ஆறுகள் மீது அதை நிலைநாட்டினவர் அவரே.

ஆண்டவருடைய மலையில் ஏறத் தகுதி உடையவன் யார்?
அவரது புனித அகத்தில் நிற்கக்கூடியவன் யார்?

கறையற்ற கைகளும் மாசற்ற உள்ளமும் உடையவனாய், தெய்வச் சிலைகளை வணங்காமலும் நயவஞ்சகத்தோடு வாக்குறுதி அளிக்காமலும் இருக்கிறவனே.

அவன் ஆண்டவரிடமிருந்து ஆசியும் தன் மீட்பாராகிய கடவுளிடமிருந்து நீதிமான் என்னும் தீர்ப்பையும் பெறுவான்.

அவரை நாடித்தேடும் மக்கள் பெறும் நற்பேறு இதுவே: கடவுளே, உமது முன்னிலையில் வரவிரும்புகிறவர்கள் இவர்களே.

மாவேந்தர் உள்ளே வருகின்றார்: வாயில்களே விரிவாகத் திறவுண்டு வரவேற்பளியுங்கள்: தொன்மை வாய்ந்த கதவுகளே, திறந்து நில்லுங்கள்.
யார் இந்த மாவேந்தர்? இவர்தாம் வல்லமையும் ஆற்றலுமுள்ள ஆண்டவர்: இவர்தாம் வெற்றி வீரரான ஆண்டவர்.
வாயில்கள், விரிவாகத்திறவுண்டு வரவேற்பளியுங்கள்; தொன்மை வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவுகளே திறந்து நில்லுங்கள்; மாவேந்தர் உள்ளே வருகின்றார்.
யார் இந்த மாவேந்தர்? இவர் வெற்றி வேந்தரான ஆண்டவர்: இவரே மாவேந்தர்.

34. கடவுளின் கருணையைப் புகழ்தல் (1-8)
ஆண்டவரை நான் எக்காலத்திலும் போற்றுவேன்: அவரது புகழ் எப்போதும் என் நாவில் இருக்கும்.

ஆண்டவரின் செயலைக் குறித்து என் ஆன்மா மேன்மை பாராட்டும்: சிறுமைப்படுகிறவர்கள் அதைக்கேட்டு மகிழ்ச்சியடைவார்கள்.

என்னோடு சேர்ந்து ஆண்டவரின் மாட்சிமையை வெளிப்படுத்துங்கள்: நாம் ஒருமித்து அவரது திருப்பெயரைப் புகழ்ந்து போற்றுவோம் வாருங்கள்.

நான் ஆண்டவரின் உதவியை நாடினேன்: அவர் எனக்குச் செவிசாய்த்தார்: எல்லாவகையான அச்சத்தினின்றும் அவர் என்னை விடுவித்தார்.
அவரை நோக்கும் எந்த முகமும் மலரும்: அந்த முகம் ஒருபோதும் வாடாது.
இதோ, திக்கற்றவன் மன்றாடினான்: ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்: அவர் அவனை எல்லஇடுக்கண்களி னின்றும் விடுவித்துக் காப்பாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்களைச் சூழ அவருடையதுாதனானவர் பாளையமிறங்கி, அவாகளைக் காப்பாற்றுகிறார்.

## 46. கடவுள் நம்மோடிருக்கிறார்.

கடவுள் நமக்கு அடைக்கலமாகவும் ஆற்றலுமாயும் இருக்கிறார். இக்கட்டுக் காலத்தில் நமக்கு உறுதுணை அளிப்பவர் அவரே.

ஆகையால் நிலவுலகம் நிலைமாறினாலும் ,மலைகள் அடிபெயர்ந்து ஆழ்கடலில் விழுந்தாலும்.

கடல்கள் எல்லாம் கொந்தளித்துப் பொங்கினாலும், அவற்றின் பெருக்கால் குன்றுகள் அதிர்ச்சியுற்றாலும் நாங்க்ள் அஞ்சமாட்டோம்.

ஆறு ஒன்று உண்டு; அதன் நீரோடைகள் கடவுளின் நகருக்கு இன்பம் தருகின்றன: உன்னதமானவரின் புனித அகத்தை மகிழ்விக்கின்றன.

அந்நகரின் நடுவில் கடவுள் இருக்கிறார்: அது ஒருபோதும் வீழ்ச்சியுறாது: விடியற்காலையில் கடவுள் அதற்கு உதவி செய்வார்.

பிற இனத்தவர் திகிலடைந்தனர், அரசுகள் கலக்கமுற்றன; கடவுளின் குரல் முழங்கிற்று; பூமி கரைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி வேந்தரான ஆண்டவர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் கடவுளே நமக்கு அடைக்கலம் .

ஆண்டவரின் செயல்களை வந்து பாருங்கள்; அவர் உலகில் அதிர்ச்சியூட்டும் செயல்களைச் செய்திருக்கிறார்.

உலகின் கடையெல்லை வரைக்கும் போர்களை அற்றுப்போகச் செய்கிறார்; வில்லை ஒடிக்கிறார், ஈட்டியை முறிக்கிறார்; தேர்களை நெருப்பில் சுட்டெரிக்கிறார்.

"நீங்கள் அமைதியாயிருந்து நானே கடவுள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்; பிறஇனத்தவரிடையே நானே உயர்ந்திருப்பேன்: பூமியில் நானே உயர்ந்திருப்பேன்" என்கிறார்.

வெற்றிவேந்தரான ஆண்டவர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் கடவுளே நமக்கு அடைக்கலம்.

51. பாவமன்னிப்பிற்காக மன்றாடுதல் (1-10)

கடவுளே உமது பேரருளுக்கேற்ப எனக்கு இரங்கும்; உமது அளவற்ற இரக்கத்திற்கு ஏற்ப என் தவறுகளைத் துடைத்தழித்துவிடும்.

என் கறை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும்; என் பாவம் அற்றுப் போகும்படி என்னைத் தூய்மைப் படுத்தியருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தவறுகளை நான் உணர்கிறேன்; என் பாவம் எப்பொதும் என் கண்முன் நிற்கிறது.

உமக்கு விரோதமாகவே நான் பாவம் செய்தேன்; உமது பார்வையில் தீமையானதை நடப்பித்தேன். ஆகையால் நீர் வழங்கின தீர்ப்பில் உமது நீதி விளங்குகிறது; நீர் அளித்த குற்றத் தீர்ப்பில் விளங்குகிறது.

இதோ, நான் அக்கிரமத்தில் உருவானேன்; என் தாய் என்னை பாவத்தில் கருதரித்தாள்.

இதோ, உள்ளத்தில் உண்மை இருக்க வேண்டுமென்று நீர் விரும்புகிறீர்; அந்தரங்க உள்ளத்தில் எனக்கு ஞானத்தைத் தெரியப்படுத்தினீர்.

ஈசோப்பால் என் பாவத்தீட்டை நீக்கியருளும்; அப்பொழுது நான் தூய்மையாவேன்; என்னை கழுவியருளும்; அப்பொழுது நான் வெண்பனியைவிட வெண்மையாவேன்.

நான் மகிழ்ச்சி ஒலியையும் களிப்பு ஆரவாரத்தையும் கேட்கும்படி செய்யும்; அப்பொழுது நீர் நொறுக்கின என் எலும்புகள் களிகூரும்.

என் பாவங்களைப் பராதபடி உமது முகத்தை மறைத்துக்கொள்ளும்; என் அக்கிரமங்களை யெல்லாம் துடைத்தழித்து விடும்.

கடவுளே, தூய இதயத்தை என்னுள்ளே உருவாக்கும்; உறுதிதரும் ஆவியை என் உள்ளத்திலே புதிதாகத் தந்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84\. திருக்கோவில் மீதுள்ள நாட்டம்
வெற்றி வேந்தரான ஆண்டவரே, உமது ஆலயம் எந்தளவு அருமையானது, ஆண்டவரின் ஆலயப் பிரகாரங்கள் மீதுள்ள தேட்டத்தால் என் ஆன்மா ஏங்கிப் போயிற்று; என்றுமுள்ள கடவுளை நினைத்து என் உள்ளமும் உடலும் களிப்புடன் ஆர்ப்பரிக்கின்றன.

வெற்றி வேந்தரான ஆண்டவரே, என் கடவுளே, என் அரசே, உம்முடைய பீடங்கள் இருக்கும் இடங்களில் வீடு கட்ட கிடைத்தது; தங்கள் குஞ்சுகளுக்கு வீடு கட்ட சிட்டுக்குருவிகளுக்கும் இடம் கிடைத்தது.

உமது ஆலயத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றவர்கள்; அவர்கள் எந்நாளும் உம்மைப் புகழ்ந்து போற்றிக்கொண்டே இருப்பார்கள்.

உம்மிடமிருந்து வலிமை பெற்றுச் சீயோன் மலையில் ஏறிச் செல்ல ஆவலுடையோர் நற்பேறு பெற்றவர்கள்.

வறண்ட பள்ளத்தாக்கை அவர்கள் கடந்து செல்கையில், அதை நீரூற்றுகள் உள்ள இடமாயிருக்கும் படி செய்கிறார்கள்; பிறகு எல்லோரும் சீயோனில் கடவுள் முன்னிலையில் காணப்படுவார்கள்.
வெற்றி வேந்தரான கடவுளாகிய ஆண்டவரே, என் விண்ணப்பத்திற்குச் செவி கொடுத்தருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கேடமாகிய கடவுளே, எங்களைக் கண்ணோக்கியருளும்; நீர் தேர்ந்தெடுத்தவர் மீது உமது அருட்பார்வையைத் திருப்பும்.

உமது ஆலயப்பிரகாரத்தில் ஒரு நாள் இருப்பது, வேறொரிடத்தில் ஆயிரம் நாள் வாழ்வதைவிட மேலானது. பொல்லாரின் கூடாரங்களில் அவர்களோடு வாழ்வதைவிட, என் கடவுளின் ஆலய வாயிற்படியில் காவற்காரனாயிருப்பதையே தேர்ந்து கொள்வேன்.

கடவுளாகிய ஆண்டவர் நமக்குக் கதிரவனும் கேடயமுமாயிருக்கிறார்; ஆண்டவர் அருளையும் மேன்மையையும் அளிப்பார்; நேர்மையாக நடப்பவர்களுக்கு நன்மையான எல்லாவற்றையும் வழங்குவார்.

வெற்றி வேந்தவரான ஆண்டவரே, உம்மை நம்பும் மனிதன் நற்பேறு பெற்றவன்.

90. மனிதரின் நிலையாமை (1-12)

ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக நீரே எங்களுக்கு அடைக்கலமாய் இருந்து வந்திருக்கிறீர்.

மலைகள் தோன்றுமுன்பே, பூமியையும் உலகத்தையும் நீர் உருவாக்கு முன்பே, நீர் கடவுள்; தொடக்கமும் முடிவும் இல்லாதவராய் என்றென்றைக்கும் நீரே கடவுளாயிருக்கிறீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் மனிதனை மறுபடியும் மண்ணாகச் செய்கிறீர்; “மனுமக்களே, மண்ணுக்கே-திரும்புங்கள்” என்கிறீர்.

உமது பார்வையில் ஆயிரம் ஆண்டுகள் கடந்து போன நேற்றைய தினம் போலிருக்கின்றன; இரவின் ஒரு சாமம்போல் இருக்கின்றன.

நீர் ஒரு வெள்ளம் போல அவர்களை வாரிக் கொண்டு போகிறீர்; அவர்கள் தோன்றி மறையும் கனவை ஒத்தவர்கள்; அவர்கள் காலையில் வளரத்தொடங்கும் புல்லுக்கு ஒப்பாயிருக் கிறார்கள்.

அது காலையிலே வளர்ந்து மலர்ச்சியுற்று, மாலையில் வாடிக் காய்ந்து போகிறது.

நாங்கள் உமது சினத்தால் அழிந்து போகிறோம் உமது கடுஞ்சினத்தால் கலங்குகிறோம்.

எங்கள் குற்றங்களை உம் கண்முன்னே வைத்திருக்கிறீர்; மறைவான எங்கள் பாவங்களை உமது முகத்தின் ஒளியில் வைத்திருக்கிறீர்.

எங்கள் வாழ்நாளெல்லாம் நாங்கள் உமது சினத்தையே அனுபவித்து வருகிறோம்; எங்கள் வாழ்வுக்காலத்தை ஒரு துயரக்கதையாய் முடித்துவிட்டோம்.

எங்கள் ஆயுட்காலம் எழுபது ஆண்டுகளே; வலிமை மிகுந்திருந்தால் என்பது ஆண்டுகள்; ஆயினும், அதன் மேன்மை வருத்தமும் கவலையுமே;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது விரைவில் கடந்து போகிறது: நாங்களும் பறந்து போகிறோம்.

உமது சினத்தின் வலிமையை உணர்ந்தவன் எவனுமில்லை: உமது கடுஞ்சினத்தினால் ஏற்படும் திகிலை உணர்ந்தவன் எவனுமில்லை.

நாங்கள் ஞானமுள்ள உள்ளத்தினராகும்படி, வாழ்நாள்களை எண்ணி எண்ணிப் பயனுறக் கழிக்கும் அறிவை எங்களுக்குப் புகட்டியருளும்.

98. கடவுள் உலக நீதிபதி

ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்; அவர் வியக்கத்தக்க செயல்களைச் செய்திருக்கிறார். அவரது வலக்கையும் அவரது பரிசுத்த புயமும் அவருக்கு வெற்றியளித்தன.
ஆண்டவர் தமது வெற்றியை அறிவித்தா; தமது நீதியைப் பிற இனத்தவர் கண்முன் வெளிப்படுத்தினார். இஸ்ரவேல் மக்களுக்குத் தாம் காட்டின இரக்கத்தையும் தம் உண்மைகளையும் நினைவுகூர்ந்தார்; உலகின் எல்லைப்புறங்களிலுள்ள அனைவரும் நம் கடவுளின் வெற்றியைக் கண்டனர்.
உலகெங்கும்வாழ்வோரே நீங்களெல்லாரும் ஆர்ப்பரியுங்கள்: ஆண்டவரைப் பாடுங்கள்: முழக்கமிட்டு ஆரவாரத்தோடு பாடுங்கள், புகழ்ந்து பாடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரமண்டலங்கொண்டு ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்: சுரமண்டலங்கொண்டு இன்னோசை எழுப்பி அவரைப்பாடுங்கள்.

ஆண்டவராகிய அரசரின் முன்னிலையில் எக்காளங்களைக் கொண்டும் சூழ்நிலைகளைன் கொண்டும் மகிழ்ச்சியோடு ஆர்ப்பரியுங்கள்.

கடலே, அதிலுள்ளவையே, ஆண்டவர்முன் முழங்குங்கள்; உலகமே, அதில் வாழும் மக்களே, அவர்முன் ஆர்ப்பரியுங்கள்.

ஆறுகளே,ஆண்டவர்முன் கை கொட்டுங்கள்; மலைகளே,அவர்மன் ஆரவாரத்துடன் பாடுங்கள்.

அவர் உலகத்திற்குத் தீர்ப்பளிக்க வருகிறார்: உலகத்தை நீதியோடு தீர்ப்புச் செய்வார்; எல்லா இனத்தவர்க்கும் நேர்மையான தீர்ப்பு வழங்குவார்.

## 100.புகழ்ப் பாடல்

உலகெங்கும் வாழ்வோரேஇ நீங்கள் எல்லோரும் ஆண்டவரை ஆர்ப்பரிப்புடன் பாடுங்கள்.

மகிழ்ச்சியோடு ஆண்டவரை வழிபடுங்கள்: களிப்பாரவாரத்துடன் அவர் முன்னிலையில் வாருங்கள்.

ஆண்டவரே கடவுள் என்பதை உணருங்கள்; அவரே நம்மை உண்டாக்கினவர். நாம் அவருக்கே சொந்தம், அவருடைய மக்கள், அவர் வழிநடத்தும் ஆடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியறிதலோடு அவரது ஆலய
வாயிலுக்குள் செல்லுங்கள்;
புகழ்ப்பாடலைப் பாடிக்கொண்டு அவரது
ஆலயப் பிரகாரங்களில் நில்லுங்கள்;
அவருக்கு நன்றி செலுத்தி, அவரது
திருப்பெயரைப் போற்றுங்கள்.

ஆண்டவர் நல்லவர்; அவரது பேரருள்
என்றென்றும் உள்ளது; அவரது
உண்மை தலைமுறை தலைமுறையாக
விளங்கும்.

103. கடவுளின் அன்பு (1-8)

என் ஆன்மாவே, ஆண்டவரைப் போற்று;
என் முழு உள்ளமே, அவரது
திருப்பெயரைப் போற்று.

என் ஆன்மாவே, ஆண்டவரைப் போற்று;
அவர் செய்த நன்மைகளுள்
ஒன்றையும் மறவாதே.

அவர் உன் குற்றங்களையெல்லாம்
மன்னிக்கிறார்; உன்நோய்களை
யெல்லாம் குணப்படுத்துகிறார்.
உன் உயிரைப் பாதாளத்திற்குத்
தப்புவித்துக் காப்பாற்றுகிறார்:
அருளையும் இரக்கத்தையும் உனக்கு
முடியாய்ச் சூட்டுகிறார்.

நன்மைகளினால் உன் வாழ்நாளை
நிரப்புகிறார்; கழுகைப்போல் நீ மீண்டும்
இளமை பெற்றவனாய் வாழ்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் தம்முடைய செயல்களில் நீதியுள்ளவராய் இருக்கிறார்; ஒடுக்கப்படுகிற யாவருக்கும் நியாயம் கிடைக்கச் செய்கிறார்.
அவர் தமது வழிகளை மோசேயுக்கு வெளிப்படுத்தினார்; தம்முடைய செயல்களை இஸ்ரவேல் மக்கள் காணும்படி செய்தார்.

ஆண்டவர் உருக்கமும், இரக்கமும், பொறுமையும், பேரருளும் நிறைந்தவர்.

106. கடவுள் தம் மக்களுக்குக் காட்டின கருனை.(1-5, 47-48)

அல்லேலூயா! ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; அவர் நல்லவர், அவரது அருள் என்றுமுள்ளது.

ஆண்டவரின் வல்லமைமிக்க செயல்களை யாரால் எடுத்துரைக்கக் கூடும்? அவருடைய புகழையெல்லாம் யாரால் விரித்துரைக்கக் கூடும்?

நேர்மையாக நடப்போர் நற்பேறு பெற்றவர்கள்; எப்போதும் நீதியானதையே செய்வோர் நற்பேறு பெற்றவர்கள்.
ஆண்டவரே, நீர் தேர்ந்தெடுத்த மக்களுக்கு நீர் கருனை காட்டும்போது என்னை நினைத்தருளும்; அவர்களை விடுவிக்கும்போது எனக்கும் உதவி செய்தருளும்.
நீர் தேர்ந்தெடுத்த மக்களின் நல்வாழ்வை நான் காணும்படி செய்யும்; உம்முடைய மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியில் நானும்பங்குகொள்ளும் படி செய்யும். உமக்குச் சொந்தமான மக்களோடு சேர்ந்து நானும் மேன்மை பராட்டச் செய்யும்.

எங்கள் கடவுளாகிய ஆண்டவரே, நாங்கள் உமது புனிதமான பெயருக்கு நன்றி செலுத்தி, உம்மைப் போற்றி மேன்மை பாராட்டும்படி, பிற இனத்தவரிடத்திலிருந்து எங்களை வரவழைத்து ஒன்று சேர்த்தருளும்.
எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கே புகழ்ச்சி, அனாதி காலமுதல் என்றென்றைக்கும் அவருக்கே புகழ்ச்சி; எல்லா மக்களும் 'ஆமென்' என்று சொல்வார்களாக, அல்லேலூயா!

118. வெற்றிப் புகழ் (1-8)
ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; அவர் நல்லவர்; அவரது பேரருள் என்றுமுள்ளது. அவரது பேரருள் என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் மக்கள் சொல்வார்களாக.
அவரது பேரருள் என்றுமுள்ளதென்று ஆரோன் குடும்பத்தார் சொல்வார்களாக.
அவரது பேரருள் என்றுமுள்ளதென்று ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்கள் சொல்வார்களாக.
நெருக்கடியான வேளையில் நான் ஆண்டலரை நோக்கி மன்றாடினேன்; ஆண்டவர் எனக்குச் செவிசாய்த்து என்னை விடுவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் என் பக்கம் இருக்கிறார், நான் அஞ்சிடேன், மனிதன் எனக்கு என்ன செய்து விட முடியும்.
ஆண்டவர் என் பக்கம் இருக்கிறார்; அவரே எனக்குத் துணை செய்பவர்; என்னைப் பகைக்கிறவர்கள் வீழ்த்தப்படுவதை நான் காண்பேன்.

மனிதனை நம்புவதை விட ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவதே நலம்.

121. நம்மைப் பாதுகாப்பவர்
புனித மலையையே என் கண்கள் நோக்குகின்றன; எனக்கு உதவி எங்கிருந்து வரும்?
விண்ணையும் மண்ணையும் உண்டாக்கின ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்

அவர் உன் கால் இடறாதபடி பார்த்துக்கொள்வார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை; கண்ணயர்வதுமில்லை.

ஆண்டவர் உன்னைக் காக்கிறார்; ஆண்டவர் உன் வலப்பக்கத்தில் உனக்குப் பாதுகாப்பாய் இருக்கிறார்.

பகலில் வெயில் உனக்குத் தீங்கிழைக்காது; இரவில் நிலாவும் உனக்கு ஒரு கெடுதியும் செய்யாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் உன்னை எல்லாத் தீமைக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆன்மாவைக் காப்பார்.

ஆண்டவர் உன் போக்கையும் வரத்தையும் இன்றும் என்றும் காப்பார்.

122. எருசலமே நீ வாழி!
"ஆண்டவருயைட ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள்" என்று அவர்கள் என்னிடம் சொன்ன போது நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

எருசலேமே, இதோ, நாங்கள் உமது வாயில்களை கடந்துவந்து நிற்கிறோம்.

எருசலேம் தான் அழகாக ஒருங்கிணைத்துக் கட்டப்பட்ட நகரம்;

ஆண்டவரின் குலத்தினராகிய மக்கள் இங்கே வருவார்கள். இஸ்ரவேல் மக்களுக்கு இட்ட கட்டளைப் படி, ஆண்டவரின் திருப்பெயருக்கு நன்றி செலுத்த வருவார்கள்.

இங்கே நீதி வழங்கும் அரியணைகள் இருக்கின்றன; அவை தாவீதினுடைய மரபினரின் அரியணைகள்.

எருசலேமில் சமாதானம் நிலைத்திருக்கும்படி வேண்டிக் கொள்ளுங்கள்; "உன்னை நேசிக்கிறவர்கள் நலமுடன் வாழ்வார்களாக."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண் சூழ்ந்த நகரமே உன்னுள் அமைதி நிலவுவதாக; உன் மாளிகைக்குள்ளே நல்வாழ்வு இருப்பதாக.

"உன்னுள் சமாதானம் நிலவுவதாக" என்று நான் என் சகோதரர் சார்பிலும், என் நண்பர் சார்பிலும் உன்னை வாழ்த்துகிறேன்.

நம்முடைய கடவுளாகிய ஆண்டவரின் ஆலயம் இங்கே இருப்பதால், உன் வளம் பெருகும்படி மன்றாடுவேன்.

139. எல்லாம் அறிகிற கடவுள் (1-12)
ஆண்டவரே நீர் என்னைச் சோதித்துப் பார்த்து அறிந்திருக்கிறீர்;

நான் உட்காருவதும் எழுந்திருப்பதும் உமக்குத் தெரியும்; என் எண்ணங்களைத் தொலைவிலிருந்தே அறிவீர்.

நான் நடக்கிறேனா படுத்திருக்கின்றேனா என்று நீர் பார்க்கிறீர்; நான் செல்லும் வழிகளெல்லாம் உமக்கு நன்றாய்த் தெரியும்.

ஆண்டவரே, என் நாவில் சொல் பிறப்பதற்கு முன்பே, நான் சொல்ல இருப்பதை நீர் அறிவீர்.

எனக்கு முன்னும் பின்னும் நீர் என் அருகிலேயே இருக்கிறீர்; உமது கையை என் மேல் வைக்கிறீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அறிவு எனக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது; அது எனக்கு எட்டாத உயரமா யிருக்கிறது.

உமக்கு மறைவாக நான் எங்கே போவேன்? உமது முன்னிலையை விட்டு எங்கே ஓடுவேன்?

நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர்.

நான் கதிரவன் எழும் இடத்திற்கு பறந்து சென்றாலும், மேற்கே கடலுக்கப்பால் போய்த் தங்கினாலும்,

அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலக்கை என்னைத் தாங்கி நிற்கும்.

இருள் என்னை மூடிக்கொள்ளாதோ, வெளிச்சம் என்னை சுற்றிலும் இருளாக மாறாதோ என்று நான் சொன்னாலும்,

உமக்குக் காரிருளும் இருளாகாது, இரவும் பகலைப்போல் வெளிச்சமாயிருக்கும், இருளும் வெளிச்சமும் உமக்கு ஒன்றே.

148. புகழ்ப்பாடல்

அல்லேலுயா! வானங்களில் ஆண்டவரைப் போற்றுங்கள் உன்னதங்களில் அவரைப் போற்றுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைப் போற்றுங்கள்; அவருடைய படைகளே, நீங்கள் யாவரும் அவரைப் போற்றுங்கள்.

கதிரவனே, நிலாவே, அவரைப்போற்றுங்கள்; ஒளிவீசும் விண்மீன்களே அவரைப்போற்றுங்கள்.

வானதி வானங்களே அவரைப் போற்றுங்கள்; வானங்களின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைப் போற்றுங்கள்.

அவையாவும் ஆண்டவரின் திருப்பெயரைப் போற்றட்டும்; ஏனெனில் அவர் கட்டளையிட எல்லாம் உண்டாயின.

அவர் அவற்றை என்றுமுள்ள எல்லாக் காலங்களிலும் நிலைத்திருக்கச் செய்தார்; மாறாத விதிகளை அவற்றிற்கு ஏற்படுத்தினார்.

உலகில் ஆண்டவரைப் போற்றுங்கள்; மாபெரும் மச்சங்களே ஆழ்கடலிலுள்ள உயிரினங்களே,

நெருப்பே, கல் மழையே, வெண்பனியே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங் காற்றே,

மலைகளே, குன்றுகளே, கனிமரங்களே,கேதுரு மரங்களே,

காட்டு விலங்குகளே, நாட்டு விலங்குகளே, ஊரும் உயிரினங்களே, இறகுள்ள பறவைகளே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் அரசர்களே, எல்லா நாடுகளிலுமுள்ள மக்களே, தலைவர்களே, உலகின் நீதிபதிகளே,

இளைஞரே, கன்னிகளே, முதியோரே, சிறியோரே, நீங்கள் எல்லோரும் ஆண்டவரைப் போற்றுங்கள்.

அவர்கள் ஆண்டவரின் திருப்பெயரைப் போற்றுவார்களாக: அவரது திருப்பெயரே உயர்ந்தது: அவரது மாட்சிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது.

அவர் தம் மக்களிடையே தமது வல்லமையை வெளிப்படுத்தினார்: அவருடைய அடியார் யாவரும், அவருடைய அன்பார்ந்த மக்களாகிய இஸ்ரவேல் மக்களும் அவரைப் போற்றுவார்கள்: அல்லேலூயா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிச்சயதார்த்த மோதிரம் மாற்றும் ஆராதனை

திருமணஞ் செய்து கொள்ள எண்ணும் இருவரும் வழமையாகப் பெண்ணின் வீட்டில் தமது குடும்பத்தினர், அழைக்கப்பட்டோர் ஆகியோர் முன்னிலையில் வருவார்கள்.

*கீதம் அல்லது கீர்த்தனை*

ஜெபம் : பரம தந்தையே, அபாத்திரரான எங்களுக்கு நீர் தந்த ஆசீர்வாதங்கள் யாவற்றுக்கும் தாழ்மையாய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் வாழ்வு பெற்ற எல்லா அருட்கொடைகளுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நண்பர் குடும்பம் கிறிஸ்த திருமணம் என்னும் கிருபை ஆகியவற்றுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் விலையில்லாமல் பெற்றுக்கொண்டது போல தாராளமாகக் கொடுக்கவும் அருள் செய்யும் உம்மால் இணைக்கப்பட்டவர்கள் இணைந்து வாழவும்.

பெயர் கூறலாம்

இந்த ஆண் பெண் ஆகியோர் குடும்பமாகும் போது அவர்களுடைய வீடு மகிழ்ச்சியுள்ளதாகவும் அமைய உமது ஆசீர்வாதத்தைப் பொழிந்தருளுமென எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வேண்டுகிறோம் பிதாவே. ஆமென்

கீழுள்ள வேதாகமப் பகுதிகளிற் சிலவற்றை வாசிக்கலாம்

ஆதி 24 : 50 - 61 ஆதி 29 : 9 - 10, பிலி 4 : 4 - 9, தெச 5 : 12, 13, 15, 18, 21, 23, 28, கொலோ 3 : 4, 12 - 17, 1 பே 3 : 8 - 15, 1 கொரி 13 : 4 - 8

மோதிரம்மாற்றல் :

மோதிரங்களை வேதாகமத்தில் வைத்ததும் குருகூறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபம் : பரம தந்தையே, இந்த மோதிரங்களை இவர்கள் இருவரும் நிச்சயார்த்த அடையாளமாக ஒருவருக்கொருவர் கொடுக்கும்போது ...................... உம் ...................... உம் உமது தயவுடன் வாழ்வடைய ஆசீர்வதித்தருளும் எங்கள் ஆண்டவரின் நாமத்தில் ஆமென்

மோதிரம் அணிதல்

குரு : கடவுள் சந்நிதியிலும், இச்சபையார் சமூகத்திலும் .......... ஆகியோர் மோதிரம்மாற்றிக் கொண்டார்கள்.

ஜெபம் : தூய கடவுளே, நீரே தூய அன்பை அருள்கிறவர் திருமணத்துக்காக ஒருவரை ஒருவர் ஆயத்தஞ் செய்துகொள்ளும்படி வாக்குக் கொடுத்த ......................... ஆகிய இவ்விருவரையும் ஆசீர்வதியும், அவர்கள் நெஞ்சத்தின் வாஞ்சைகளும், ஜெபங்களும் நிறைவேற இரங்கும். அவர்கள் ஒன்றாகவும் உமது சமூகத்தை தேடவும் அருள் செய்யும். அவர்கள் கவலையில் ஒரு வரை ஒருவர் தாங்கி மகிழ்ச்சியில் பங்கு கொண்டு வாழ்க்கை முழுவதும் அன்பாய் இருக்கத்தக்கதாகத் தம்மைச் சீராக ஆயத்தப்படுத்தும் வண்ணம் அருள் பாராட்டும் என்று இயேசு கிறிஸ்துவின் பெயரால் வேண்டுகிறோம் பிதாவே ஆமென்.

*அருளுரை :*

*கீதம் அல்லது கீர்த்தனை*

ஆசீர்வதித்தல்: (இருவர் சிரங்களிலும் கரத்தைவைத்து)

கர்த்தர் தமது அளவில்லா இரக்கத்தால் உங்களை ஆசீர்வதித்து அவருடைய கிருபையையும் ஞானத்தையும் விளங்கிக் கொள்ள அருளுவாராக, தமது விசுவாசத்தில் வளரச்செய்து அறஞ்செய்ய ஏவுவாராக, அன்பும் அமைதியும், நிறைந்த வாழ்வை உங்களுக்குத் தருவாராக. பிதா குமாரன் தூய ஆவி ஆகிய கடவுளின் ஆசீர்வாதம் உங்களோடு என்றும் இருப்பதாக. ஆமென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org